விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 243 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 11, திங்கட்கிழமை 27.07.2015

## ஐவர் நீக்கத்துக்கு மைத்திரி எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 27
அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட ஐவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவிலிருந்து ஐந்து முக்கிய உறுப்பினர்களை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ராஜித சேனாரத்ன, ஹிருனிகா பிரேமசந்திர, அர்ஜுன

பக்கம் 24

## கெய்லுக்கு அறுவைச் சிகிச்சை

பக்கம் 27

# தென்னிலங்கையில் சமஷ்டிக்கு எதிர்ப்பு

## இலங்கைக்கு பொருந்தாது



கொழும்பு, ஜூலை 27
இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வுமுறை பொருந்தாது என்றும் அதன்மூலம் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. கேள்விநேரத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக்கொண்டு, சுயநிர்ணய

பக்கம் 24

## பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



கொழும்பு, ஜூலை 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களானவை இன நல்லுறவுக்கும், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாகும் – என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 24

## தேர்தல் கடமைகளில் 195,000 அரச ஊழியர்

கொழும்பு ஜூலை 27
தேர்தல் கடமைகளில் இம்முறை ஒரு இலட்சத்து 95 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.
வாக்குப் பதிவுகளின் போது ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஊழியர்களும், வாக்கு எண்ணும் பணிகளில் 75 ஆயிரம் பேரும் ஈடுபடவுள்ளனர். வாக்குகள் எண்ணும் பணிக்காக நாடுமுழுவதும் 12 ஆயிரத்து 21 மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பக்கம் 24

## நாட்டு நலனுக்காகவே ரணிலுடன் இணக்கம்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
நாடு துண்டாடப்படுவதை தடுப்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டோம். மஹிந்த ஆட்சியிலே நாட்டை துண்டாடும் பொறிமுறை கொண்டு வரப்பட்டது. – இவ்வாறு ஐக்கிய நல்லாட்சி தேசிய முன்னணி செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
நாட்டை துண்டாடும் 'பெகேஜ்'ஜை மஹிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ ஆகியோருடன் தயாரிக்க ஜீ.எல்.பீரிஸ் நடவடிக்கை எடுத்தார். இதனை வீதியில் இறங்கிப் போராடி நாமே தோற்கடித்தோம். இதன் மூலமே நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட்டது. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாட்டை துண்டாடும் நடவடிக்கையிலிருந்து நாட்டை பாதுகாக்கவே டிசெம்பர் 10 ஆம் திகதி நாம் மைத்திரிபால சிறிசேனவுடன் கை கோர்த்தோம். நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே பிரதமருடன் உடன்பாட்டை ஏற்படுத்தினோம். எதிர்காலத்திலும் ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம். –

பக்கம் 24

## மஹிந்தவை பிரதமராக மைத்திரி நியமிப்பாரா?

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.மு. சார்பாக பெரும்பான்மை ஆதரவை ஈட்டும் உறுப்பினரையே....

பக்கம் 17

## சர்வதேச தர நிர்ணயத்துடன் ஐ.நாவை எதிர்கொள்வோம்

### நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 27
சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைய ஐ.நா. விசாரணைக்கு தமது அரசு முகங்கொடுக்கும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
ஊழல், மோசடிகள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்களுக்கு வேட்புமனு வழங்கப்படக்கூடாதென ஊடகங்களும் சிவில் சமூக அமைப்பினரும் குரல்கொடுத்து வந்த நிலையில், இன்று ஐக்கிய மக்

பக்கம் 24

## பாலியல் வன்முறைகள் தொடர்பில் வருகிறது சர்வதேச ஆய்வறிக்கை

கொழும்பு, ஜூலை 27
இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான அறிக்கையொன்று இந்த வாரம் வெளியாகவுள்ளது.
'இலங்கையில் சித்திரவதைகளும் பாலியல் வன்முறைகளும்' என்ற தலைப்பில், இந்த அறிக்கையானது தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் நிபுணர் யஸ்மின் சூகா தலைமையிலான உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் என்ற அமைப்பால் வெளியிடப்படவுள்ளது.

பக்கம் 24

## போர்குற்ற நீதிமன்றிலிருந்து மஹிந்தவை காப்பாற்றினேன்

### *பிரதமர் ரணில் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 27
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதை தாமே தடுத்து நிறுத்தியதாகக் கூறியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ-மூனுடன் இணைந்து கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

விரிவு 25

## தேர்தல் விதிகளை மீறினால் குடியுரிமை பறிபோகக்கூடும்

### தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 27
தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீது வழக்குத் தொடரப்படும். அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமாயின் அவர்களது குடியுரிமை இரத்துச் செய்யப்படும்.– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 1981ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கத்தின்படி, தேர்தல் சட்டங்களை மீறும் வேட்பாளர்கள் 7 ஆண்டுகள் வரையில் குடியுரிமை இழக்க நேரி

பக்கம் 24

## ஐ.ம.சு.மு. தேர்தல் விஞ்ஞாபனம் நாளை

கொழும்பு, ஜூலை 27
எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட சு.க. முதன்மை

பக்கம் 24

## ஐவருக்கு எதிராக மஹிந்த நட்டஈடு கோரி வழக்காம்

### அவரது சட்டத்தரணிகள் கூறுகின்றனர்

கொழும்பு, ஜூலை 27
முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பரப்புரைகளை மேற்கொண்ட ஐவருக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரவுள்ளதாக மஹிந்த தரப்பு சட்டத்தரணிகள் குழு நேற்று அறிவித்துள்ளது.
ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸாநாயக்க, வெளியுறவுத்துறை அமைச்சர் மங்

பக்கம் 24

# மஹிந்த வென்றால் நாடு நாசமாகிவிடும்

## பிரதமர் ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 27

ராஜபக்ஷ யுகம் மீண்டும் இந்நாட்டுக்கு வருமானால் எமது நாடு இருண்டயுகத்துக்குள்ளேயேதள்ளப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி தெல்தோட்டை நகரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்ஷ வன்முறை ஆட்சிக்கு மீண்டும் நாம் துணை போவதா? எமது நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதா? எனக்கேட்கிறேன். அவ்வாறு மீண்டும் ராஜபக்ஷ யுகம் வருமாயின் வெள்ளைவான் வரும். நாடு அபாய பாதையில் செல்லும். இன, மத பேரினவாதங்கள் தலைதூக்கும்.

இவ்வாறானதொரு நிலைமை இனியும் வரக்கூடாது. அதற்கு இடமளிக்கவும் கூடாது. இவற்றைப் புரிந்து மக்கள் அவதானத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து கண்டி மாவட்டத்தில் குறைந்த பட்சம் 9 ஆசனங்களை யாவது பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வெற்றி ஐக்கிய தேசியக் கட்சியால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அமோக வெற்றியாகும். அதே வெற்றியே எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலிலும் கிடைக்கவுள்ளது. கண்டி நகருக்கான பல அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கத் திட்டம் வகுத்துள்ளோம்.

அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் அரசாங்கம், சீன அரசு ஏனைய பல நாடுகளின் வங்கிகளும் உதவி வழங்க முன்வந்துள்ளன. கொழும்பு நகரைப் போன்று கண்டி நகரும் அபிவிருத்தியடைவதோடு பேராதனை கங்கவெட்டகோரளை, தலாதுஓயா ஹேவாஹெட்ட பிரதேச நகர் உள்ளிட்ட பிரதேச வீதிகளும் அபிவிருத்தியடையும் எனவும் நான் கூறிக் கொள்கிறேன்.

கண்டி மாவட்டத்தின் பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதுடன் கிராமிய வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பிரதேச பாடசாலைகள், அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. தெல்தோட்டை பிரதேசத்திற்கான குடிதண்ணீர் திட்டமொன்றும், நில்லம்பை ஆற்று நீரிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. ஏனைய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.- என்றார். (ற)



# மாலைதீவுக்கு மைத்திரி நேற்றுப் பயணமானார்

கொழும்பு, ஜூலை 27

இரண்டுநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றுப் பிற்பகல் மாலைதீவு நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மாலைதீவின் 50ஆவது சுதந்திர தின பொன்விழாவின் சிறப்பு அதிதியாக கலந்துகொள்ளும் பொருட்டு அந்நாட்டு அரசினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஜனாதிபதி அங்கு சென்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியுடன், நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் சென்றுள்ளனர்.

சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கும் ஜனாதிபதி, அதனையடுத்து அந்நாட்டு அரசால் வழங்கப்படவுள்ள உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளின் ராஜதந்திர உறவானது, மாலைதீவு சுதந்திரம் பெற்ற வருடமான 1965 ஆம் ஆண்டு முதல் நீடித்து நிலைத்து வருகின்றது. (ற)

# செயற்கைமுறை சினைப்படுத்தல் மூலம் 551 நல்லினப் பசுக்கள்

## யாழ்.மாவட்டத்தில் முதல் அரையாண்டில்

அச்சுவேலி, ஜூலை 27

இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் முதல் அரையாண்டில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் 551 நல்லின பசுக்கள் பெறப்பட்டுள்ளன. செயற்கைமுறை சினைப்படுத்தல் மூலம் நல்லினப் பசுக்களைப் பெற்றுக் கொள்ளும் பசுவளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களுக்கு இளம் பசுக் கன்றுகளை விரைவில் உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் ஊக்குவிப்பு உதவு தொகையும் வழங்கப்படுகின்றது.

இளம் பசுக்களை விரைவில் உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் வரையுள்ள ஆறுமாத காலப் பகுதியில் 551 நல்லினப் பசுக்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுவாரியாகச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பெறப்பட்ட பசுக்கன்றுகளின் விவரம் வருமாறு :

சாவகச்சேரி பிரிவில் 171 பசுக்கள், நல்லூர் பிரிவில் 76 பசுக்கள், கோப்பாய் பிரிவில் 71 பசுக்கள், உடுவில் பிரிவில் 48 பசுக்கள், தெல்லிப்பழை பிரிவில் 48 பசுக்கள், கரவெட்டி பிரிவில் 34 பசுக்கள், சண்டிலிப்பாய் பிரிவில் 27 பசுக்கள், யாழ்ப்பாணப் பிரிவில் 24 பசுக்கள், பருத்தித்துறைப் பிரிவில் 22 பசுக்கள், வட்டுக்கோட்டைப் பிரிவில் 19 பசுக்கள், காரைநகர் பிரிவில் 5 பசுக்கள், மருதங்கேணி பிரிவில் 5 பசுக்கள், வேலணை ஊர்காவற்றுறைப் பிரிவுகளில் தலா ஒவ்வொன்றும் நெடுந்தீவுப் பிரிவில் இல்லை.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பெறப்பட்ட இளம் பசுக்களை உரிய முறையில் பராமரிப்பதற்கு வளர்ச்சி நிலையிலுள்ள பசுக்கன்றுகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அத்துடன் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களின் கண்காணிப்பும் வைத்திய பரிசோதனை வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது. பசுக்கன்று பராமரிப்புக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு கால் நடை வைத்திய அதிகாரி யின் பரிந்துரைக்கு அமைய நான்கு கட்டங்களாக வழங்கப்படுகின்றது.

இளம் பசுக்களை விரைவில் உருவாக்கும் செயற்றிட்டம் தொடர்பாக யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தகவல் தெரிவித்த தாவது:-

பால் மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் நல்லின பால் மாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உகந்த இலகுவான வழிமுறை செயற்கைமுறைச் சினைப்படுத்தலாகும். மரபுவழி நடைமுறைகளை தவிர்த்து செயற்கை முறையில் சினைப்படுத்தலை மேற்கொள்ளுவது செலவு குறைவானதும் நம்பிக்கையானதும் ஆகும். செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பெறப்படும் பசுக்களுக்கு பராமரிப்புக்கான ஊக்குவிப்பு உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகம் மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு குறித்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.- என்றார். (ற-11)




*யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் ஆண்டு நிறைவு மலர் வெளியீடு, இறுவட்டு வெளியீடு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கலந்துகொண்ட பிரமுகர்கள் நிறுவனத்தின் செயற்பாடு குறித்து தமது திருப்தியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.(ற-10,ரி)*

# வடக்கிலுள்ள படை முகாம்கள் எவற்றையும் அகற்றவில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

வடக்கில் இருந்து படை முகாம்கள் எதுவும் அகற்றப்படவில்லை என்றும், நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலையெடுப்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்றும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா உறுதி அளித்துள்ளார் .

கண்டியில் கடந்த திங்கட்கிழமை மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டின் பாதுகாப்புத் தான் சூடான விவகாரமாக மாறியிருக்கிறது. நாட்டின் பாதுகாப்பு முறைக்கு ஆபத்தை ஏற்படுத்தும், எதனையும் மேற்கொள்வதற்கு இராணுவம் இடமளிக்காது.

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் படையினர் குறைக்கப்பட்டுள்ளதாகவும் சில தரப்பினரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எந்த உண்மையும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை படையினர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட சில பணிகளை மாத்திரம் நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

படையினரின் வடக்கு கிழக்கு பங்களிப்பு தொடர்பாக த ஹிந்து பத்திரிகை வினவியதற்கே இராணுவத் தலைமையகம் இவ்வாறு பதிலளித்துள்ளது.

வடக்கில் மிதிவெடிகளை அகற்றுதல், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்தல் மற்றும் மக்களை மீள்குடியேற்றுதல் போன்ற பணிகளுக்கு படையினா ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

அத்துடன் அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக முக்கிய சந்தர்ப்பங்களில் துருப்புக்களை வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு அனுப்புவது தொடர்பாக எப்போதும் கவனம் செலுத்துவதாக அது மேலும் தெரிவித்துள்ளது. (ற-ரி)

# தேர்தல் விதி மீறல் 175 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 27

தேர்தல் சட்டங்களை மீறிய 175 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தேர்தல் சட்டங்களை மீறிய 120 சம்பவங்கள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகபேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

பொதுத்தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்ட சுமார் 33 வாகனங்களை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# தேர்தலின் பின்னர் சு.கவில் மாற்றங்கள்

*அமைச்சர் அர்ஜுன கூறுகின்றார்*



கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிக்கு பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பெரியளவான மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தான் உட்பட்ட குழுவினரை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

தான் உட்பட்ட குழுவினரை நீக்குவதற்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பொது செயலாளர் நீக்கப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது தமிழரை தனித்து செல்ல வைக்கும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி முறைமையில் தீர்வு காண்பதற்கு தயாராக இருப்பதாக நாங்கள் சொல்கின்றோம். ஆனால் நீங்கள் (அரசு) ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று மீண்டும் சொல்லுவது, மீண்டும் தமிழ் மக்களை தனித்துப் போங்கள் என்ற முடிவுக்கு தள்ளுவதாகத்தான் முடியும். இதனை சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமசந்திரன் தெரிவித்தார்.

மருதனார்மடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில், இனப் பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படை குறித்து தெரி வித்துள்ளோம். வடக்கு – கிழக்கு இணைந்ததமிழர்தாயகத்தில்,சமஷ்டி முறையிலான தீர்வு, தமிழ் மக்களுக்குரித்தான சுயநிர்ணய அடிப்படையில், இறைமையின் அடிப்படையில் இருக்க வேண்டும். மேலும், இங்கிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்என்பதையும்தேர்தல்விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம். இராணுவம் முழுமையாக வெளியேறுவதன் மூலமே எமது மக்களின் மீள்குடியமர்வு சாத்தியமாகும். 60 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இராணுவம் இன்னமும் வடக்கில் தன்னகத்தே வைத்திருக்கின்றது. இதற்கு மேலாக, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வ தற்காக இரண்டு மாவட்டங்களி லும் சிங்கள அரச அதிபர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இடமாற்றுமாறு கோரி கடந்த 6 மாத காலமாக கேட்டு வருகின் றோம். ஆனால் நல்லாட்சியில் அது நடக்கவில்லை.

இந்த ஆட்சி மாற்றத்தில் சில நல்ல காரியங்கள் நடந்துள்ளன்தான். ஜனநாயகச் சூழல் உருவாகியுள்ளது. அந்தச் சூழல் தமிழ் மக்களுக்கானதா? சிங்கள மக்களுக்கானதா ? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. வடக்கில் ஒன்றரை லட்சம் இராணுவம் நிற்கின்றது. இப்படியான நிலையில் இங்கு ஜனநாயக சூழல் நிலவுவதாக யாராவது சொல்ல முடியுமா? இராணுவத்தின் ஆதிக்கத்திற்குள் தான் நாங்கள் இருக்கின்றோம்.

இதனைத் தாண்டி எங்கள் மக்களின் மீள்குடியமர்வுக்காக தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்டுக் கொடுப்பின்றி போராடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கே நாங்கள் ஆணை கோருகின்றோம். அதற்கு ஆணை வழங்கிய நீங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்படுகின்றதா , வழி தவறுகின்றதா என்பதைப் பார்த்து கேள்வி கேட்க வேண்டும்.

அபிவிருத்தி பற்றி விஜயகலா மகேஸ்வரன், டக்ளஸ், அங்கஜன் ஆகியோர் பேசுகின்றனர். அவர்கள் யாராவது தமிழ் மக்களின் உரிமை பற்றி, தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி பேசினார்களா ? யாருமே இதனைப் பற்றி பேசுவதற்கு தயாரில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும்தான் இதனைப் பற்றி பேசுவதற்கு இருக்கின்றது. அதனால் அந்த பேரம் பேசும் சக்தியான – கூட்டமைப்பை வலுப்படுத்துமாறு கோருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது அவர்களின் இராணுவ பலத்துடன், கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியைப் பெற்றிருந்தது. இன்று அவர்கள் இல்லாத சூழ்நிலையில், வலுவான பிரதிநிதிகளாக கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும்.

இங்கு இரு தேசம் ஒரு நாடு என்ற கோஷம் வேறு சில கட்சிகளால் முன்வைக்கப்படுகின்றது. அதனை முன்வைப்பவர்கள் அதனை எப்படி அடையப் போகின்றோம் ? அது சாத்தியமா என்பதை மக்களுக்குச் சொல்லாமல், வெறும் வார்த்தைகளால் மாத்திரம் வேடிக்கை காட்டுகின்றனர் – என்றார். (ற–5)

# தாதியர் விடுதி அமைக்க அமைச்சரவை அனுமதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்களுக்கு அமைக்கவெனத் தீர்மானிக்கப்பட்ட தங்குமிடவிடுதியை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனினும் அது எப்பொழுது அமைக்கப்படும் என்பது பற்றிய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் தற்போதுள்ள சமையலறையின் மேற்புறமாக இரண்டு மாடிகள் கொண்டதாக விடுதி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த வருடம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டபோதும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை என்று தாதியர்கள் தெரிவித்தனர்.

விடுதி அமைப்பதற்கென 111 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விடுதி அமைப்பதற்கான அனுமதி கடந்த வாரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்வதற்கான கேள்விகோரல் விடுக்கப்பட வேண்டும். அதனை மத்திய சுகாதார அமைச்சின் திணைக்கள அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

# ஓய்வூதிய மீளாய்வு கொடுப்பனவு ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர்

அச்சுவேலி, ஜூலை 27

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான ஓய்வூதிய மீளாய்வு மூலம் கிடைக்கக் கூடிய கொடுப்பனவுகள் ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளன. ஓய்வூதிய மீளாய்வுக்கான படிவம் மற்றும் ஆவணங்களை இதுவரை கையளிக்கத் தவறியவர்கள் உடனடியாகத் தாம் ஓய்வூதியம் பெறும் பிரதேச செயலக ஓய்வூதிய பிரிவுடன் தொடர்பு கொண்டு கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய மீளாய்வு வேலைகள் முன்னுரிமை அடிப்படையில் பிரதேச செயலக ஓய்வூதிய பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓய்வூதியர்களுக்கான மீளாய்வு கொடுப்பனவுகள் இந்த வருடம் ஜூலை முதலாம் திகதியிலிருந்து வழங்கப்படவுள்ளது. மீளாய்வு கொடுப்பனவுகளை ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதியர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

ஓய்வூதியர்கள் ஓய்வூதிய மீளாய்வு தொடர்பான பி.டி. படிவம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி, ஓய்வூதியம் பெறுபவர்களின் இடது வலது இரண்டு கைகளின் பெருவிரல் அடையாளம் என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.


குறித்த படிவம் மற்றும் ஆவணங்களை உரிய வேளையில் சமர்ப்பிக்கத் தவறுவோரின் கொடுப்பனவுகளை வழங்குவதிலும் தாமதம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–11)

## நல்லூர் திருவிழா ஏற்பாடு பற்றிய கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழா அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதுபற்றிய முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் 19 ஆம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 14 ஆம் திகதி வரைக்கும் திருவிழா இடம்பெறவுள்ளது. அது பற்றிய கூட்டமே இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற–4)




சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்துகொண்டு விநாயகர் அருள் வேண்டினர்.(ற–9)

# தேர்தல் விதிமீறல்: 538 முறைப்பாடுகள்

## ‘கபே’ அமைப்பு கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 27

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் விதிமுறை மீறல்கள் வன்முறைகள் தொடர்பில் இதுவரை 538 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 515 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

வடக்கில் 23 முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன. கிழக்கில் 24 முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன. 9 பேர் அடித்துக் காயப்படுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். தேர்தலுக்கு அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பில் 13 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சட்டவிரோத தேர்தல் பரப்புரை தொடர்பில் 260 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் கபே தெரிவித்துள்ளது. (ற–4)

## இளைஞனை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.நகரைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.நகர் கந்தப்பசேகரம் வீதியைச் சேர்ந்த தம்பிராசா திருவளவன் (வயது 19) என்பவரே கடந்த 23 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். தம்பிராசா என்பவர் கடந்த மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற–4)

# கடும் பாதுகாப்புடன் வாக்காளர் அட்டை அச்சிடும் பணி

## கொழும்பு மாவட்டத்துக்கான வாக்காளர் அட்டையே மிக நீளம்

கொழும்பு, ஜூலை 27

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் நடைபெறுகின்றன என்றும் அவற்றை அச்சிடுவதற்கெனத் தருவிக்கப்பட்டுள்ள விசேட தாள்களுக்கு மூன்று கோடியே அறுபது லட்சத்துக்கும் மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ளது என்றும் அரச அச்சகத் தலைவரான காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு 90 மெற்றிக் தொன் வரையிலான தாள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் இடம்பெறுவதோடு அவற்றை அச்சிடும் பிரிவில் இருந்து பொதி செய்யும் பிரிவு வரையில் உள்ள சகல பிரிவுகளிலும் சீ.சீ.ரீ.வீ கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இம்முறை மிக நீளமான வாக்காளர் அட்டை கொழும்பு மாவட்டத்துக்கானதாகும் எனவும் அந்த வாக்காளர் அட்டை 25 அங்குலங்கள் வரையில் நீளமானதாக இருக்குமெனவும் தெரிவித்துள்ள அவர் ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வாக்காளர் அட்டையை 30 அங்குல நீளத்துக்கு அச்சிடுவதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும், தற்போது மட்டக்களப்புக்கான வாக்காளர் அட்டையை 15 அங்குல நீளத்துக்கு இரு பிரிவுகளாக 10 அங்குல அகலத்தைக் கொண்டதாக அச்சிடுவதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ற–22)

# உ.கிழங்கு செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை

## யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களம் மேற்கொள்கின்றது

அச்சுவேலி, ஜூலை 27

யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கை இந்த வருடம் வலிகாமம் தவிர்ந்த ஏனைய பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. புதிதாக உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு மற்றும் உரப்பசளை வழங் கப்படுவதோடு தொடர் கண்காணிப்பு ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இது வரை காலமும் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கை வலிகாமத்தில் வலி.கிழக்கு, வலி.வடக்கு, வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த வகையில் கடந்த வருடம் 87 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த அளவு இந்த வருடம் மேலும் அதிகரிக்கப்படவிருப்பதோடு, புதிய இடங்களாக வடமராட்சியில் கரவெட்டி, திக்கம், பொலிகண்டி, கரணவாய், வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி, செம்பியன்பற்று, உடுத்துறை, அம்பன், தென்மராட்சியில் கைதடி, நாவற்குழி, மிருசுவில், மீசாலை, தீவகத்தில் வேலணை, ஊர்காவற்றுறை, புளியங்கூடல் உள்ளிட்ட பகுதிகளிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த பயிர்ச் செய்கை நல்ல விளைச்சலை கொடுத்திருப்பதோடு நோய்த்தாக்கம் இன்றி பயிர்களின் வளர்ச்சியும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பலர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு வசதி செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் வகையில் மேலதிக உதவிகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை புதிய பிரதேசங்களில் மேற்கொள்வது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களப் பணிப்பாளர் பாலசுந்தரம் தெரிவிக்கையில்,

உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையின் அளவை இந்த வருடம் அதிகரிப்பதற்கும், புதிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை லாபகரமானது. விவசாயி கள் உரிய காலப்பகுதிக்கு முன்னர் அறுவடை செய்வதால் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகள் அறிவுறுத்தல் களை பின்பற்ற மறுப்பதால் வருமான இழப்புக்கு உள்ளாகின்றனர்.– என்றார். (ற–11)



# சர்வதேச சாரணர் ஜம்போரிக்கு 126 இலங்கைச் சாரணர்கள்

## இன்று யப்பான் புறப்படுகின்றனர்

வலி.வடக்கு, ஜூலை 27

சர்வதேச சாரணர் ஜம்போரியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து 126 சாரணர்கள் மற்றும் தலைமைச் சாரணர்கள் இன்று திங்கட்கிழமை யப்பான் நாட்டுக்குப் பயணமாகவுள்ளனர்.

இந்த அணியில் எழுபத்தியிரண்டு சாரணர்களும் மற்றும் ஐம்பத்தி நான்கு சாரணத் தலைவர்களும் கலந்துகொண்டுள்ளனர். இலங்கையில் இருந்து செல்லும் சாரணர்களை பிரதம சாரணனும் இலங்கை ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன வாழ்த்தியுள்ளதுடன் அணியின் தலைவரிடம் தேசியக் கொடியையும் சம்பிரதாய பூர்வமாக ஜனா திபதி மாளிகையில் வைத்து கையளித்துள்ளார்.

நான்கு ஆண்டுகளுக்க ஒரு முறை நடை பெறும் சர்வதேச சாரணர்களின் ஜம்போரி இம்முறை யப்பான் நாட்டில் உள்ள யமஹோசி என்னும் இடத்தில் எதிர்வரும் 28ஆம் திகதியில் இருந்து பத்து நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

நூற்றி எழுபத்தியிரண்டு நாடுகளில் இருந்து கலந்து கொள்ளும் 35 ஆயிரம் சாரணர்கள் அங்கு ஒன்றுகூடவுள்ளனர். (ற–9)

# மடு ஆவணித் திருவிழா தொடர்பில் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 27

மன்னார் மடு அன்னையின் ஆவணித் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது.

எதிர் வரும் ஆவணி மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலிக்கான நவநாள் திருப்பலிகள் தொடர்ச்சியாக இடம் பெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தருவர் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மடுத்திருத்தலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி முன் ஆயத்தங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

குடி நீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு உட்பட அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை ,மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்,பிரதேசச் செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், வைத்திய சாலை அதிகாரிகள் உட்பட திணைக்கள தலைவர்களும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ற–56)

# பொதுநோக்கு மண்டபம் ஆனந்தபுரத்தில் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் கட்டப்பட்ட பொதுநோக்கு மண்டப திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை ஆனந்தபுரம் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ராஜதாஸ் தலைமையில் நடைபெற்றது.

அன்னை இல்ல மழலைகளின் பாண்ட் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் திறந்து வைத்தார். பொது நோக்குமண்டபத்தில் தமிழர் பண்பாட்டு அமைவாக பால் காய்ச்சப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், கரைச்சி பிரதேச செயலாளர், நாகேஸ்வரன், யு.என் ஹபிரட்



பொறியியலாளர் யுகனீதன், மத குருமார், ஆனந்தபுரம் கிராம சேவகர், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற–21)

# ஆலயம் உடைத்து பொருள்கள் கொள்ளை

தென்மராட்சி, ஜூலை 27

ஆலயத்தினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்ததுடன் அங்கிருந்த உண்டியலையும் உடைத்து அதனுள் காணப்பட்ட பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரணி, தாவளை இயற்றாலை கல்வளைப் பிள்ளையார் கோவிலில் நடந்துள்ளது.

ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஒலி பெருக்கிச் சாதனங்கள், திருவாசி மற்றும் பொருள்களுடன் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களையும் ஆலய முகப்பில் வைக்கப்பட்டிருந்த உண்டியல்ல உடைத்து அதனுள் காணப்பட்ட பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் கொடி காமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–9)

# புலம்பெயர் உறவுகளின் உதவி இல்லையேல் யாழ்ப்பாணம் சோமாலியாவாக மாறியிருக்கும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

புலம்பெயர்வாழ் உறவுகள் இல்லையேல் யாழ்ப்பாணம் இன்னுமொரு சோமாலியாவாக மாறியிருக்கும். உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அவர்கள் தாய் மண்ணை மறக்கவில்லை. அது தான் யாழ். மண்ணின் மகிமை. – இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழாவும் வளர்மதி விளையாட்டரங்கின் திறப்பு விழாவும் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த விளையாட்டு அரங்கின் பெயர்வளர்மதி. அதாவது இதமான குளிர்மையான ஒளியைக் கொடுக்கும் சந்திரனாகவே இந்த அமைப்பும் அரங்கமும் அமைந்துள்ளன. இன்னும் சற்று உற்றுப் பார்த்தால் மதிஅறிவைக் குறிப்பிடுகின்றது. தென்மராட்சியில் இவ்வளவு பெருமை கொண்ட இந்த அரங்கம் அமைந்துள்ளது. சரசாலையை பிறப்பிடமாகக் கொண்ட நானும் இந்த தென் மராட்சியின் சொந்தக்காரன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

1980 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நம்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளினால் நம் உறவுகள் சிதறடிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி செய்த குள்ளநரித்தனத்தால் நமது உரிமைப் போராட்டமும் மௌனிக்கப்பட வைத்தது.

எங்கே நம்மினம் மற்றும் [illegible] தாக அழிந்துவிடுமோ என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம். இந்த நிலையில் எமது புலம்பெயர் உறவுகள் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கை கொடுத்து உதவினர். அவர்கள் உதவாமல் இருந்திருந்தால், யாழ்ப்பாணம் ஒரு சோமாலியாவாகவே மாறி இருக்கும்.

திறந்து வைக்கப்பட்ட வளர்மதி விளையாட்டரங்கு யாழ்.மாவட்டத்திலேயே சகல வசதிகளுடனும் கூடிய ஒரே ஒரு விளையாட்டரங்காக அமைந்துள்ளது. வேறு எவருடைய தயவையும் எதிர்பாராமல் இந்த மண்ணில் பிறந்த சொந்தங்களாலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

இது மட்டுவில் தெற்கு வாழ் மக்களின் ஒற்றுமை, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, ஆர்வம், விவேகம், நிர்வாகத் திறன் என்பவற்றைப் பறை சாற்றுகின்றது.

இங்கே சாதனை படைத்த விளையாட்டு வீரர்களால் குவித்து வைக்கப்பட்டுள்ள வெற்றிக்கேடயங்கள் எல்லோரையும் பிரமிப்படையச் செய்கின்றன.

அதேபோன்று கல்வி மேம்பாட்டுக்கும் அத்திபாரம் இடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

விளையாட்டுத் துறையைப் போன்றே நீங்கள் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் மேன்மேலும் வெற்றியளிக்கும் என வாழ்த்துகிறேன். அதேவேளை வளர்மதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்ல உதயன் குழுமத்தின் தலைவர் என்ற வகையிலும் அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளேன் என்பதை உறுதியிட்டு கூறுகின்றேன் – என்றார்.

## உறுதிமிக்க நாட்டை ஜே.வி.பி. கட்டியெழுப்பும்

கொழும்பு, ஜூலை 27

உறுதிமிக்க நாடு, ஜன நாயகச் சூழல், நீதியை நிலைநாட்டும் நீதித் துறை, செயற்றிறன் மிக்க அரச சேவை, நாட்டிலுள்ள ஒவ் வொரு குடும்பத்துக்கும் சொந்த வீடு, இர சாயனக் கலவையற்ற உணவு, மாணவர்களின் கல்விச் சுமை யைப் பொறுப்பேற்கும் அரசு, சிறந்த சமூக பொருளாதாரத்தினூடாக உலக சந்தையில் இலங்கைக்கு ஒரு பங்கு ஆகியவற்றைக் கொண்ட உலகில் கௌரவமிக்க நாடாக இலங்கையை உருவாக்குவோம். –இவ்வாறு ஜே.வி.பி. தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் கடந்தவாரம் இடம்பெற்ற ஜே.வி.பியின் தேர்தல் விஞ் ஞாபன வெளியீட்டு நிகழ்வில் உரை யாற்றியபோதே, அந்தக் கட்சியின் தலைவரான அநுரகுமார திஸா நாயக்க மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இந்நிகழ்வில், கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, வேட்பாளர்களான விஜித ஹேரத், லால்காந்த, சந்திரசேகரன் உள் ளிட்ட 25 மாவட்டங்களினதும் தேர்தல் குழுத் தலைவர்களும், சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நாடு முழுவதிலு மிருந்து பெருந்திரளான ஜே.வி.பி. ஆதரவாளர்களும் பங்கேற்றனர்.

ஜே.வி.பியின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விட யங்கள் வருமாறு:–

**உறுதிமிக்க நாடு**

67 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்த வர்களால் இன்னும் ஸ்திரத்தன் மையை ஏற்படுத்த முடியவில்லை. ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லிக் கொண் டிருக்கின்றனர். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. இவ்வாறான நிலை யில், ஜே.வி.பி. அரசின் ஊடாக மட்டுமே ஸ்திரத் தன்மையை ஏற் படுத்த முடியும்.

**ஜனநாயகச் சூழல்**

ஜனநாயக சூழல் நாட்டில் இல்லை. மக்களுக்கு முழுமையான சுதந்தி ரம் இல்லை. ஊடக சுதந்திரம் இல்லை. ஊடக சுதந்திரம் இருந் தால்தான் ஒரு நாட்டின் ஜனநாய கம் பாதுகாக்கப்படும். ஆனால், ஊடகவியலாளர்கள் தாம் விரும்பி யவற்றை எழுதமுடியவில்லை. அரசுக்கு எதிராக எதையும் எழுதி னால், அவர்கள் அச்சுறுத்தப்படு கின்றனர். இந்த நிலைமையை மாற்றவேண்டும்.

**நீதியை நிலைநாட்டும் நீதித்துறை**

இலங்கையில் 50 லட்சம் குடும் பங்கள் இருக்கின்றன. ஆனால், ஆண்டொன்றுக்கு 10 லட்சம் வழக் குகள் பதிவுசெய்யப்படுகின் றன. ஐந்தில் ஒரு குடும்பத்துக்கு வழக் குத் தொடரப்படுகிறது. இன்று நீதி மன்றம் செல்வதை மக்கள் தவிர்த்து வருகின்றனர். நீதித்துறையை நாடு வதால், மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை எதிர் கொள்கின்றனர். எனவே, சட்டத்தை சரியாக நிலை நாட்டும் நீதித் துறையை உருவாக்க வேண்டும்.

**செயற்றிறன் மிக்க அரச சேவை**

சிறந்த அரச சேவை வழங்கப்பட் டால்தான், மக்கள் சிறப்பாக வாழமுடி யும். மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கத்தான் அரசு இருக்கின்றது. ஆனால், அரச நிறுவனங்களில் மக்களுக்குச் சிறந்த சேவை வழங் கப்படுவதில்லை. இந்நிலை மாற வேண்டும்.– என ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. (த–சி)

## மைத்திரி – ரணில் உறவால் உறுதியானது ஜனநாயகம்



கொழும்பு, ஜூலை 27

ஜனவரி 8 ஆம் திகதி ஜனநாயகப் புரட்சியினூடாக உதயமான மைத் திரி– ரணில் உறவினூடாக நல் லாட்சியும் ஜனநாயகமும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதன்காரண மாக நிதி முகாமைத்துவம் சரிவர நிர்வகிக்கப்படுகின்றது. – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'கோல்டன் கீ' வங்கியில் இடம் பெற் றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வ தற்கு ஓய்வுபெற்ற நீதியரசர் தலை மையிலான குழுவொன்றை நிய மிக்கவுள்ளேன். இதனூடாக குறித்த மோசடிகளுடன் தொடர்புடைய குற் றவாளிகளுக்கு சட்ட ரீதியாக தண் டனை வழங்க நட வடிக்கை எடுப் பேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற 'கோல்டன் கீ' வங்கி வைப்பாளர்களுக்கு உரிய நிதித்தொகையை வழங்கி வைக் கும் நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

கோல்டன் கீ வங்கி நிதி ரீதியாக பின் தள்ளப்பட்டதன் காரணமாக குறித்த வங்கியில் வைப்பிலிட்ட வைப்பா ளர்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பல்வேறு சவால் களுக்கு முகங்கொடுத்தனர். இதன் காரணமாக அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் மனதளவில் பலர் பாதிக் கப்பட்டனர். இதனால் பலர் தமது உயிரைப் பணயம் வைத்தனர். நாட் டில் பொருளாதார துறையிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில் நாட்டின் வங்கிகள் தொடர்பிலான நிதி செயற்பாடுகள் தொடர்பில் அரசே பொறுப்புக் கூற வேண்டும். நாட்டின் வங்கிகள் ரீதி யான நிதிப் பிரச்சினைகள் தொடர் பில் அரசால் ஒருபோதும் தட்டிக் கழித்துச் செயற்பட முடியாது.

அதேபோன்று அரசை மீறி எந்த வொரு தனியார் நிறுவனத்தினா லும் செயற்பட முடியாது. இது சர்வ தேச நாடுகளிலும் பரவலாக நடைமுறையாக்கப்பட்டு வரும் செயற்பாடாகும். அரச நிதித் துறை சார்ந்த முகாமைத்துவம் சரிவர கடைப்பிடிக்கப்படாமையின் கார ணமாகவே கோல்டன் கீ போன்ற சர்ச்சைகள் ஏற்படுகின்றன.

முன்னைய ஆட்சியின்போது நிதி முகாமைத்துவம் சரிவரக் கடைப் பிடிக்கப்படாது போனாலும், ஜன வரி 8 ஆம் திகதி மக்களால் ஏற்படுத் தப்பட்ட மாற்றத்தின் பின்னர் நிதி முகாமைத்துவம் சரிவரப் பேணப் பட்டது.

மைத்திரி– ரணில்உறவின்காரணமாக நாட்டில் நல்லாட்சியும் ஜனநாய கமும் உறுதிப்படுத்தப்பட்டதன் விளை வாக நாட்டின் நிதித் துறை முகா மைத்துவமும் சரிவர நிர்வகிக்கப் படுகின்றது. இந்த ஆட்சிக் காலத்தின் போது ஊழல் மோசடிகள் முழு மை யாக இல்லாமற் செய்யப் பட்டுள்ளது. ஆகவே கோல்டன் கீ வைப்பாளர் களுக்கு உரித்தான சொத்துக்கள் கட்டம் கட்டமாக வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார். (ந)

## சமூகக் கடமையாக அரசியலைக் கருதுக

### நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கூட்டணி வேட்பாளர் ஏ.ஏ. அப்துர் ரஹ்மான் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 27

இடர்கள் அழிவுகள் நிகழ்கின்ற பொழுது அதிலிருந்து மக்களை மீட்பதும் உதவுவதும் சமூகக் கடமை எனக்கருதி உணர்வு பூர்வ மாக ஒன்று திரண்டு முன்வரு வதுபோல் அரசியலையும் சமூகக் கடமையாக் கருதி அதில் விருப் பத்துடன் ஈடுபடுவதற்கு இளைஞர் கள் முன்வர வேண்டும்.

– இவ் வாறு முஸ்லிம் காங்கிரஸ் – நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கூட்டணி வேட்பாளர் ஏ.ஏ. அப்துர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

இடர்களும் அழிவுகளும் ஏற்படு கின்றபொழுது பாதிக்கப்பட்டவர் களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவ வேண்டுமென்ற சமூகக் கடமை நமக்குள் பரிணமித்து அந்த வேட்கையில் நாம் ஓடோடி உதவு கின்றோம்.

அதைப் போல் அவலுத்துக்குள் ளாகியிருக்கும் நமது அரசியலி லிருந்து மக்களை விடுவித்து முழுக்க முழுக்க மக்களுக்குப் பிரயோசனமான அரசியலைச் செய் வதற்கு இளைஞர்கள் முன் வர வேண்டும். இது சமூகக் கடமை என் பதையும் உணர வேண்டும்.

நமது சமூகத்துக்கு மத்தியில் அறி முகமாகியுள்ள, அரசியல்வாதிகள் அதனைச் சாக்கடையாக்கியுள்ள னர். அரசியல்வாதிகள் இலஞ்சம், ஊழல், ஏமாற்று, மோசடி, கொலை, கொள்ளை, மது மற்றும் மார்க்க விரோத செயல்கள் நிறைந்த ஒரு துறையாக அரசியலை மாற்றி யுள்ளனர். இந்த நிலைமாறி அரசி யலை மக்கள் விரும்பும் துறை யாக மாற்ற வேண்டும்.

கடந்த பத்து வருடங்களாக நல் லாட்சியை நோக்கிய பயணத்தில் எமது உழைப்புக்கு கிடைத்த வெற் றியே புதிய ஜனாதிபதியைக் கொண்டு வந்தமையாகும்.

அடுத்ததாக தற்பொழுது நாடாளு மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங் கிரஸுடன் இணைந்து நாம் தேர் தலில் போட்டியிடுகின்றோம்.

இது நல் லாட்சிப் பயணத்தில் எமக்கு கிடைக்க விருக்கும் பெரிய திருப்பு முனையாக இருக்கும் எனக் கரு துகின்றோம்.

இந்த நல்லாட்சிப் பயணத்தில் இளைஞர்கள் சமூக உணர்வோடு பங்கெடுக்க வேண் டும்.– என்றார். (ந–10)

## தேர்தலின் பின்னர் சு.கட்சியின் கூட்டத்தைக் கூட்ட கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

எதிர்வரும் நாடாளுமன்ற தேர் தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டு மாறு சுதந்திரக் கட்சியின் ஒரு சாரார் ஜனாதிபதியிடம் வேண்டு கோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் நிலையில், விரை வில் மத்திய குழுவைக் கூட்டி அவ் வாறான உறுப்பினர்களைக் கட்சியி லிருந்து நீக்குவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. இந்நிலையில், தேர் தல் முடிவடையும் வரை மத்திய குழுவைக் கூட்ட வேண்டாம் என ஒரு சாரார் கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**சு.கவின் மத்திய குழுவை கூட்டுவதற்காக இடைக் காலத் தடையுத்தரவு எதிர்வரும் 29ஆம் திகதிவரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில். கட்சியின் ஒரு சாரர் மத்திய குழுவை கூட்டுமாறு கோரி வருகின்றனர்.**

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு வைக் கூட்டுவதற்காக விடுக்கப் பட்ட இடைக் காலத் தடையுத்தரவு எதிர்வரும் 29ஆம் திகதிவரை நீடிக் கும் நிலையில், மத்திய குழுவைக் கூட்டுமாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரிய தர்ஷன யாப்பா மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் ஜனாதிபதியை வலி யுறுத்தி வருகின்றனர். (ந)




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர் நலன் சிறக்கப் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். நிலுவைப் பணம் கிடைக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** குடும்பப் பிரச்னையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். திடீர் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனையால் முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். ஆதாய நோக்கில் வெளியூர் பயணம் செல்ல நேரிடும். பிள்ளைகளின் செயற்பாடு மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** ஆர்வம் நிறைந்த மனதுடன் செயல்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கான நன்மை சேரும். தொழில், வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். புத்திரரின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**சிங்கம்:** மன உறுதியுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் சீரான வளர்ச்சி பெறும். குடும்பத்தினருக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். தொழிலில் பணவரவு அதிகரிக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புப் பணி செய்வீர்கள். உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** பணியில் குளறுபடி ஏற்படலாம். விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். காலமுறை உணவுப் பழக்கம் உடல்நலனைப் பாதுகாக்க உதவும்.


**விருச்சிகம்:** தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய திட்டம் தீட்டுவீர்கள். விடாமுயற்சியால் வருமானம் கூடும். இயன்ற அளவில் தான, தர்மம் செய்வீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டுச் சீதனம் கிடைக்கும்.

**தனுசு:** சமயோசிதமாகச் செயற்படுவீர்கள். எதிரித் தொல்லை நீங்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். நண்பர்கள் உதவி செய்வர்.

**மகரம்:** பொது இடத்தில் விவாதிப்பதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் காண்பீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை ஏற்படும். பணியாளர் பாதுகாப்பு நடைமுறையில் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். சேமிப்பு உயரும். நீண்ட நாள் பிரச்னை நல்ல முடிவுக்கு வரும். மனைவியால் பெருமை உண்டாகும்.



கிரேட் பிரிட்டனில் உள்ள வால்ஷ் நகரில் உள்ள நியூ குவாய் கடற்கரையில் உணவுக்காக நடனம் ஆடிய கடற்காகத்தின் செயல் பார்ப்பவர்களை வியப்படையச் செய்துள்ளது.

## இப்படியும் ஒரு தாத்தா

உதட்டுப் பிளவுடன் பிறந்த குழந்தையொன்றைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சீனாவில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிறந்து இரண்டே நாள்களான குழந்தைக்கு மாரடைப்பை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஊசியை ஏற்றினார் என அந்தக் குழந்தையின் தாத்தா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த ஊசிக்கான பொட்டாசியம் க்ளோரைட் இரசாயனத்தை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் மருத்துவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் சீனாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பரவலான பிறப்புக் குறைபாடான உதட்டுப் பிளவு, சுலபமாகச் சரிசெய்யக்கூடிய ஒரு பிரச்சினை என்பது குறிப்பிடத்தக்கது.

## குரங்கு கையில பூ மாலை



விதவிதமான மனநிலை கொண்ட நான்கு பேரிடம் சிக்கித் தவிக்கும் ஒரு பெண்ணின் நிலைமையை மையப்படுத்தி உருவாகி வரும் புதிய படம் குரங்கு கையில பூ மாலை. இந்தப் படத்தில் நாயகர்களாக ஜெகதீஷ், கௌதம் கிருஷ்ணா இருவரும் நடித்துள்ளனர்.

இவர்களுடன் குரங்கு கையில் கிடைத்த பூமாலையாய் சிக்கித் தவிக்கும் பெண்ணாக கோலிசோடா படத்தின் நாயகி சாந்தினி நடித்துள்ளார். மேலும், பல்வேறு படங்களில் குத்துப்பாடலுக்கு நடனமாடிய நிஷா இந்தப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்தப் படத்தில் நான்கு கதாநாயகர்கள், இரண்டு கதாநாயகிகள் இருந்தாலும் படத்தில் தனியாக எந்தவொரு டூயட் பாடலும், குத்துப் பாடலும் கிடையாது. கதையோடு பயணித்தபடியே பாடல்களும் இடம்பெற்றுள்ளன. படத்தில் கவர்ச்சி இல்லை.

கவர்ச்சி நடிகையான நிஷாவைக் கூட போர்த்திக் கொண்டு நடிக்கும் அளவுக்கு குடும்பப் பாங்கான கதை. இன்னும் சொல்லப் போனால், நிஷாவின் நடிப்பு இந்தப் படத்தில் பிரமாதமாக அமைந்துள்ளது, என்கிறார் இயக்குனர் கிருஷ்ணன்.

## நகைச் சுவையை விரும்பும் நயன்


பிரபுதேவாவுடனான காதல் முறிவுக்குப் பின்னர் நயன்தாரா மிகவும் சீரியசான நடிகையாகி விட்டார். கமரா முன்பு நடிக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் சீரியசாகவே அவர் அமர்ந்திருப்பார்.

அவரது முகபாவனைகளை கவனித்த இயக்குனர்கள் அதன் பிறகு சீரியசான கதைகளுடன் நயன்தாராவை முற்றுகையிட்டனர். அப்போதைக்கு அது அவருக்கு ரொம்பப் பொருத்தமாக இருந்தது. இந்த நிலையில், மாஸ், மாயா திரைப்படங்களை அடுத்து தனி ஒருவன், நானும் ரௌடிதான், காஷ்மோரா, திருநாள் ஆகிய திரைப்படங்களில் நடிக்கும் நயன், ஜனரஞ்சகமான கதைகளில் நடிப்பதிலும் ஆர்வமாக இருக்கிறாராம்.

நானும் ரௌடிதான், திருநாள் ஆகிய திரைப்படங்களில் சீரியசான கதைகள் என்றாலும், சில காமடிக் காட்சிகளிலும் நயன்தாரா நடித்திருக்கிறாராம். அதனால் அடுத்தபடியாக இன்னும் காமெடியான கதைகளில் நடிப்பதிலும் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளதாம். அதனால், தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குநர்களிடம் காமெடியை அதிகமாக வைக்குமாறு தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுப்பதாகத் தகவல்.



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

## சுரேஷ் க.பிரேமச்சந்திரன்

வீடு X 4

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க


வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்
4 இற்கும் வாக்களியுங்கள்

## பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ் தேர்தல் மாவட்டம்

வீடு X 7

அர்ப்பணிப்பு! அனுபவம்!! பண்பு!!!



7

எங்களில் ஒருவரான
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
அவர்களை ஆதரிப்போம்.


(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம்
அவர்களின் புதல்வன்)

- வடமராட்சி மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

மக்களின் கூட்டுப்பிரார்த்தனை எதிலும் வெற்றியளிக்கும்.



"நற்பண்புகளும், இறை நினைப்பும், மந்திரம் கூறுதலும்,
கூட்டுப்பிரார்த்தனையும் நரகத்தைகூட சொர்க்கமாக்கி விடும்."

நாளை 28.07.2015 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள கைலாசப்பிள்ளையார் ஆலயத்தில் மக்களின் நல்வாழ்வு வேண்டி விசேட அபிஷேக ஆராதனை வழிபாடும் அன்னதான நிகழ்வும் நடைபெற இருக்கிறது.

அனைத்து மக்களையும் ஆதரவாளர்களையும்
இப்பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



வெற்றிலை X 1

### அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்
மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னையா புஸ்பராசா**

தோற்றம்
1951.11.25

மறைவு
2014.07.27

**ஆயிரம் உறவுகள் அவனியிலே**
**இருந்தாலும் உங்கள் உறவிற்கு ஈடாகுமா?**
**ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டுகள்**
**கழிந்தாலும் உங்கள் நினைவுகள்**
**மறைந்திடுமா??**

உப்புக்குள வீதி,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.
077 077 8259

(63406)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சுழிபுரத்தைப்பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்
**வினாசித்தம்பி ஆச்சிமுத்து**



பிறப்பு
1932.07.22

இறப்பு
2014.07.08

அம்மா வேர் அறுந்த ஆலமரமாய் நாம் இன்று வேதனையுடன் விழி நீர்
சொரிகின்றோம்.இருவிழி சிவந்து இதயம் வெடித்து
விழி நீர் சொரிய தவிக்கின்றோமம்மா... பகல் நிலவாய் இருந்து நீங்கள்
எமக்கு
பல நன்மைகள் செய்து விட்டு பயணம் செல்ல என்ன தான்
அவசரமோ....
இன்னோர் ஜென்மம் உண்டானால் இவ்வுலகில்
நாம் மறுபடியும் உங்களுக்கு பிள்ளையாய் பிறக்க வேண்டுமம்மா....
ஆண்டு ஒன்று தான் ஆகின்றது
ஆனாலும் அழியாது எம் பாசம் அழியாது எம் சோகம் உம் ஆத்மா
சாந்தியடைய
கண்ணீர் பூக்களாலே அஞ்சலி செய்கின்றோம்.

**கற்பக்குளை**
**உடுவில் வடக்கு, சுன்னாகம்.**

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

அச்சுவேலியூர்
**திருமதி கலாவதி தெட்சணாமூர்த்தி**
**(கலாநிதி)**



பிறப்பு
11
.
08
.
1960

இறப்பு
07
.
08
.
2014

திதி: ஏகாதசி

என்றென்றும் என்னுடனே நீரிருப்பீர் என்றிருந்தேன்
எங்கே சென்று விட்டீர் தேடியே நான் அலைகிறேன்
என்னவளே, என்னுயிரே எப்போது உன்னருகில்
எனை அழைப்பீர் என்று நானும் ஏங்கியே தவிக்கின்றேன்.

**நிரந்தர முகவரி**
**உலவிற்குல பிள்ளையார் கோவிலடி,**
**அச்சுவேலி தெற்கு.**
**த.முகவரி**
**விக்னேஸ்வரா வாசிகசாலை வீதி,**
**அச்சுவேலி தெற்கு.**

**பிரிவால் துயருறும்**
**அன்புக் கணவர்.**

## கர்த்தருக்குள் நித்திரையடைந்து 40 ஆண்டுகள்

அமரர்
**Dr.அல்பிரட் தங்கராஜா துரையப்பா Sir**



தோற்றம்
15.07.1926

மறைவு
27.07.1975

எங்களுடைய சட்டத்தரணியும் முன்னாள் மாநகரமுதல்வரும், முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாண பிரதம அமைப்பாளருமான அவருடைய 40 ஆண்டு நினைவையொட்டி விசேட வழிபாடுகளும் பூசைகளும் நடைபெறுகின்றன.



**எட்டடுக்கு மாளிகையில்**
**ஏற்றி வைத்த என் தலைவர்**
**விட்டு விட்டு சென்றாரே**
**இன்று எல்லோரும்**
**தகப்பனில்லா பிள்ளைகளாக**
**இருக்கின்றோம்.**

இந்த உலகத்தையும் எங்களையும் ஆளும் இயேசு கிறிஸ்து சாமியை நாங்கள் நேசிக்க
நேசிக்க சாமியாகிய இயேசுநாதர் மிகவும் மிகவும் ஆசீர்வதிப்பார்.

Srilanka Goverment Retired officer
Srilanka Justic of peace, Party Member
K.A.Vykunthanathan Family
Vadamarachie, Srilanka.

Late. Mr&Mrs Alfred Thuraiyappa
Dr.Parameswary
Douter - Mrs - Eessia

## புதன்கிழமைகளில் ஒடியல் கூழ்

யாழ்ப்பாணம், ஜூலை 27
பனை அபிவிருத்தி சபையால் தயாரித்து வழங்கப்படும் ஒடியல் கூழை வாரத்தில் புதன்கிழமையும் விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் எஸ். கோகுலதாசன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் தெரிவித்த தாவது:–
தற்போது இந்த ஒடியல் கூழ் வாரத்தில் சனிக்கிழமை மட்டுமே நுகர்வோரின் வசதி கருதி விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
தற்போது புதன்கிழமை நாள்களிலும் அரச, தனியார் ஊழியர்களின் வசதி கருதி இந்த ஒடியல் கூழைத் தயாரித்து விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சபையால் தற்போது தயாரித்து விநியோகிக்கப்படும் சைவ, அசைவ ஒடியல் கூழுக்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. – என்றார் அவர். (ற–17)

## த.தே.கூவின் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டமொன்று இன்று மாலை 6.30 மணிக்கு கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலைக்கு அருகில் நடைபெறவுள்ளது. அதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (ற–50)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை27
கொழும்புத்துறை மேற்கு பழனியாண்டவர் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை உற்சவத்தின் இறுதி நாளாகும் அன்று காலையில் விசேட சங்காபிஷேகம், தீர்த்தம் இடம் பெற்று நண்பகல்மகேஸ்வர பூஜை நடை பெறும்.
தொடர்ந்து மாலை திருக்கல்யாண உற்சவம்இடம்பெற்றுசுவாமி வீதிவலம் வருவார்.
திருவிழாக் கிரியைகள்பிரதம குரு சிவஸ்ரீ தி.சங்கரராஜக் குருக்கள்தலைமையில்இடம் பெற்று வருகின்றன.(17)

## 22ஆம் ஆண்டு நினைவலைகள் | 18ஆம் ஆண்டு நினைவலைகள் | 16ஆம் மாத நினைவலைகள்



மலர்வு
13 . 02 . 1929

உதிர்வு
20 . 12 . 1993


**இளையதம்பி கந்தசாமி**
திதி: ஸப்தமி



மலர்வு
19 . 11 . 1961

உதிர்வு
30 . 07 . 1997

**செல்வி மைதிலி கந்தசாமி**
திதி: ஏகாதசி



மலர்வு
15 . 01 . 1930

உதிர்வு
09 . 03 . 2014

**திருமதி கந்தசாமி மங்கையர்க்கரசி**
திதி: நவமி

**நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள் அழியவில்லை**
**கனவுகள் கலையவில்லை கண்ணீர் இன்னும் காயவில்லை**
**ஆண்டுகள் பலசென்றாலும் ஆறவில்லை எங்கள் துயரம்**
**மீண்டும் உங்கள் வரவுகாண நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்**

ஞானபண்டித பாடசாலை அருகில்
கொக்குவில் மேற்கு,

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# வைரவிழா சிறப்பிதழ்

## 28,29-07-2015




### வட மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி



ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் அறுபதாவது ஆண்டை எட்டும் போது அக் கல்லூரியானது பலவித தடைக்கற்களை வெட்டி அகற்றும். அவ்வாறு அகற்றி பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் மிளிரும் கல்லூரியை இந் நாளில் வாழ்த்துகின்றேன்.

அ. பத்திநாதன்

### வட மாகாண கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நாட்டின் அசாதாரண சூழலால் அதிகம் கல்லூரி பாதிக் கப்பட்டாலும் சென்ற ஆண்டுகளில் க.பொ.த உ/தரங்களில் நல்ல பெறுபேறுகளை பாடசாலை பெற்று வளர்ந்து வரு கிறது. அதனால் வைரவிழா காணுகின்ற இந் நாளில்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

செ.உதயகுமார்

### முல்லை வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



அடிக்குமேல் அடி வாங்கி துடி துடித்து நின்றாலும் குடியதுக்கு வைரமாய் மத்திய கல்லூரி விளங்க வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

திருமதி உ. முனீஸ்வரன்

### லண்டன் பழைய மாணவர் சங்கம் வாழ்த்து

நாம் கற்ற கல்லூரி நாளை வளமுடன் வாழ நாமும் என்றும் உழைப்போம். அதற்கு பொன் விழாவிற்கு கட்டி சிதைந்த மண்டபத்தை மீண்டும் அழகுபடுத்தி தரவுள்ளோம்.

### பிரான்ஸ் பழையமாணவர் சங்கம் வாழ்த்து

வெள்ளிவிழா, பொன்விழா கண்ட எம் தாய் இன்று வைரவிழா காண்கிறாள். நாளை பவளவிழா நூற்றாண்டு விழா கண்டு பூ புன்னகையுடன் வாழ வாழ்த்துகிறோம்.

### மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வைரவிழா 2015.07.28, 29

15.01.1955ஆம் ஆண்டு ஆரம்பமான பாடசாலை இன்று 1(AB) தரமாக உயர்ந்து 1500 வரையான மாணவர்களையும் 70இற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு வியாபித்து நிற்கிறது; 1987 இடம் பெயர்வு 2009ஆம் ஆண்டு இடப்பெயர்வுகளை கண்டு இடிபாடுகள் அடைந்தாலும் பலரதுதியாகத்தால் அரசு - அரச சார்பற்ற நிறுவன உதவிகளால் புலம்பெயர் உறவுகளால் மீண்டும் எம் மத்திய கல்லூரி புத்துயிர் பெற்று வைரவிழா காண்கிறது. தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை கற்றல் கற்பித்தல் கட்டுமானங்களை கொண்ட கல்லூரியின் உயர்தரத்தில்

✱ கலைப்பிரிவு ✱ வணிகப்பிரிவு ✱ கணிதப்பிரிவு ✱ உயிரியல்பிரிவு ✱ தொழில் நுட்பப் பிரிவு என்று பல்வகை துறை களுக்கும் சாதனைபதித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற்தர சாதனைக்கல்லூரியாக மிளிர்ந்து வருகின்றது. கல்விப்புலத்தில் இணைபாட விதானச் செயற்பாடுகளும் பாராட்டப்பட வேண்டியன. விவாதம் வினாடிவினா போட்டியில் விளையாட்டுக்களில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியமை கல்லூரிக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். இந்த வெற்றிக்களிப்புடன் 60 ஆண்டு நிறைவாக மாபெரும் இரண்டு நாள் விழா புதுக்குடியிருப்பு நகரை அழகு செய் கிறது. சமூகம் பாடசாலை புலம் பெயர் உறவுகள் களத்தில் நிற்கின்றன முல்லைத்தீவு கல்விவலயம்யாவற்றையும் நெறிப்படுத்து கின்றது.

✱ பள்ளிக்கூடம் ✱ பூர்வீகம் என்ற ஆவணப் படங்கள் வெளியீடு நடைபெறவுள்ளது. புதுவைரம் பூர்வீக நோக்கில் புதுக்குடியிருப்பு என்ற வரலாற்று நூல்கள் வைரவிழா அடையாளங்களாக படைக்கப்படுகின்றன. கலை விழா இசைத்தட்டு வெளியீட்டு பரிசளிப்பு விழாவுடன் இவ் இரு விழாக்களிலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

சி. சுப்பிரமணியேஸ்வரன்
அதிபர்,



### செயலாளர் வட மாகாண கல்வி விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு



இப்பாடசாலை,கல்வி மற்றும் இணைபாடவிதான செயற் பாடுகளில் மேன்மேலும் உயர்ந்து பல கல்வி மான்களை,உயர் அதி காரிகளை நற் பிரசைகளை உருவாக்கி மாகாண தேசியமட்டத்தில் பல சாதனை படைக்க இந்நாளில் வாழ்த்துகிறேன்.

இ. இரவீந்திரன்

### முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மாணவர் சமூகம் நல்வழியில் சென்று உயரியதும் உன்னத மானதுமான இலட்சியங்களின் சிகரங்களை எட்டிப் பிடித்து அதில் வெற்றிக்கனி பறிப்பதற்கு அவாவுற்றிருக்கும் புது/மத்திய கல்லூரியை இந்நாளில் வாழ்த்துகிறேன்.

திருமதி ரூபவதி கேதீஸ்வரன்

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி



புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் கல்வி ஊற்றாக திகழும் மத்திய கல்லூரியின் கல்விச் செயற் பாடுகள் வைரவிழா காணும் இந்நாளில் மேலும் வளர வாழ்த்து கிறேன்.

இ.பிரதாபன்

### சுவிஸ் பழைய மாணவர் சங்கம் வாழ்த்துச் செய்தி

எம்மை வளமுடன் வாழவைத்த பெற்ற தாய்க்கு நிகரான மத்திய கல்லூரியின் வைர விழா நாளை வாழ்த்து வதில் மகிழ்வு அடைகிறோம். மாண வருக்கு வழங்கும் பரிசும் பாராட்டுத்தான் அவர்களை உயர்த்தும் என்பதால் வைரவிழாவின் பரிசளிப்பு நிகழ்வை நாம் ஏற்கிறோம் நாளைய விடிவுக்காய்.




பாடசாலை அபிவிருத்திச்சபை
மத்திய கல்லூரி,
மு/ புதுக்குடியிருப்பு




பழைய மாணவர் சங்கம்,
மத்திய கல்லூரி,
மு/ புதுக்குடியிருப்பு


# கொடிகாமம்

# அருள்மிகு ஸ்ரீமகா லாவண்யா காளி அம்பாள் ஆலய


# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ் - 27.07.2015

வெள்ளோட்டம் இன்று (27.07.2015) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை உள்ள சுபவேளையில் இடம்பெறும்.





## ஆசியுரை



யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமம் பதியில் அருளாட்சி புரியும் திருவருள்மிகு லாவண்யா காளிகாம்பிகைக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்

ஆலய மஹோற்சவம் பஞ்சகிருத்தியமாகிய (ஐந்தொழிலை) குறிப்பதாகும். அதிலே அழித்தல் என்னும் தொழிலை தேர்த்திருவிழா உணர்த்தி நிற்கும் பஞ்சகிருத்திய காரணராகிய சிவபெருமானே தேரிலே ஆரோகணித்து திரிபுர அசுரர்களை அழித்த வரலாறே தேர்த்திருவிழாவின் சிறப்பை உணர்த்தி நிற்கும்.

தேரிலே அம்பிகை ஆரோகணித்து வரும் பொழுது நாம் வடம் பிடித்து இழுப்பதாலே எம்முடைய வினைகள் தொலைந்து விடுவதாகவும் அன்னையை தேரிலே தரிசிப்பதால் அவளுடைய திருக்கண் பார்வை எம்மீது படுவதனால் எம்முடைய வினைகள் எரிந்து சாம்பராகி விடுகின்றது. என்பது ஐதீகமாகும் அந்தவகையில் லாவண்யா காளிகா அம்பாளுக்கு அழகான சித்திரத்தேர் அமைக்கின்ற பெரும் பணியைச் செய்த ஆலய தர்மகர்த்தா துரைராசா தவமணி குடும்பத்தினருக்கும் அன்னையின் அடியவர்களுக்கும் என்றும் அன்னையின் திருவருள் கிடைப்பதாக அத்தோடு இப் பணியை தமது பணியாக எண்ணி பேருதவி புரிந்த அன்பர் குலவீரசிங்கம் அவர்களுக்கும் காளிகாதேவியின் திருவருள் கிட்ட பிரார்த்தித்து தேரினை அழகுற அமைத்த ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் அவர்களுக்கும் அவரது சிற்பாலய குழுவினருக்கும் திருவருள் கிடைப்பதாக. தேர் வெள்ளோட்டம் சிறப்பாக அமைய காளிகா தேவியின் திருப்பாதம் பணிந்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக்குருக்கள்

## கொடிகாமம் லாவண்யா காளி அம்பாள் ஆலய வரலாறு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் காக்கையன் குளத்துக்கு அருகில் மேற்கே செல்லும் பாதையில் 100 மீற்றர் தூரத்தில் கலைநயம் பொருந்திய அழகான ஆலயத்தில் அம்பாள் அருளாட்சி புரிகின்றாள்.

இவ்விடத்தில் அருளாட்சி செய்கின்ற காளிகா தேவியானவள் தற்போது தர்மகர்த்தாவாக இருக்கின்ற துரைராசா தவமணி என்பவருடைய தந்தையார் கந்தப்பு என்பவராலும் அவரது மாமனாராகிய கிருஸ்ணபிள்ளை என்பவராலும் அவர்களது பரம்பரையினராலும் வழிபாடு செய்யப்பட்ட குல தெய்வமாகும்.

தற்போதைய தர்மகர்த்தாவானவர் ஆலய அமைவிடமாகிய இவ்விடத்தில் 1980ஆம் ஆண்டளவில் சிறிய கொட்டில் ஆலயமாக அமைத்து வழிபாடு செய்து வந்தார்கள் . அன்னையின் திருவருளால் 1980 ஆம் ஆண்டு மேலை நாடாகிய ஜேர்மனி நாட்டில் சென்று வேலை பார்த்து அங்கு குடியுரிமையும் பெற்று வாழ்ந்து வரும் நாளில் அங்கேயே அன்னையானவள் சென்று அவர்களுக்குக் கனவிலே தோன்றி நான் கொட்டிலில் இருக்கின்றேன் எனக்கு அழகான ஆலயம் அமைத்துத் தாருங்கள் என்று கேட்டாளாம். அதற்கு நாம் விரும்புகின்றோம் ஆனால் ஆலயம் அமைக்கின்ற வசதியை கொடுத்தால் நாம் செய்கின்றோம் என்று சொன்னார்களாம். அதற்கு அன்னைதான் உங்களை வாழவைக்கிறேன் என்று சொன்னாளாம்.

அன்றில் இருந்து அவர்கள் தொழிலில் நல்ல வருமானத்தை காளிகா தேவிகொடுக்கத் தொடங்க ஆலயம் அமைக்க எண்ணினார்கள். திரும்பவும் அன்னை கனவில் தோன்றி தற்போதைய ஆலய முன்றிலில் நிற்கும் நாவல் மரமும் அத்தோடு அழகான கலைநயம் பொருந்திய ஆலயத்தையும் காட்டினாளாம். அதிலிருந்து அன்னையின் திருப்பணியேதம்பணியெனக் கொண்டு பல கோடி ரூபா செலவில் இந்தியாவில் தலைசிறந்த சிற்பக் கலைஞர்களை வரவழைத்து ஆலயத்திலே தூண்களை மாடங்கள் மகர தோரணங்கள் கர்ண குண்ட க சாலைகள் சாக்த சாஸ்திர தத்துவத்துக்கு அமைய 108 சாக்த வடிவங்கள் உயிரோட்டத்துடனும் அழகுடனும் அற்புதமான வகையில் வடிவமைக்கப் பெற்று அழகான வர்ணங்கள் தீட்டப்பட்டும் மந்திர சிம்மாசனத்தில் அம்பிகைக்கு 18.09.2011 வெள்ளிக்கிழமை அச்சுவினி நட்சத்திரத்தில் மகா கும்பாபிசேகம் நடைபெற்றது. தொடர்ந்து ஆண்டு தோறும் ஆனி மாதம் பௌர்ணமியை தீர்த்தமாக கொண்டு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. மாதந்தோறும் அமாவாசையில் திருவிழாவும் அன்னதானமும் நடைபெறுகின்றது. அன்னையின் திருவருள் பொலிவதாக .

து.தவமணி
தொகுப்பு
சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக்குருக்கள்


விளம்பர அனுசரணை

ஸ்ரீ அம்பாள் சிங்கரில் வேக்ஸ் சொப்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
உரிமையாளர் : தனேஸ்
077 695 9530, 077 189 1439

மெகா சிற்றி சென்ரர்
கண்டி வீதி, கொடிகாமம்
077 8076 136

சிலகஜன் பிறிண்டேர்ஸ்
சந்தை வீதி, கொடிகாமம்.
077 768 2131, 021 205 0303

காளி அம்பாள் பூக்கற்கள் விற்பனை நிலையம்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
உரிமையாளர் த.சிவதாசன்
077 431 3980

துரை மோட்டோர்ஸ்
கண்டி வீதி, கொடிகாமம்
உரிமையாளர்: க.இராசதுரை (துரை)
077 940 2550

வீ.ரீ. மொடேன்ஸ் மார்ட்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
K.K.V 077 315 1454
V.T. MOTERN MART

காயத்திரி ரெக்ஸ்
இல. 277, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
GAYATHIRI TEX
No: 277, Point Pedro Road, Kodikamam.

ரூபி நகை மாளிகை
கண்டி வீதி, கொடிகாமம்
077 617 3046, 077 241 8473
021 205 0378

ஸ்ரீ வெற்றிலைக் கடை
சந்தை உட்புறம், கொடிகாமம்.
கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
077 278 4730, 077 844 9736


கண்ணகை சேர்விஸ் நிலையம்
உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம்

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
077 437 8950
உரிமையாளர் - சந்திரமோகன்

சாந்தன் எலற்றீசியன்
Shanthan Electrician
உரிமையாளர்: இ.சாந்தரூபன்
வீட்டு மின்னிணைப்பு உபகரணங்கள் திருத்துதல், Dish இணைத்தல், Dish card செயற்படுத்தல், நீர்க்குழாய் பொருத்துதல், மோட்டார்,தொலைக்காட்சி திருத்தல் போன்ற அனைத்து வேலைகளும் செய்து கொடுக்கப்படும்
சந்தை வீதி,கொடிகாமம்.
077 844 8024, 021 205 0305


தேர்த்திருவிழா
ஆடித்திங்கள் 14 ஆம் நாள்
30.07.2015
வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்

# ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவேன்



ஐந்து அம்ச செயல்முறைகளின் கீழ்
நாடு முழுவதும் 45 பொருளாதார அபிவிருத்தி
உயர்வலயங்களை ஸ்தாபிப்பேன்.
அத்துடன் புதிய வெளிநாட்டு சந்தைகளை
வெற்றிகொண்டும், GSP+ இனை மீண்டும்
பெற்றுக்கொண்டும், வெவ்வேறு துறைகளில்
பாரிய முதலீடுகளை மேற்கொண்டும்,
5 வருடங்களில் இளம் சமுதாயத்தினருக்காக
10 இலட்சம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவேன்.

100 நாட்களில் இவ்வளவு மாற்றம்
60 மாதங்களில் புதிய தேசம்

ஐக்கிய தேசியக் கட்சி

உங்களுக்காக புதியதொரு நாடு

# சிரியாவில் தொடரும் துயரம் 1,787 பேர் கொன்று குவிப்பு

பல்மைரா,ஜூலை 27
சிரியாவின் பல்மைரா நகரில் இதுவரை ஆயிரத்து 787 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதில் சிறுவர்கள் 74 பேரும், பெண்கள் 86 பேரும் அடங்குவர். இவர்கள் அனைவரும் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டும், தலை வெட்டப்பட்டும், உயரமான கட்டடப்பகுதியில் இருந்து தூக்கி வீசப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.
இதேவேளை – ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட இருவரை, ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் பெரிய கட்டடத்தில் உயரத்திலிருந்து கீழே தள்ளிக் கொலை செய்துள்ளனர்.
இஸ்லாமிய முறைப்படி ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது குற்றம் என்பதால், ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களில் வசிப்பவர்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது தெரிய வந்தால் அவர்களை கொலை செய்வதை வழக்கமாக மேற்கொண்டு வருகின்றனர்.





அதன்படி சிரியாவின் பல்மைரா நகரில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட இருவரை ஒரு பெரிய கட்டடத்தில் உயரத்திலிருந்து கீழே தள்ளியுள்ளனர்.இந்தச் சம்பவத்தை கட்டடத்தின் கீழே நின்று கொண்டு பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் வேடிக்கை பார்த்துள்ளனர். (ஐ)



## ஒரே மரத்தில் 40 விதமான பழங்கள்

வொஷிங்டன், ஜூலை 27
அமெரிக்காவில் நியூயோர்க் அருகே ஒரே மரத்தில் திராட்சை, பீச், செர்ரி உள்ளிட்ட 40 விதமான பழ வகைகள் காய்க்கின்றன. இந்த அதிசய மரத்தை விவசாயத்துறை பேராசிரியர் சாம் வன் அகென் என்பவர் உருவாக்கியுள்ளார்.
விவசாயத்தில் நாட்டம் உடைய இவர், திராட்சை, செர்ரி உள்ளிட்ட 40 விதமான பழ மரங்களை ஒட்டு முறையில் ஒரே மரமாக உருவாக்கினார். கடந்த 2008 ஆம் ஆண்டு நியூயோர்க் மாகாண விவசாய பரிசோதனைப் பண்ணையில் இதை உருவாக்கினார். தற்போது அவை பூவாகி, காயாகி தற்போது பழங்களாக பழுத்துக் குலுங்குகின்றன. (ஐ)

## அதிகரிக்கும் அகதிகளின் சாவு

பாரிஸ்,ஜூலை 27
பிரான்ஸில் இருந்து பிரிட்டனுக்குக் கள்ளத்தனமாக செல்லும் அகதிகள் தொடர்ந்து சாவடைந்து வருவதையடுத்து பிரான்ஸ் நாடு பாதுகாப்பைப் பலப்படுத்த முடிவு செய்துள்ளது.
பிரான்ஸ் நாட்டில் இருந்து பிரிட்டனுக்கு கலைஸ் பகுதி வழியாக பல அகதிகள் கள்ளத்தனமாகச் செல்கின்றனர். – இவ்வாறு செல்பவர்களில் பலர் அந்த முயற்சியின் போது சாவடைகின்றனர். இந்த நிலையில் அண்மையில் பெண் ஒருவர் வீதி விபத்தில் உயிரிழந்தார். மேலும் ஆண் ஒருவர் ரயிலின் கூரையில் இறந்துகிடந்தார் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் அகதிகள் கள்ளத்தனமாகச் செல்வதை தடுக்கும் வகையில் பாதுகாப்பை பலப் படுத்த பிரான்ஸ், முடிவு செய்துள்ளது. மேலும் யூரோ டனல் நிறுவனமும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக 13 மில்லியன் யூரோவை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ஐ)

## பாரிஸ் நகரத்தில் குவியப் போகும் சடலங்கள்

### ஐ.எஸ். தீவிரவாதி தகவல்

பாரிஸ்,ஜூலை 27
பாரிஸ் தெருக்களில் சடலங்களாகக் குவிக்கப் போகிறோம் என்று பிரான்ஸைச் சேர்ந்த தீவிரவாதி கூறுவது போன்ற ஒரு வீடியோவை ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு வெளியிட்டுள்ளது.
இந்த வீடியோவில் தீவிரவாதி ஒருவர் தனது முகத்தை துணியால் மறைத்துக் கொண்டிருக்கிறார். அவர் சிரியாவைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவரை மலை உச்சியில் முழங்காலிட வைத்து அவரின் தலையில் துப்பாக்கியால் சுடுகிறார்.
பின்னர் அவரை மலை உச்சியில் இருந்து கீழே தள்ளிவிடுகிறார். பின்னர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் தெருக்களில் சடலங்களைக் குவிக்கப் போகிறோம் என்று கூறுகிறார்.
கடந்த மாதம் பிரான்ஸின் கிழக்குப் பகுதியில் உள்ள கேஸ் நிறுவனத்துக்குள் புகுந்த தீவிரவாதி அங்கு ஒருவரை கொலை செய்து அவரின் தலையை வேலியில் தொங்கவிட்டார்.
அதேபோன்று கடந்த ஜனவரி மாதம் பாரிஸில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந்த நிலையில்; தற்போது வெளியாகியுள்ள வீடியோ பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ சிரியாவில் உள்ள ஹமா மாகாணத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)






டுபாயில் அபுதாபி அருகே அல் கர்பியா பகுதியின் லிவாவில் வருடம்தோறும், லிசா பேரீச்சம்பழம் திருவிழா எனும் புகழ் பெற்ற நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இந்த வருடத்துக்கான விழா கடந்த வாரம் ஆரம்பமாகி நடைபெற்ற வருகின்றது. சுமார் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளனர். (ஐ)

## தீவிரவாதிகளை ஒடுக்க கென்யாவுக்கு அமெ. உதவி

நைரோபி, ஜூலை 27
அமெரிக்க ஜனாதிபதியான பின்னர் ஒபாமா முதன் முறையாக தனது தந்தை பிறந்த நாடான கென்யாவுக்குச் சென்றுள்ளார். தலைநகர் நைரோபி சென்ற அவரை விமான நிலையத்தில் அவரது குடும்பத்தினரும், அந்த நாட்டின் ஜனாதிபதி உகுரு கென்யாடாவும் சிறப்பான வர வேற்பு அளித்தனர்.
அதன் பின்னர் கென்யா ஜனாதிபதி உகுரு கென்யாட்டாவைச் சந்தித்துப் பேசினார். அப்போது சோமாலியாவில் அல்கொய்தா உதவியுடன் செயற்படும் அல்–பாப் தீவிரவாதிகளின் அட்டகாசம் குறித்து அவர் ஒபாமாவிடம் எடுத்துரைத்தார்.
அவர்களின் தாக்குதல்கள் குறித்தும் கவலை தெரிவித்தார். அதை உன்னிப்பாககேட்ட ஒபாமாஅல்–பாப் தீவிரவாதிகளை ஒடுக்க சோமாலியாவுடன் இணைந்து கென்யாவுக்கு உதவ அமெரிக்கா தயாராக இருப்பதாக உறுதி அளித்தார்.



தீவிரவாதிகளை ஒடுக்க கென்யாவுக்கு அமெரிக்கா தேவையான பணஉதவி மற்றும் இராணுவ வீரர்களுக்கான பயிற்சியை அளிப்பதாகவும் கூறினார். அதற்கு கென்யா ஜனாதிபதி கென்யட்டா வரவேற்புத் தெரிவித்தார்.
மேலும், கென்யாவுடன் வர்த்தக உறவை அமெரிக்கா மேம்படுத்த விரும்புவதாகவும் ஒபாமா தெரிவித்தார். (ஐ)

## பாகிஸ்தானில் கனமழை

### 46 பேர் சாவு



இஸ்லாமாபாத்,ஜூலை 27
பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால்அங்குகடந்தசிலவாரங்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால்பலவீதிகள்,பாலங்கள் என்பன மழை வெள்ளத்தில்அடித்துச்செல்லப் பட்டுள்ளன. கைபர் பக்துங்வா மாகாணம் சித்ரால் மாவட்டத்தில் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்த 24 பேரின் உடல்களை நேற்று முன்தினம் மீட்பு படையினர் மீட்டனர்.
இதுவரை பாகிஸ்தானில் பெய்த மழையால் 46 பேர் உயிரிழந் துள்ளனர். அந்த மாவட்டத்தில் உள்ள மோர் காஹ பகுதி தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 7 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிப் பிற பகுதிகள் துண்டிக்கப் பட்டுள்ளன. அங்கு உணவு மற்றும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளது. (ஐ)



அமெரிக்காவின் ஜனாதிபதியான பின்னர், பராக் ஒபாமா முதன் முறையாக தனது தந்தையின் சொந்த நாடான கென்யாவுக்குச் சென்றுள்ளார். அங்கு, கென்ய ஜனாதிபதி உஹரு கென்யாட்டா மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் அவரை வரவேற்று அழைத்துச் சென்றனர். ஒபாமாவின் சகோதரி ஆவ்மா ஒபாமாவை ஆரத்தழுவி வரவேற்றார்.

## இங்கிலாந்து மகாராணியின் வருமானம் அதிகரிப்பு

லண்டன், ஜூலை 27

இங்கிலாந்து நாட்டின் மகாராணியான இரண்டாம் எலிசபெத், லண்டனில் உள்ள பக்கிங்காம் அரண்மனையில் வாழ்ந்து வருகிறார். ராஜ வம்சத்துக்குச் சொந்தமான எஸ்டேட்களை இங்கிலாந்து அரசு நிர்வகித்து வருகிறது.

கிரவுன் தோட்டம் என்றழைக்கப்படும் இந்த தோட்டத்தின் சொத்துக்கள், பரம்பரை பரம்பரையாக அரச வம்சத்தின் வாரிசுகளுக்குச் சொந்தமானதாக இருக்கும். அவற்றை யாரும் விற்கவோ, வாங்கவோ முடியாது.



சுமார் 3 லட்சத்து 56 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் மற்றும் காடுகள் என 7.6 பில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள சொத்துகளும், சுமார் 4 பில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள லண்டன் நகரின் முக்கிய கட்டடங்களும் அடங்கிய கிரவுன் தோட்டத்தின் மொத்த மதிப்பு சுமார் 12 பில்லியன் பவுண்டுகளுக்கும் அதிகமானதா கும்.

இந்த தோட்டத்தின் சொத்துக்களின் மூலம் இங்கிலாந்து அரசுக்கு வருடந்தோறும் சுமார் 240 மில்லியன் பவுண்டுகள் வருமானமாகக் கிடைக்கிறது. இந்த வருமானத்தில் 15 சதவீதம் வருடம் தோறும் ராணி இரண்டாம் எலிசபெத்துக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பக்கிங்காம் அரண்மனைக்கு கடந்த வருட வருமானத்தை விட தற்போது 18 சதவிகிதம் அதிக வருமானம் கிடைத்துள்ளது. அதன்படி 16.6 மில்லியன் பவுன்ட் இங்கிலாந்து அரசால் ராணிக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# யேமனில் சனியன்று 55 பேர் சாவு

### சவூதிக் கூட்டுப்படைகளின் தாக்குதலின் எதிரொலி

சனா, ஜூலை 27

யேமனின் தைஜ் நகரை குறி வைத்து சவூதிக் கூட்டுப் படைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குண்டு மழை பொழிந்துள்ளன. இந்தத் தாக்குதல்களில் 55 பேர் உயிரி ழந்துள்ளதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.



யேமன் நாட்டில் ஈரான் ஆதரவுக் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல், ஜனாதிபதி மன்சூர் ஹாதி சவூதிக்குத் தப்பியோடியுள் ளார். யேமனில் மீண்டும் அவரது ஆட்சியை ஏற்படுத்துவதற்காக சவூதிக் கூட்டுப் படைகள் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய நாடுகள்), யேமனில் ஹவுதி கிளர்ச்சியாளர் களுக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் தொடக்கம் வான்தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருகின் றன.

இந்த நிலை யில், யேமனின் தைஜ் நகரை குறி வைத்து சவூதிக் கூட்டுப் படைகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளன.

இது தொடர்பாக அந்த நிறுவனம், தைஜ் நகரில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தின் இயக்குநர்கள், தொழி லாளர்கள், இடம் பெயர்ந்து வந்த குடும்பங்கள் வசித்து வந்த மோக்கா பகுதியைக் குறி வைத்து சவூதிக் கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் வான்தாக்குதல்கள் நடத்தின.

அதில் 55 பேர் உயிரிழந்துள் ளனர் எனத் தெரிவித்துள்ளது. அங்கு இன்னும் மீட்புப் பணிகள் முடிவடையாததால், சாவு எண் ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## பொதுமக்கள்மீது நைஜீரியாவில் தாக்குதல்

மைடுகுரி, ஜூலை 27

நைஜீரியாவில் பொதுமக்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக் கிப் பிரயோகத்தில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கு மாநிலமான போர்னோவில் உள்ளது மைக்காடிரி. இங்கு ஏராளமான மக்கள் வசிக்கின்றனர். நேற்றைய தினம் தீவிரவாதிகள், அந்தப் பகுதியில் இருந்தவர்கள் மீது திடீரெனக் கண்மூடித் தனமாகத் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர். அங்குள்ள வீடுகளுக்குத் தீவைத்துக் கொளுத்தினர் தீவிர வாதிகள். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்தத் தாக்குதலில் 21 பேர் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டுள்ளதுடன், ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

போகோ ஹராம் தீவிரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதியில் இந்தத் தாக்குதல்; நடைபெற்றுள்ளது. எனவே, இந்தத் தாக்குதலில் போகோ ஹராம் தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனினும் இந்தத் தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை. (ஐ)

## இரகசியங்களைத் திருடிய சீனா அச்சத்தில் அமெரிக்கா அரசு

வொஷிங்டன், ஜூலை 27

அமெரிக்க பாதுகாப்புத்துறைத் தகவல்களை சீன ஹேக்கர்ஸ் (தகவல் திருட்டுத் திருடர்கள்) சேகரித்துள்ளதால் அமெரிக்க அரசு அச்சத்தில் உள்ளது.

அண்மையில், அமெரிக்கப் பாதுகாப்புத்துறை மற்றும் உளவுத்துறை இணையத் தளங்களுக்குள் ஊடுருவிய சீன ஹேக்கர்ஸ், அந்த நாட்டு அரசின் முக்கிய தகவல்களை சேகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்கள் திருடப்பட்டதை அமெரிக்காவும் ஒப்புக்கொண்ட நிலையில், உளவுத்துறை தொடர்பான தகவல்கள் எதுவும் திருடப்படவில்லை என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பாகிஸ்தானுக்கு நிதி வழக்கும் அமெரிக்கா

ஆப்கானிஸ்தான் போர் தொடங்கிய பின்னர், பாகிஸ்தானுக்கு பெருமளவு நிதியை அமெரிக்கா வழங்கி வருகிறது. கூட்டணி ஆதரவு நிதி என்ற தலைப்பில், பாகிஸ்தான் ஏற்க னவே தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவழித்த தொகையை அமெரிக்கா திரும்ப அளித்து வருகிறது.

அந்த வகையில் கடந்த வருடம் ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களுக்கு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 337 மில்லியன் டொலரை வழங்குகிறது.

பாகிஸ்தானுக்கு 337 மில்லியன் டொலர் நிதி உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்திடம் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

இன்னும் சில நாள்களில் பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா இந்த நிதியை விடுவித்து விடும் என வொஷிங்டனில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. வொஷிங்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள், கூட்டணி ஆதரவு நிதி என்பது இராணுவத்துக்கான உதவி அல்ல என்பதைத் தெளிவுபடுத்தி உள்ளனர். (ஐ)

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம்

டமாஸ்கஸ்,ஜூலை 27

துருக்கியில் சிரியா எல்லையில் உள்ள சுருக் நகரின் குர்தீஸ் பகுதியில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஐ.எஸ்.தீவிரவாதிகள் மற்றும் குர்தீஸ் தீவிரவாதிகளால் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருவதால், அதற்கு முடிவு கட்டும் விதமாக துருக்கி அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது. சிரியாவின் எல்லையில் சோதனை நடத்தி நூற்றுக்கணக்கான தீவிரவாதிகளைக் கைது செய்தது. அவர்களில் குர்தீஸ் தீவிரவாதிகளும் அடங்குவர்.



மேலும், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது குண்டு வீச்சு நடத்தியதில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 12 பேர் காயம் அடைந்தனர்.

இந்த நிலையில் துருக்கியின் சிரியா எல்லையில் உள்ள சுருக் நகரின் குர்தீஸ் பகுதியில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியதில், 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், காயமடைந்த 29 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர், இந்தத் தாக்குதல் தொடர்பாக வெளியான ஒரு புகைப்படத்தில் பெண்மருத்துவர் ஒருவர் உயிருக்கு போராடிய நிலையில் இறந்துபோன தனது தோழியின் கரங்களை இறுகப்பிடித்துக் கொண்டு கிடக்கிறார்.

அந்தப் புகைப்படம் தற்போது இணையத்தில் பரவி வருகிறது. இதனைப் பார்த்த மீட்பு படையினர், உயிருக்கு போராடிக்கொண்டிருந்த அந்தப் பெண் மருத்துவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும், துருக்கி ஜனாதிபதி தனது மனைவியுடன் மருத்துவமனைக்குச் சென்று காயமுற்றவர்களிடம் அவர்களது நலன் குறித்து விசாரித்துள்ளார். (ஐ)

இரா.விஜய்

## பாம்பும் ஏணியும் விளையாட்டாகிப் போன...

# வலி.வடக்கு

## மக்களின் அவல வாழ்க்கை....

உலகின் எந்த மூலையில் இடம்பெயர்ந்தவனும், மீளக்குடியமர்ந்து விடுவான். ஆனால் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவன் எந்தக் காலத்திலும் மீளக் குடியமர முடியாது என்பதைத் தான் அண்மையில் நடந்து முடிந்த பாதுகாப்புச் செயலரின் யாழ். வருகை கோடிட்டுக் காட்டுகின்றது.

பாதுகாப்புச் செயலர் யாழ் வருகிறார். வலி.வடக்கில் மேலும் சில பகுதிகள் விடுவிக்கப்பட லாம் என்ற பத்திரிகைச் செய் தியைப் பார்த்து நம்பிக்கைபெற்ற வலி. வடக்கு மக்களின் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஒரு நாள் கூட நீடிக்கவில்லை. அடுத்த நாளே இராணுவம் விடாப்பிடி, வலி. வடக்கு விடுவிக்கப்படாது பலாலி உயர்மட்ட கூட்டத்தில் இராணுவம் பதில் என்ற செய்தி வெளிவந்தது.

ஒருநாள் அளவு கடந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும், அடுத்த நாளே அம்மக்களுக்கு வேதனையைத் தருகின்ற செய்திகள். இதை வைத்துத்தான் வலி .வடக்கில் மக்களின் வாழ்வை பாம்பும் ஏணியும் விளையாட்டு என இப்பத்திக்கு தலைப்பிட்டேன். அந்த விளையாட்டை ஆட்சியாளர்களும், இராணுவமும் விளையாடினார்களோ என்னவோ தெரியாது ஆனால், வலி.வடக்கு மக்களின் வாழ்க்கையில் நன்கு விளையாடுகிறார்கள்.....

முதலில் ஒரு கேள்வி... பலாலியில் நடந்த அந்த மீள் குடியமர்வு தொடர்பான கூட்டத்துக்கு பாதிக்கப்பட்ட மக்களில் இருந்து ஏன் ஒருவரைக்கூட கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை? அரச அதிபரும், மீள் குடியேற்ற அமைச்சின் செயலரும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்று செய்தி வந்ததே தவிர, வலி.வடக்கு மக்களின் சார்பாக ஒருவர் கூட கலந்துகொண்டதாகச் செய்திகள் வரவில்லை. அவ்வாறு கலந்து கொண்டிருந்தால் இராணுவத்தினர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தங்கள் மனவேதனையைக் கொட்டித் தீர்த்திருப்பார்கள் அந்தப் பகுதி மக்கள். ஒருவேளை பாதுகாப்புச் செயலரும் சிவில் சேவையில் இருந்து வந்தவர் ஆகையால் அந்த மக்களின் அவலங்களைப் புரிந்திருக்க முடியும்? அப்படி இல்லாமல் இப்படி ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்ததில் ஏதோ ஒரு தவறு திட்டமிட்டு நடந்துள்ளதா என்று தான் சிந்திக்க வைக்கின்றது.

சரி, இராணுவம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லத்தான் எந்த அதிகாரிகளுக்கும் வாய் வராமல் போனது ஏன்? பாதிக்கப்பட்ட மக்களின் சார்பான பதில் ஒன்றே ஒன்றுதான். உண்மையில் இடம்பெயர்ந்த மக்களில் அதிகம் பேர் இருப்பது காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டியாக இருக்குமே தவிர வீமன்காமமோ, வளலாய்ப் பகுதியோ அல்ல. அதற்காக அந்த மக்கள் இடம்பெயரவில்லை. இழப்புக்களைச் சந்திக்கவில்லை என்பது கருத்தல்ல. சனத்தொகையில் அதிகம்பேர் இடம்பெயர்ந்தவர்களாக இருப்பது காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி போன்ற பகுதிகளேயாகும்.

எனவே அந்தப் பகுதி மக்களை முதலில் குடியேறச் செய்யுங்கள், அதன் பின்னர் விடுவிக்கப்பட்ட பகுதிகள் யாவும் மக்கள் நிறைந்ததாகவே காணப்படும். இடம்பெயர்வின் மூலமே மேற்குறிப்பிட்ட மூன்று பகுதிகள் தான். துறைமுகம், மீன் பிடித்துறை, ரயில் நிலையம் , உணவுக்களஞ்சியம், சிமெந்துத் தொழிற்சாலை என்று மக்களோடு சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தோடு சேர்ந்த பகுதிகளை விடுவிக்காமல் மக்கள் மீளக்குடியமரவில்லை, ஏன் உங்களுக்கு இடம் என்று இராணுவம் கேட்பதில் எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனை ஏன் அரச அதிபர் கூட ஆணித்தரமாகக் கூறவில்லை? இதுதான் இந்தப் பகுதி மக்களின் வேதனையாக இருக்கின்றது.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக உறவுகளை இழந்து, வாழ்வாதார உழைப்புக்களை இழந்து ஏறத்தாழ கறையான் அரித்த அரிச்சுவடி போல, வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை மீளக் குடியமரச் சொன்னால் மீளக் குடியமர்வர். ஆனால், அவர்கள் உடனடியாக மீள் குடியமர்வது என்று எதிர் பார்ப்பது எந்த அளவு நியாயம்? ஒரு பறவையின் கூட்டையோ அல்லது குளவியின் கூட்டையோ கல் எறிந்து கலைத்துவிட்டு வந்து உடன் இரு என்றால் வந்து அமருமா அவைகள்? அதுபோல் தான் வலி.வடக்கு மக்களும். எறிகணைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும், சிதைந்துபோன அவர்களின் மனங்களுக்கும், வீடுகளுக்கும் எல்லையில் இராணுவம் அமர்ந்திருக்க எப்படி அவர்களால் அருகில் வந்து குடியேற முடியும்? மீள்குடியமர்வு என்றால் இராணுவம் விலகி தங்கள் பழைய இடங்களுக்கே செல்ல வேண்டும். 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர்கூட காங்கேசன்துறையிலும், பலாலியிலும் இராணுவ முகாம்கள் இருக்கும் போது கூட மக்கள் வாழ்ந்தார்கள். அதுவும் செறிவாக வளங்களுடன். அதற்குக் காரணம் இராணுவம் குடிமனைகளுக்கு அருகில் இருக்கவில்லை. தங்களுக்கென்ற பகுதிகளில் இருந்தார்கள். ஆனால் இன்று ........... விடு விக்கப்பட்ட பகுதிக்கு அருகிலேயே முட்கம்பி. அதற்கு அப்பால் இராணுவத்தின் முகாம்கள் ..... எப்படி வாழமுடியும்?


அதுமட்டுமல்ல அந்த மக்களின் வீடுகள் யாவும் தரைமட்டம். இடிக்கப்பட்ட வீடுக ளின் கற்களில் ஒன்று கூட இல்லை.(தல் செவன கோட்டலில் கடல் பகுதி மேடைக்கு இவையே போடப்பட்டுள்ளனவாம் என அந்தப் பகுதிமக்கள் பேசுகிறார்கள்.) எனவே எப்படி மீள்குடியமர உடனே முடியும்?

இவை எல்லாவற்றையும் பாதிக்கப்பட்டவர்கள் கலந்து கொண்டிருப்பின் நிச்சய மாக எடுத்துக் கூறி இருப்பர். ஆனால் எம்விதி யாரை நாம் நோவது? இறுதியாக பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ். வருகைக்கு முன் னர் கவனயீர்ப்புப் போராட்டத்தை வலி. வடக்கு மக்கள் செய்தபோது அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்க வலி. வடக்கு மக்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு பேருக்கு மேல் வழக்குத் தாக்கல் செய்தி ருந்தார்கள். ஆனால், அந்த வழக்கு கள் பற்றி எந்தத் தகவலும் கூட இன்றுவரை இல்லை. அதற்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப் பினர்கள் சட்டத்துறையில் பாண்டித் தியம் பெற்றவர்களாக இருந்தும் அந்த வழக்கின் இழுத்தடிப்பு களுக்கு ஏன் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை? மைத்திரி அரசின் நல்லாட்சியில் அந்த வழக்கு நடைபெறுவதாக கூட ஒரு செய்தியைக் கூட படிக்க முடியவில்லை? இது ஏன்? இதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுக்கு விளக்க வேண்டும். அப்போதுதான் வலி.வடக்கு மக்களுக்கு ஒரு தெளிவு ஏற்படும். சம்பூர் மக்களின் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்ட சூழலில் வலி. வடக்கு மக்களுக்கும் இறுதியாக உள்ள தெளிவு அந்த வழக்குகள் தான்.

அதுமட்டுமல்ல எமக்கு கிடைத்திருக்கிற ஜனாதிபதியும் கூடத்தான். இராணுவம் என்ன சொன்னாலும் விடுவிக்க மறுத்தாலும் உங்கள் காணி உங்களுக்கே என்ற ஜனாதிபதி மைத்திரிபாலவின் கருத்தை வலி.வடக்கு மக்களில் ஒவ்வொருவரும் தம் மனங்களில் ஏந்தியுள்ளனர். யார் வாக்குப் பொய்த்தாலும் அவர் வாக்குப் பொய்க்காது என்பதில் தெளிவாக உள்ளனர். இலங்கையின் எந்த ஜனாதிபதிக்கும் இல்லாத ஒரு எளிமையும், மக்கள் பிரச்சினைகளுக்கு முக்கியம் தருகின்ற அவரது செயற்பாடும், வித்தியாசமானது அவர் பெற்றோரை ஆறுதல் கூறிய எளிமையும், மனித நேயமும் நிச்சயமாக வலி.வடக்கு மக்களுக்கு அவர் மீது நம்பிக்கை மேல் நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. சம்பூரையும் விடுவித்தவர் அவர்தான். விடுவிக்கப்படாது என்றிருந்த வலி.வடக்கில் ஆயிரம் ஏக்கரை விடுவித்தவரும் அவர் தான். (அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் அணுகு முறையும் ஒரு காரணம்.) எனவே அவரை நம்புவோம். அவர் வாக்கை நம்புவோம். நாடாளுமன்றத் தேர்தலின் பின் நிச்சயம் ஒரு முடிவுகிடைக்கும் என எதிர்பார்ப்போம். இல்லையெனில் வீதியில் இறங்கியேனும் எம்நிலம் மீட்க போராடுவோம். அந்த ஜனநாயகம் எம் நாட்டில் மலர்ந்துள்ளதால் நம்பிக்கையோடு காத்திருப்போம்.



> 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட காங் கேசன் துறையிலும், பலாலியிலும் இராணுவ முகாம் கள் இருக்கும் போது கூட மக்கள் வாழ்ந் தார்கள். அதுவும் செறிவாக வளங் களுடன்.. அதற்குக் காரணம் இராணு வம் குடிமனை களுக்கு அருகில் இருக்கவில்லை. தங்க ளுக்கென்ற பகுதி களில் வாழ்ந்தார்கள். இருந்தார்கள். ஆனால் இன்று ........... விடு விக்கப்பட்ட பகுதிக்கு அருகி லேயே முட் கம்பி.அதற்குஅப்பால் இரா ணுவத்தின் முகாம்கள் ..... எப்படி வாழமுடியும்?





## எம்மையும் கவனிக்க வேண்டும்

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றும் அரசியல்வாதிகள் தமது மனம் போனவாறு வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். எதைக் கூறியாவது பதவிக்கு வரவேண்டும் என்பதே இவர்களது நோக்கமாகும்.

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவதில் மஹிந்தவும், ரணிலும் போட்டி போட்டுக் கொண்டு வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இவர்கள் தாம் கூறியவாறு வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரச ஊழியர்களுக்கு நன்மைதான்.

தற்போதைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையில் அரச ஊழியர்கள் திண்டாடி வருவதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது அவசியமானதுதான்.

இந்த நிலையில் பல லட்சக்கணக்கான தனியார்துறை ஊழியர்கள் மிகக்குறைந்த வேதனத்தில் தமது பணிகளை ஆற்றுவதால் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கூட தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை எதுவுமே நடக்கிவில்லை. இந்த நிலையில் மீண்டும் அரச ஊழியர்களின் வேதன அதிகரிப்புத் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றதே தவிர தனியார் துறை ஊழியர்கள் தொடர்பாக எதையும் கூறக் காணோம்.

தனியார் துறை ஊழியர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான் என்பதை அரசும், அரசியல்வாதிகளும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கும் வாயும் வயிறும் உள்ளது என்பதையும் ஏற்றுக்கொண்டு அவர்களது வேதனத்தை அதிகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தம்மை இடது சாரிகள் எனக்கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் தனியார்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் தொடர்பாக வாயே திறப்பதில்லை. தமது பதவிகளைக் காப்பாற்றுவதிலேயே இவர்கள் குறியாக இருக்கின்றனர்.

ஆகவே இனியாவது தனியார்துறை ஊழியர்களின் அவல நிலையை உணர்ந்து அவர்களது வேதனத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடவேண்டும் என்பதே என்னைப்போன்ற தனியார்துறை ஊழியர்களின் கோரிக்கையாகும்.

*சு.சந்திரராசா, தனியார்துறை ஊழியர்.*


## ஒலிபெருக்கியால் கல்விக்குப் பாதிப்பு

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற காலம் போய் இனிமேல் கோயில் இல்லா ஊரில் தான் குடியிருக்க வேண்டும் என்ற காலம் வலி. மேற்கில் விரைவில் வந்துவிடும் போல இருக்கிறது. ஏனெனில் இன்றைய நிலையில் கோயில்களில் திரு விழாக் காலங்களில் ஒலிபெருக்கி கள் மிகப்பெரிய சத்தத்தில் இசைக்கவிடப்படுகின்றன. இவ்வாறு செய்பவர்கள் மாணவர்களைப் பற்றிச் சிறிதும் நினைத்துப் பார்ப்பதில்லை என்று எண்ணுகின்றேன். இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள் என்ப தைப் பலரும் மறந்து விடுகிறார்கள்.

இவ்வாறு மிகப் பெரிய சத்தத்தில் ஒலிபெருக்கியை இசைக்க வைப்பது மாணவர்களுக்கு ஒரு தடையாகவே உள்ளது. குறிப்பாக பரீட்சைக் காலங்களிலே மாணவர்கள் உரிய முறையில் பரீட்சைக்குத் தயா ராக முடியாத நிலை காணப் படுகின்றது. ஒலிபெருக்கியை இசைக்க வைப்பது தவறென்று நான் கூறவில்லை. இவ்வாறு செய்வதை விட்டு கோயில் எல்லைக்குள் அளவாக ஒலி பெருக்கியைப் பயன்படுத்தினால் மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

இவ்வாறு செய்பவர் களுக்கு நான் ஒரு விடயம் கூற நினைக் கிறேன். அது என்ன வெனில் தலையிடியும் காய்ச்ச லும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பது போல உங்கள் பிள்ளைகளும் இவ்வாறு பரீட்சைகளை எதிர் கொள்ளும் போது தான் உங்களுக்கு மாணவர்களாகிய எமது பிரச்சினையும் புரியும். எனவே இந்தப்பிரச்சினைக்கு உரிய சாராராகிய சட்டத்துறை சார்ந்த வல்லுனர்கள் ஒரு முடிவைக் கொண்டு வர முன்வருவீர்களா? எமது எதிர் காலம் பற்றிச் சிறிதளவாவது கவனம் எடுப்பீர்களா?

*பாதிக்கப்பட்ட மாணவர்கள்*
*வலி.மேற்கு சுழிபுரம்*




## முன்வருவார்களா?

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள விளாத் தித்தோட்ட சிறு வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. அதில் கிராமிய வைத்தியசாலை ஒன்றும் உள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் அதிகம். இந்த வீதி யைப் புனரமைப்பதற்கு எவரும் முன்வருதில்லை. இந்த வீதி சங்கானைப் பிரதேசசபைக்கு உட்பட்டது. இந்த வீதியில் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை தினமும் ஏராளமானவர்கள் பயணிக்கின்றனர். நல்ல உள்ளம் கொண்டவர்கள் இதைப் புனரமைப்புச் செய்வதற்கு முன்வருவார்களா?

*து.நாராயணன்*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## ஒற்றையாட்சியை ஒற்றுமையாய் எதிர்ப்போம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு விடயத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்திருக்கின்றார். அதாவது, ஒற்றையாட்சியை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஒற்றையாட்சிக்குள் அதி உச்ச அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதாக, தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டிருக்கின்றது.

ஒற்றையாட்சி என்பது, பெரும்பான்மை சொல்வதைக் கேட்பதும், நாம் தொடர்ந்து அடிமைகளாக வாழ்வதையுமே நிலை நிறுத்தும். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் அந்த ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று திட்டவட்டமாக சம்பந்தன் கூட்டத்தில் இடித்துரைத்தார்.

அதில் அவர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருந்தார். அதுதான் மிக முக்கியமானது. ஒற்றையாட்சியை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்திலும் போட்டியிடுகின்றது. அந்தக் க்ட்சியின் பத்து வேட்பாளர்களையும் யாழ்ப்பாணத்தில் தூக்கி எறிந்து தோற்கடியுங்கள் என்று அழுத்திக் கூறியிருக்கின்றார்.

அவ்வாறு, ஐக்கிய தேசியக் கட்சியையும் அவர்கள் சார்பில் போட்டியிடுபவர்களையும் இங்கு தோற்கடித்து துரத்தியடிக்க வேண்டும் என்று அவர் சொன்னதற்கு விளக்கமும் கொடுத்திருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு, இங்கிருந்து - தமிழர்களிடமிருந்து செல்லுகின்ற ஒவ்வொரு வாக்குகளும், ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டதாகவே இருக்கும். எனவே, நாம் தொடர்ந்தும் அடிமையாக வாழப் போகின்றோமா ? இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழப் போகின்றோமா? என்பதைச் சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி, எதற்கு ஆணை கோருகின்றது. தான் முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் அந்த ஆணையைக் கோருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம், இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி என்ன சொல்கின்றது. ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு.

ஒற்றையாட்சிக்குள் ஏற்கனவே பகிரப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு விளைவுதான் மாகாணசபை. அது எங்களுக்குத் தீர்வாக அமைந்து விட்டதா ? அல்லது தீர்வின் ஆரம்பப் புள்ளியாகத் தன்னும் அமைந்து விட்டதா ? மாகாணசபைக்கு ஆளுநர்கள் போடும் முட்டுக் கட்டைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்படியான நிலையில், அதிலிருந்து மீளாமல் மீளவும், ஒற்றையாட்சிக்குள் முடங்குவதற்கு நாம் ஆணை - வாக்கு கொடுக்கப் போகின்றோமா ?

எனவே, தமிழ் மண்ணிலிருந்து விழுகின்ற ஒவ்வொரு வாக்கும் தெளிவான செய்தியை உணர்த்துவது முக்கியம். தெரிந்தவர் - பழகியவர்கள் போட்டி யிடுகின்றார்கள், என்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு போடும் ஒவ்வொரு புள்ளடியும், ஒற்றையாட்சிக்கு அங்கீகாரம் கொடுப்பதாகவே அமையும். அந்த அங்கீகாரம், தமிழர்கள் விரும்புகின்ற சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காது.

எனவே, இந்தத் தேர்தலில் தமிழர்கள் அணிதிரண்டு வாக்களிப்பது அவசியம். அந்த வாக்கும் யாருக்குப் போடப்படுகின்றது என்பதும் முக்கியம். ஒற்றையாட்சியை அங்கீகரிக்கின்ற எந்தச் செயற்பாடுகளுக்கும், தமிழ் மக்கள் இடம்கொடுக்கக் கூடாது. ஒற்றையாட்சியை முன்வைத்துப் போட்டியிடுகின்ற, கட்சிகளை தமிழ் மக்கள் ஒற்றுமையாக நிராகரிக்க வேண்டும். அவர்கள் இனிமேலும், எங்கள் மண்ணில் எந்தத் தேர்தலிலும் வாக்குக் கேட்க வர முடியாதளவுக்கு அடித்து விரட்ட வேண்டும்.

அதனைத் தமிழ் மக்கள் செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்கு அடுத்த ஆண்டு இறுதிக்குள் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உறுதியளித்திருக்கின்றது. அதற்குத் தம்மை பேரம் பேசும் சக்தியாக - பலமான சக்தியாக இருப்பதற்கான ஆணையைக் கோருகின்றது.

அந்த ஆணையை மக்கள் ஒருமித்து - ஒற்றுமையாக வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. எனவே நடைபெறப்போகும் தேர்தலில், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சொன்னது போல, உதிரிகளை உதறித் தள்ளுங்கள்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிந்தித்துச் செயற்படத் தூண்டும் தேர்தல் விஞ்ஞாபனம்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 2015 ஜனவரி 08 ஆம் திகதி சிறுபான்மை மக்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் மேற்கொண்ட நிலைப்பாடானது தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளின் சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததை மறுக்க முடியாது. பொதுவில் தெற்கில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவதற்கு சிறுபான்மையோர் காரணமாக அமையும் போதொல்லம் அவர்களுக்குள்ளேயே குழறுபடிகளை அல்லது நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தி காரியம் சாத்திப்பவர்களாகவே இக்கட்சிகள் இருந்துள்ளன. அது மட்டுமன்றி எங்கெங்கே முடியுமோ அங்கங்கெல்லாம் சிறுபான்மையினரின் விகிதாசாரத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளிலும் அக்கட்சிகள் ஈடுபடுபவையாக இருந்துள்ளன.

அந்த வகையில் நடைபெற்ற கைங்கரியங்கள் தான் மலைநாட்டில் லட்சக்கணக்கான தமிழர்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டமையும் அம்பாறை மற்றும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் பெரும்பான்மை சமூகங்களை திட்டமிட்ட வகையில் குடியேற்றியமையும் ஆகும்.

அதேவித போக்கு போருக்குப் பின்னரும் வேறு மறைமுகமான அரங்கேற்ற முயற்சிகள் இப்போதும் நடைபெற்று வருகின்றன.

ஜனவரி 08 ஆம் திகதிக்குப் பிந்திய புதிய சிந்தனைப் போக்கானது, சிறுபான்மை மக்களின் ஆதரவை கணிசமான அளவில் திசை திருப்பும் நோக்கத்தைக் கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, அவர்கள் விடயத்தில் தாங்கள் பெருமளவில் கவனம் செலுத்த முனைவதாக சர்வதேசத்துக்குக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்திருப்பதைப் பார்க்கின்றோம். தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்கள் அனைவரும் இந்த விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து தெளிவுபெறுவது அவசியம். தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையில் இருந்து தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சினைகளையும், அவைகளைத் தீர்த்துக் கொள்ள எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளையும் சுருக்கமாக தொட்டுக்காட்டியுள்ள விஞ்ஞாபனம் தமிழ் பேசுவோரின் கோரிக்கைகள் குறித்து விரிவாகப் பேசுகையில் பின்வருமாறு கூறுகிறது.


புவியியல் ரீதியாக பிணைக்கப்பட்டுள்ளதும், தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்டதுமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களதும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களதும் பூர்வீக வாழ்விடங்களாகும். ஐக்கிய நாடுகள் சாசனத்தின் விதிகளின் பிரகாரம் தமிழர்கள் தனித்துவமானவர்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். முன்னர் இருந்தவாறு வடக்கு - கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டி கட்டமைப்பின் கீழ் அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் வகிபாகம் தொடர்பில் விஞ்ஞாபனம் பேசுகையில்; கடந்த அரசு சர்வதேச தலையீட்டின் மூலம் விளைந்த சிறிதளவான நன்மைகளையும் கூட களைவதற்கு துடித்தது.

இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே நிரந்தரமானதும், நிலையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அனைவரும் சமத்துவமுள்ள குடிமக்களாக வாழவழி செய்ய சர்வதேச வகிபாகம் அவசியம் என்பதே தமது நிலைப்பாடு என்று தெரிவித்துள்ளது.

வரும் செம்ரெம்பர் மாதம் ஐ.நா. மனிதஉரிமை சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் விசாரணை அறிக்கையினது பரிந்துரைகள் முழுமையாக நடைமுறை ஆக்கலை நாம் வலியுறுத்துகின்றோம். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதிலும் அது இலங்கையில் வாழும் சிங்களவர், முஸ்லிம்கள் ஏனைய மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் விஞ்ஞாபனம் வலியுறுத்தியுள் ளது.

தமிழ் பேசும் மக்கள் அரசியலில் தனித்தனியே பிரிந்து உதிரிகளாக நிற்பது ஒருபோதும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க சாத்தியமாகாது. தனிப்பட்டவர்கள் ஏதோ காரணத்தில் வென்றாலும் பெரும்பான்மையானவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு இடையூறாக இருப்பது கடந்தகால அனுபவங்கள் என்பதை மக்கள் மனதில் இருத்த வேண்டும். நியாயத்தின் பக்கம் நின்று ஒற்றுமையை வெளிப்படுத்துவது மட்டுமல்ல அதன் மூலம் தென்னிலங்கை சக்திகளை மீண்டும் புதிய வகையில் சிந்திக்க வைக்க தமிழ் பேசும் மக்கள் தயாராக வேண்டியது முக்கியம்.



“இந்தியா இலங்கைத் தமிழர்களின் அவல நிலை தொடர்பாகச் சிறிது கவனம் செலுத்தினாலே போதும். ஏனைய நாடுகள் இதில் ஆழ்ந்த அக்கறை செலுத்துவதுடன் தம்மால் இயன்ற உதவிகளைப் புரிவதற்கும் முன்னிற்கும் என்பதில் ஐயமில்லை.

# இந்தியா இனியாவது மனச்சாட்சிக்கு இடம்கொடுத்து நடக்குமா ?

சேரலாதன்

இந்தியாவின் தமிழ் நாட்டில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிலர் சயனைட் குப்பிகளுடன் கைதாகியதாக வெளிவந்த செய்திகள் தென்பகுதி அரசியலுக்கு பிராணவாயுவை ஏற்றுகின்ற ஒரு தந்திரமெனக் கூறுவோர் இல்லாமலில்லை. இறுதிப் போரில் புலிகள் முற்றாகத் துடைத்தழிக்கப்பட்டதாகக் கூறும் நிலையில் சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் புலிக் கதைகள் மீண்டும் கிளம்பியுள்ளன. இவை சிலரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே கிளப்பி விடப்பட்ட தாக எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக புலிகளைக் காட்டிக் காட்டியே தென்பகுதியின் அரசியல் நகர்த்தப்பட்டு வந்துள்ளது. இனவாதமும், புலிவாதமும் பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் தாரக மந்திரங்களாகவே மாறியிருந்தன. தற்போது இடம்பெறப் போகும் தேர்தலில் எதைக் கூறிக் குட்டையைக் குழப்பலாம் என்றிருந்தவர்களுக்கு தமிழ் நாடும், மிரிஹானவும் கைகொடுத்து உதவியுள்ளன.

புலிகள் மீதும் ஈழத்தமிழர்கள் மீதும் இந்திய மத்திய அரசின் காழ்ப்புணர்வு குறைந்துவிடவில்லை என்பதை தற்போதைய சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி, பி.ஜே.பி அரசாக இருந்தாலும் சரி, ஈழத்தமிழர்களுக்கு ஒரே நீதி தான் கிடைக்கும் என்பதும் நிரூபணமாகி விட்டது. இதே வேளை என்ன தான் இந்தியாவுக்கு விரோ தமாக நடந்து கொண்டாலும் அந்த நாட்டின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்த வண்ணமே உள்ளது. இந்தி யாவின் இந்தப் பலவீனமே இலங்கை இந்தியாவை மதித்து நடக்காமைக்கான பிரதான காரணமாகி விட்டது.

போரின் ஆரம்பத்தில் இருந்தே இந்தியாவைத் தேடிச்சென்று தஞ்சமடைந்தனர் ஏராளமான இலங்கைத் தமிழ்மக்கள். இலங்கைக்கு அருகே தமிழர்கள் பெருமளவில் வாழுகின்ற தமிழ்நாடு அமைந்துள்ளதால் இலங்கைத் தமிழர்கள் அங்கு தஞ்சம் கோரிச் செல்வதை ஒரு வாய்ப்பாகவே கருதினார்கள். ஆனால் அங்கு அவர்களுக்கு சீரான வாழ்க்கை அமையவில்லை. மோசமான வசதியீனங்களுக்கு மத்தியில் அவர்களுக்கென அமைக்கப் பட்ட முகாம்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே அவர்கள் வாழவேண்டியதொரு நிலை காணப்பட்டது. தமிழ் நாடு அரசும் இவர்கள் மீது கருணை காட்டுவதாகத் தெரியவில்லை. ஒரே இனத்தவர்கள் என்ற உரிமை கூட இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட வில்லை. ஏதோ அன்னிய மக்கள் போன்றே அவர்கள் நடத்தப்பட்டனர். முகாம்களை விட்டு வெளியே செல்வதற்கும், தொழில் தேடுவதற்கும் இந்த மக்கள் இலகுவாக அனுமதிக்கப்படவில்லை. சுருக்கமாகக் கூறினால் முகாம் வாழ்க்கை என்பது ஒரு நரக வாழ்க்கையாகவே காணப்பட்டது.

இந்த நிலையில்தான் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதனால் முகாம் வாசிகளின் நிலை மேலும் கடினமானதாக மாறிவிடப்போகின்றது.

இறுதிப் போரில் புலிகள் அழிக்கப்படுவதற்கும், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்படுவதற்கும் இந்தியாவே முக்கிய காரணமாக இருந்துள்ளது. இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இலங்கை அரசினால் புலிகளை ஒழித்திருக்கவே முடியாது. ஆனால் போர் ஓய்ந்த பின்னர் இந்தியா நடந்து கொண்ட முறைதான் மனதை நெருடுகின்றது. போரினால் சீரழிந்த தமிழர்களைத் தூக்கி நிறுத்துவதற்கு இந்தியா முற்று முழுதாகவே தவறிவிட்டது. இந்தியன் வீட்டுத் திட்டம் என்ற பெயரில் இடம் பெயர்ந்து சென்று மீண்டும் குடிய மர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு அரைகுறையான உதவிகளை வழங்குவதன் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களின் துயரைக் களையவே முடியாது. இன்றும் கூட ஏராளமான தமிழ்மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேசி ஒரு நல்ல முடிவை எட்டு வதற்குக் கூட இந்தியா இயலாத நிலையில் உள்ளது.

அடிக்கடி புலிப் பூச்சாண்டி காட்டி தமிழர் பகுதியில் இயல்பு நிலையைக் குலைப்பதற்கு இலங்கை அரசு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு இந்தியா உதவுகின்றதே தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலையை ஏறெடுத்துப் பார்ப்பதாகவும் தெரியவில்லை.

தற்போது கூட இலங்கையிலுள்ள சில அரசியல்வாதிகளின் நலன் கருதியே தமிழ் நாட்டில் புலிகள் கைது செய்யப்பட்ட செய்தி வெளிவந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். இது உண்மையாக இருந்தால் இந்தியாவின் கபடத் தன்மையை எவராலுமே மன்னிக்க முடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழர்களின் துன்பங்களும் ஆரம்பமாகிவிட்டன. அன்னியர் ஆட்சியில் மேன்நிலை மக்களாக வாழ்ந்த அவர்கள் சுதந்திர இலங்கையில் சகல சுதந்திரங்களையும் இழந்த ஒரு இனமாக மாறிவிட்டனர்.

இந்தியா என்னதான் துரோகத்தைப் புரிந்தாலும் இலங்கைத் தமிழர்கள் இன்னமும் இந்தியாவையே தமது தாய்வீடாகவே கருதுகின்றனர். இதைத்தான் தொப்புள் கொடி உறவு எனக் கூறுவார்கள். இதைப் பிரிப்பது சற்றுக் கடினமான விடயம் தான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியாவின் ஆசீர்வாதம் இருந்ததாகக் கூறுவார்கள். மஹிந்த ராஜபக்ஷ சீனாவுடன் நெருங்கிச் சென்றது இதற்கான பிரதான காரணமாகக் கூறப்பட்டது. ஆனால் அதே மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தற்போதைய தேர்தலில் இந்தியா ஆதரவு வழங்குவதாகக் கூறுவோரும் உண்டு. இதன் உண்மைத் தன்மை யைத் தேர்தல் முடிவுகள் வெளிவந் ததன் பின்னரே அறிந்து கொள்ள முடியும்.

புலிப் பூச்சாண்டி எழுப்பப்படுறமை உலகெங்கும் பரந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடியது. அவர்கள் வாழுகின்ற நாட்டு அரசுகளின் சந்தேகப் பார்வை அவர்களைச் சுற்றி வரவே செய்யும்.

இந்தியா இலங்கைத் தமிழர்களின் அவல நிலை தொடர்பாகச் சிறிது கவனம் செலுத்தினாலே போதும். ஏனைய நாடுகள் இதில் ஆழ்ந்த அக்கறை செலுத்துவதுடன் தம் மால் இயன்ற உதவிகளைப் புரிவதற்கும் முன்னிற்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா புரிந்த துரோகங்களுக்கு இனியாவது பிராயச்சித்தம் தேடுவது அந்த நாட்டின் முக்கிய கடமை ஆகும். இலங்கை அரசைக் கண்மூடித் தனமாக ஆதரித்துக் கொண்டு இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் விட்டுவிடும் போக்கு இனியும் தொடர்வது இந்தியாவுக்கும் நல்லதல்ல. இலங்கைத் தமிழர்களுக்கும் நல்லதல்ல.

சிங்கள மூலம் உபுல் யோசெப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில் வீ.எஸ்.ரீ

# மஹிந்தவைப் பிரதமராக மைத்திரி நியமிப்பாரா?

> “ யானைக்கு ஒரு காலம் உண்டென்றால், பூனைக்கும் ஒரு காலம் வராமலா போகும் என்பதற்கொப்ப, மஹிந்தவிடமிருந்து பயனைப்பெற்றுக் கொண்டு கறிவேப்பிலை போன்று அவரைத் தூக்கி வீசும் நிலை ஏற்படக்கூடுமோ என்பதை உறுதியாகக் கூறமுடிய வில்லை.

இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.ம.சுதந்திர முன்னணி சார்பாக பெரும்பான்மை ஆதரவை ஈட்டும் உறுப்பினரையே ஜனாதிபதி மைத்திரிபால, அடுத்த பிரதமராக நியமித்தாக வேண்டும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சட்ட வியாக்கியானம் வெளியிட்டுள்ளார். மஹிந்த தேர்தலில் வெற்றியீட்டினாலும், அவரைத் தாம் ஒருபோதும் பிரதமராக நியமிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரி வெளியிட்ட கருத்துக்குச் சவால்விடும் வகையிலான தர்க்க வாதம் இது. பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் முதன் முதலில் அரசியலில் பிரவேசித்த 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐ.ம.சு முன்னணி 105 ஆசனங்களை வென்றிருந்த நிலையில் அந்த முன்னணியின் பிரதம வேட்பாளர் சந்திரிகாவை பிரதமராக நியமிக்க வேண்டுமென வாதிட்டவர் பேராசிரியர் பீரிஸ்.

அந்த வேளையில் ஐ.தே.கட்சி அரசில் அமைச்சராக இருந்த ரொனி டிமெல், ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவை நேரில் சந்தித்து, சந்திரிகாவையல்லாது, அந்த வேளையில் அரசியலில் இருந்து ஓய்வு பெறும் நோக்குடன் இருந்த சிறிமாவோவையே பிரதமராக நியமிக்க வேண்டுமென வற்புறுத்தினார். ஆனால் அதே வேளை ஐ.தே.கட்சி சார்பாக அரசொன்றை நிறுவி அதில் தாம் பிரதமர் பதவியை வகிக்கும் நோக்கில் அரசமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஈட்டிக்கொள்ள காமினி திஸநாயக்க, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்புடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார். காமினி திஸாநாயக்கவுக்கு அரசொன்றை அமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பிரதமர் பதவி நியமனத்தை பிற்போட்டு வந்தார். ஆனால் காமினி திஸநாயக்கவுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரணில் அலரி மாளிகையைக் கைவிட்டு வெளியேறினார்.

இத்தகைய குழப்ப நிலையின் மத்தியில் நிருபமா ராஜபக் ஷவின் கணவரான பிரபல வர்த்தகர் நடேசன், ஜனாதிபதி டி.பி.விஜே துங்க மூலம் சந்திரிகாவைப் பிரதமர் பதவிக்குப் பரிந்துரை செய்விப்பதற்காக ஜே.ஆரினது உதவியை நாடிச் சென்றார். சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டால், அவர் தம்மைப் பழிவாங்க முயலக் கூடுமென்ற அச்சம் ஜே. ஆரின் மனதில் நிலவி வந்தது. அதேவேளை, தாம் பிரதமராக நியமிக்கப்பட்டால் ஜே.ஆர். மீது எவ்வித அரசியல் பழிவாங்கலையும் மேற்கொள்ள மாட்டேன் என சந்திரிகா ஜே.ஆருக்கு வாக்குறுதி வழங்கினார். அதனைக் கருத்தில் எடுத்து சந்திரிகாவையே பிரதமராக நியமிக்குமாறு ஜே.ஆர் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவுக்கு அழுத்தம் கொடுத்தார்.


அதேவேளை, ரணிலும்கூட அந்தச் சமயத்தில் சந்திரிகாவையே பிரதமராக நியமிக்குமாறு தாமும் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவை வற்புறுத்தப்போவதாக ஜே.ஆருக்குத் தெரிவித்திருந்தார். ஏதோ வகையில் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை உருவாக்கிக் கொண்டு சந்திரிகா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவிடமிருந்து பிரதமர் பதவியைக் கெஞ்சிக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். தோற்கடிக்கப்பட்ட ஐ.தே.கட்சியின் தலைவர் என்ற நிலையிலிருந்த டி.பி.விஜேதுங்கவும், பிரதமர் பதவியையும் அதிகாரத்தையும் சந்திரிகாவிடம் கையளிக்க நேர்ந்தது.

ஆனால் இன்று ஜனாதிபதி மைத்திரிபாலவோ, அன்று டி.பி.விஜேதுங்க இருந்த நிலையில் இல்லை. இன்று அவர் சுதந்திரக் கட்சியின் தலைவர். கட்சித்தலைவராகவும் நாட்டின் ஜனாதிபதியாகவும் இருக்கும் நிலையில் அந்தக் கட்சிக்கு தேர்தலில் நாடாளுமன்றப் பெரும்பான்மை கிட்டுமானால், புதிய அரசில் பிரதமராக எவரை நியமிப்பதெனத் தீர்மானிக்கும் உரிமை கட்சித் தலைவரான ஜனாதிபதிக்கே உரியது. 2010ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது பிரதமர் பதவி குறித்து ஊடகவியலாளரொருவர் தொடுத்த கேள்விக்கு மைத்திரிபால சிறிசேன வழங்கிய பதில் இந்த வேளையில் குறிப்பிட்டுக் கூறப்பொருத்தமானதொன்று.

2004ஆம் ஆண்டின் கூட்டணி அரசில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக உங்களது பெயரை ஜே.வி.பி. பரிந்துரை செய்திருந்ததாகக் கூறினீர்கள். முன்னர் உங்களுக்குக் கைதவறிப்போன பிரதமர் பதவி இந்தமுறை பொதுத் தேர்தலில் உங்களுக்குக் கிட்ட வாய்ப்புள்ளதா? என அந்த ஊடகவியலாளர் கேள்வி தொடுத்திருந்தார். அதற்குப் விநயமாகப் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன,சுதந்திரக் கட்சி ஜனநாயக நடைமுறைக்கு மதிப்பளிக்குமொரு கட்சி. பிரதமராக எவரை நியமிப்பதெனத் தீர்மானிப்பவர் கட்சியின் தலைவரான ஜனாதிபதியே. அவரது முடிவை கட்சியிலுள்ள நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வோம் எனத் தெரிவித்திருந்தார்.

அண்மையில் "நிமல் சிறிபால டி சில்வாவும் கூட பிரதமர் பதவியை உரிய வேளையில் உரிய நபருக்கு ஜனாதிபதி வழங்குவார். அது அவருக்கான உரிமை. கட்சியிலுள்ள நாம் அந்தப் பதவிக் காக எமக்குள் அடிபட்டுக்கொள்ள வேண்டியதில்லை" எனத்தெரிவித்திருந்தமையும் இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

உண்மையில் அன்று மைத்திரிபால சிறிசேன கூறியதும், அண்மையில் நிமல் சிறிபால கூறியதும் சரியான நிலைப்பாடுகளே. 1989ஆம் ஆண்டுப்பொதுத்தேர்தலில் லலித் அதுலத் முதலியும், காமினி திஸநாயக்கவும் பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்ள தம்மிடையே 'கன்னை' சேர்த்துப் போட்டி போட்ட போதிலும், ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ அந்தப் பிரதமர் பதவியை டி.பி.விஜேதுங்கவுக்கே வழங்கினார். 1993இல் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியானதையடுத்து,கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இருந்த நிலையிலும் பிரதமர் பதவியை ரணிலுக்கே வழங்கினார். 1995இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா பிரதமர் பதவியைத் தமது தாயாரான சிறிமாவோவுக்கே வழங்கினார். பின்னர் 2000ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலுக்கு முன்னர் சிறிமாவோவைப் பிரதமர் பதவியினின்றும் விடுவித்து ரத்னசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக நியமித்தார் சந்திரிகா. 1994 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றதால் ரணிலைப் பிரதமராக நியமிக்க வேண்டிய நிலை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. 2004ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் நாடாளுமன்றப் பெரும்பான்மையை காரணம் காட்டி, அமைச்சரவை பதவியேற்புக்கு முன்னரேயே,மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிக்கவுள்ளதாக அறிவித்தார் சந்திரிகா. பிரதமர் பதவியை லக்ஷ்மன் கதிர்காமருக்கு வழங்குவதாக ஜே.வி.பியினருக்கு சந்திரிகா வழங்கியிருந்த வாக்குறுதி இதன்மூலம் மீறப்பட்டது. இவையாவற்றையும் விட 2010ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டிசில்வா ஆகியோர் போன்றே பஸில் ராஜபக்ஷவும் பிரதமர் பதவிக்கு உரிமை கோரிய போதிலும், மஹிந்த அந்தப் பதவிக்கு தி.மு.ஜயரத்னவையே நியமித்தார்.



மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற ரீதியில் சந்திரிகாவும் மஹிந்தவும் ஜனாதிபதிப் பதவியை ஏற்று, பிரதமர் பதவிக்கு எவரை நியமிப்பதென முடிவு செய்யத்தமக்கு உரிய அதிகாரங்களைப் பயன்படுத்தியமை போன்று, இன்று ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட வேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை ஈட்டிக்கொள்ளுமானால், முன்னர் 1994இல் டி.பி.விஜேதுங்கவும், 2001இல் சந்திரிகாவும் மேற்கொண்டமை போன்று பிரதமர் பதவி எவருக்கு வழங்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கும் உரிமையை மைத்திரிபால ஐ.தே.கட்சிக்கு வழங்கக்கூடும். ஆனால் சுதந்திரக்கட்சி அத்தகைய பெரும்பான்மையை ஈட்டுமானால் குறிப்பிட்ட தீர்மானத்தை மைத்திரிபாலவே மேற்கொள்ள முடியும்.



அந்த வேளையில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவரை மைத்திரிபால பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்வாரானால்அதனை எவராலும் எதிர்க்க இயலாது. சுதந்திரக்கட்சியின் மஹிந்த தரப்பு உறுப்பினர்கள் அதனை எதிர்த்தாலும் சுதந்திரக்கட்சியின் தனது தரப்பு ஆதரவு உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களை ஒன்றிணைத்துக் கொண்டு தேசிய அரசொன்றை மைத்திரிபாலவால் உருவாக்க இயலும். மஹிந்தவுடன் இணைந்து செயற்படுவோம் எனக்கூறிக் கொண்டு சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தவுடன் ஒட்டிக்கொண்டிருப்பது தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தக்கவைத்து மஹிந்தவின் தலைமையில் அரசொன்றை நிறுவும் நோக்கத்திலாகும். மஹிந்தவின் பிரபல்யம் மூலம் நாடாளுமன்ற உறுப்பினரான பின்னர் அவர்களுக்கு அமைச்சர் பதவிகளே தேவைப்படும். எவர் பிரதமர் பதவியை வகிக்க வேண்டும் என்பது குறித்து அவர்கள் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

அதே வேளை தமக்கு மைத்திரிபாலவால் பிரதமர் பதவி வழங்கப்படாவிட்டால், தமது தரப்புப் பெரும்பான்மையை நிரூபிக்க மஹிந்தவால் ஐ.தே.கட்சியினதோ அல்லது சிறுபான்மைக் கட்சிகளினதோ நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவைத் தமது தரப்புக்குப் பெற்றுக்கொள்ள இயலப்போவதில்லை.

மொத்தத்தில், இதுவரை காலமும் தமது குடும்ப அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சுதந்திரக் கட்சியிடம் இருந்து பயனைப்பெற்றுவிட்டு, பின்னர் கறிவேப்பிலை போன்று அதனைத் தூக்கி வீசியமை போன்றே மஹிந்த செயற்பட்டிருந்தார். மைத்திரிபால போன்று, ஏனைய பலரும் மஹிந்தவின் இந்தப் போக்கால் தூக்கி வீசப்பட்ட கறிவேப்பிலை போலானார்கள். யானைக்கு ஒரு காலம் உண்டென்றால், பூனைக்கும் ஒரு காலம் வராமலா போகும் என்பதற்கொப்ப, மஹிந்தவிடமிருந்து பயனைப்பெற்றுக் கொண்டு கறிவேப்பிலை போன்று அவரை தூக்கி வீசும் நிலை ஏற்படக்கூடுமோ என்பதை உறுதியாகக் கூறமுடிய வில்லை.

# சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 2 | | 8 | | |
| | 5 | | | | | | 7 | |
| 7 | | 1 | | | | 9 | | 5 |
| | | | 9 | | 4 | | | |
| 6 | | | | | | | | 3 |
| | | | 7 | | 8 | | | |
| 2 | | 4 | | | | 3 | | 6 |
| | 9 | | | | | | 4 | |
| | | 5 | | 4 | | 2 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 2 | 9 | 5 | 1 | 6 | 3 | 7 | 8 |
| 8 | 5 | 3 | 7 | 9 | 4 | 6 | 1 | 2 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 3 | 9 | 6 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 7 | 5 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 2 | 8 | 7 |
| 3 | 6 | 2 | 1 | 5 | 7 | 8 | 9 | 4 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 9 | 5 | 2 | 6 |
| 5 | 9 | 8 | 4 | 6 | 2 | 7 | 3 | 1 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எதையும் துணிந்து செய்ய வேண்டும்

எமக்கு நாமே நன்மை செய்து மோட்சத்தை அடைவதைவிட மற்றவர்களுக்கு நன்மை செய்து, ஆயிரம் சொர்க்கத்துக்குச் செல்லத் தயாராக இருக்க வேண்டும்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் எமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கை.

சமயம் என்ற பெரிய கறவை மாடு பல முறை உதைத்திருக்கலாம். ஆனால் அதை நாம் பொருட்படுத்த வேண்டாம். காரணம் கறவை மாடு அதிகம் பால் தருகிறது. இதனால் பசுவின் உதையைப் பால்காரன் பொருட்படுத்த மாட்டான்.

துணிந்து செயற்படுங்கள். எதையும் முடிக்க வேண்டும் என்ற முடிவுடன் செயற்பாட்டில் இறங்குங்கள். முடியாது என்ற வார்த்தையை அகராதியை விட்டு அகற்றுங்கள்.

## நாளை

**ஆடி-12 செவ்வாய்க்கிழமை**

**28.07.2015**

திதி: துவாதசி மு.இ. 09.10 வரை

நட்சத்திரம்: கேட்டை பி.ப.12.25 வரை

சுபநேரம்: 10.32–12.02 வரை

இராகுகாலம்: 03.02–04.32 வரை

## மோர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்



வெயில் காலம் வந்துவிட்டாலே அனைவருக்கும் அதிகமாகத் தாகம் எடுக்க ஆரம்பித்துவிடும். தண்ணீர், குளிர்பானங்கள் என்று குடிக்கும் நாம், கொஞ்சம் மோர் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சியாக இருக்கும். வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் போது மோர் குடித்தால்உடலுக்கு நல்லது. மோர் இயற்கையான பானம் என்பதால் அதனை எந்தவிதப் பயமுமின்றிக் குடிக்கலாம். நன்கு காரசாரமான உணவை உட்கொண்ட பின்னர் வயிறு எரிய ஆரம்பிக்கும். அவ்வாறு வயிறு எரியும் போது, ஒரு குவளை மோர் குடித்து வந்தால், வயிறு குளிர்ச்சியடையும். அதிகமான உணவை உட்கொண்ட பின்னர் சிரமமாக இருந்தால், ஒரு குவளை மோர் குடியுங்கள். இது வயிற்றைச் சுற்றி எண்ணெய் மற்றும் நெய்யினால் ஏற்பட்ட படலத்தை நீக்குவதோடு, கொழுப்பையும் கரைக்கும். இதனால் தான் மோர் குடித்த பின்னர், வயிறு இலேசானது போல் இருக்கும். மோருடன் இஞ்சி, மிளகு மற்றும் சீரகம் போன்றவற்றைச் சேர்த்துக் குடித்து வந்தால், செரிமானம் நன்கு நடைபெறும். அதிலும் உங்கள் வயிறு உப்புசமாக, ஒருவித அசௌகரியமாக உணரும் போது, இதைக் குடித்தால், உடனடி நிவாரணம் கிடைக்கும். அதில் எலக்ட்ரோலைட்ஸ் மற் றும் தண்ணீர் அதிகமாக இருப்பதால், வெயில் காலத்தில் குடிக்கும் போது உடல் வறட்சி அடைவதைத் தடுக்கலாம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்




| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 600 | 600 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 300 | 250 | 400 |
| கணவாய் | 550 | 600 | 700 | 600 | 700 | 600 |
| பாரை | 600 | 600 | 600 | 700 | 500 | 400 |
| சுறா | 650 | 600 | 600 | 800 | – | 550 |
| சீலா | 300 | 500 | 500 | 500 | 500 | -- |
| விளை | 700 | 450 | 400 | 500 | – | 400 |
| முரல் | 300 | 400 | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 650 | 800 | – | 500 | – | 600 |
| ஒரா | 400 | 400 | 400 | 350 | – | – |
| திரளி | 250 | 250 | 220 | 120 | 200 | 300 |
| நகரை | 300 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 100 | 150 | 100 |
| ஓட்டி | 250 | 300 | 250 | 200 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 350 | 150 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | – | – |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்



| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 70 | 60–80 | 80 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 90 | 80 | 60–80 | 80 | 30 | 25–30 |
| கரட் | 140 | 140 | 140–300 | 120 | 160–180 | 300 | 200 | 180 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50 | 80 | 45 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 80 | 80 | 100 | 80–90 |
| பாகல் | 120 | 140 | 140 | 120 | 120 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80–90 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 80 | 100 | 100 | 80 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 120–160 | 120–160 | 160 | 140 | 160 | 100–110 | 120–[illegible] |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 20–30 | 60 | 15 –20 | 20–25 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 | 100–120 | 160 | 90 | 90–100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 40–60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 200 | 300–350 | 280 | 360 | 400 | 500 | 250 |
| புடோல் | 50 | 40 | 40 | 40 | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 80 | 100 | 60 |
| வெண்டி | 60 | 60 | 40 | 60 | 120 | 120 | 120 | 50 |
| போஞ்சி | 140 | 180 | 200 | 220 | 100–180 | 300 | 200 | 180 |
| லீக்ஸ் | 80 | 110 | 160 | 200 | 100–120 | 100 | 120 | 100 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 80–100 | 90 | 120 | 90–100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 40 | 60–70 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30– 40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 160 | 160 | 120 | 160 | 200–260 | 200 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | 100 | – | 140 | 80–100 | – | 160 | 80–90 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 120 | 120–140 | 140 | 200 | 120 |

# கைகள் சொல்லும் சோதிடம்



பெண்களின் கைகளது அமைப்பை வைத்து அவர்களது குணாதிசயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

- கைகள் மிருதுவாக இருந்தால், அத்தகைய பெண்கள் முயலும் எல்லா வேலைகளும் தடையின்றி நிறைவேறும், இலாபமும் கிடைக்கும், தர்ம காரியங்களில் அதிக ஈடுபாடு கொள்வார்கள்.
- கைகள் வறட்சியாகவும், நரம்புகள் வெளியே தெரியும்படியும் அமைந்திருந்தால், குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் அதிகமிருக்கும். கணவனும், பிள்ளை களுமே கூட விரோதிகளாவார்கள்.
- மணிக்கட்டுத் தெரியாமல் இருந்தால், அவர்களுக்கு ஆபரண யோகமும், தெய்வ அனுகூலமும் உண்டாகும்.
- உள்ளங் கைகள் சிறிது பள்ளமாக இருக்கும் பெண்கள் உத்தமிகள். உண்மையைப் பேசும் குணமுடையவர்கள். ஒழுக்கமானவர்கள்.
- உள்ளங்கைகள் அதிக பள்ளமாகவும், முக்கியமான ரேகைகள் மட்டுமே நன்றாக, தெளிவாகவும் பிரகாசமாகவும் இருந்தால் எந்தக்காலத்திலும் சரீர ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.
- பெண்களது கைகள் முழங்கால் அளவுக்கு நீண்டு தொங்கும்படி அமைந்திருந்தால், அவர்கள் சகல சௌபாக்கியம் கொண்டவர்களாக இருப்பார்கள். வாழ்க்கையின் சங்கடங்கள் எதையும் சிரித்த முகத்துடன் பொறுத்துக் கொள்வார்கள். பாசமானவர்கள். கணவனுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பார்கள்.
- கைகளில் அடர்த்தியான ரோமங்கள் காணப்பட்டால், அவர்கள் அளவுக்கு மீறிய காம இச்சையுடன் இருப்பார்கள். தம்மையும் மீறி ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவார்கள். குடும்ப வாழ்க்கையில் இவர்களால் நீடித்திருக்க முடியாது. கணவருக்கு உண்மையாக நடந்துகொள்ள மாட்டார்கள்.
- பெண்களின் கை விரல்கள் மென்மையாகவும், ஒழுங்காகவும், அழகாகவும் இருந்தால் சகல சௌபாக்கியங்களும் அமைந்திருக்கும். இத்தகைய பெண்களுக்கு புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகமிருக்கும். கணவனை மதிப்பார்கள். எல்லோரும் பாராட்டும் வகையில் நடந்து கொள்வார்கள். இனிமையாகப் பேச, பழகக்கூடியவர்களாக இருப்பார்கள்.
- நீண்ட கை விரல்களை உடைய பெண்கள் கலையார்வமுள்ளவர்கள். இவர்கள் இசை ஞானம் உள்ளவர்களாகவோ, இசைக் கருவிகளை வாசிப்பதில் பெரிதும் வல்லவர்களாகவோ இருப்பார்கள். சிலர் நாட்டியத்திலும், சிலர் நடிப்பிலும் சிறந்து விளங்குவார்கள்.
- கை விரல்கள் பருமனாகவும், முரடாகவும் அமையப் பெற்ற பெண்கள், உழைத்துச் சம்பாதித்து வாழ்பவர்களாக இருப்பார்கள். பொறாமைக் குணமுடையவர்களாகவும், கலகம் செய்பவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்குப் புத்திர பாக்கியம் அமைவது அரிது.
- கை விரல்கள் நெருக்கமாகச் சேர்ந்திருந்தால், கஞ்சத்தனம் மிக்கவர்களாகவும், பணம் சேர்ப்பதிலேயே எப்போதும் குறியாகவும் இருப்பார்கள்.
- விரல்கள் அதிகப் பருமனாக இருந்தால் கணவனுக்குக் கண்டம் உண்டாகும்.
- கைவிரல் நகங்கள் சொத்தையாகவும், கறுப்பாகவும் இருந்தால் ஆயுள்காலம் முழுவதும் கஷ்டமும், வறுமையும், பலரின் ஏளனமும் உண்டாகும்.
- விரல் நகங்கள் சிவந்து, பளபளப்பாக, அழகாகக் காணப்பட்டால் அந்தப்பெண்கள் ஆரோக்கியமானவர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பார்கள்.
- பெண்களது கைகள் சமமாக இருந்தால், அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். குடும்பத்தை நன்றாக நிர்வாகிப்பார்கள். பெரியவர்களிடம் மரியாதை மிக்கவர்களாக நடப்பார்கள்.

# பெண் மனது என்னவென்று புரியவில்லையே...

சோபனா

(தொடர்ச்சி....)

என் அழகிய கிளியே பார்! உன்னை எவ்வளவு விலையுயர்ந்த கூண்டிலே அடைத்து வைத்திருக்கின்றேன்.. இதைவிடக் கௌரவம் வேறென்ன வேண் டும் உனக்கு? என்று அது வரை சுதந்திர மாய்ப் பறந்துதிரிந்த கிளியிடம் கூறுவதற்கும் ஒரு மனைவியை அல்லது காதலியை அழ கிய துணிமணிகளாலும் விலையுயர்ந்த ஆப ர ணங்களாலும் அலங்கரித்து கருமையான கூந்தலழகியே.. கயல் விழித் தேனே காலம் முழுக்க நான் உன தழகுக்கு அடிமையே என்று பிதற்று வதற்கும் பெரிய வேறுபாடுகள் கிடையாது.


ஆண்களின் இந்தப் புகழ்ச்சிக்குப் பின்னாலிருக்கும் ஏமாற்றுச் சதிவலையைப் புரிந்து கொள்ளாத பெண்கள் வேண்டுமானால் ஏமாந்து போகலாம். ஆனால் உண்மை[illegible]ள நீண்ட காலத்துக்கு ஒளித்து வைக்க முடியாது. அது ஒரு பெண்ணின் கர்ப்பம் போல என்றாவது ஒருநாள் வெளிப்பட்டே தீரும். மனைவியைப் புகழ்வதிலே பாலியல் தேவைகள் என்ற தேவையுண்டு.

தாயைப் புகழ்வதற்குக், காரணமென்ன? மனிதன் உயர்நிலைப் பகுத்தறிவுள்ள விலங்கு. தான் புரியும் ஒவ்வொரு செயலுக்கும் தனது சமூகம் சார்ந்த பெறுமானங்களை அறிந்தும் புரிந்தும் வைத்திருக்கக்கூடியவன். எந்தவொரு தீங்கான செயலைச் செய்யும் போதும் உள்ளார்ந்த குற்றவுணர்வை வேறு ஏதோ ஒரு விதத்தில் சமாதானம் செய்ய வேண்டிய தேவை அவனுக்குள்ளது.

ஓர் ஆண் தாய் என்பவளை மிகைத்துப் போற்றுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒன்றில் சிறுவயதிலே தாயை இழந்ததனால் உண்டான பிரிவாற்றாமை ஏக்கமாக இருக்கலாம். இருந்தபோதிலும் தனது குற்றவுணர்வை சமாதானம் செய்யும் நோக்கமே பெரும்பாலும் உள்ளது. சிறுவயதிலே தனது குழப்படிகளால் தாயை வருத்திய குற்றவுணர்வுகள் இளைஞனானதும் தாயைச் சரிவரப் போஷிக்காத குற்றவுணர்வுகள்.. திருமணமானதும் தனது அன்றாட அலுவல்களினாலும் பொறுப்புகளினாலும் தாயைச் சென்று பார்த்துவரக்கூட முடியாத குற்றவுணர்வுகள் என்று உள்மனத்திலே ஏற்படும் போது அவற்றைச் சமாதானம் செய்ய ஏதாவது செய்தாக வேண்டுமே.

நமது சமூகத்திலேயுள்ள ஆண்கள் தங்களில் ஒருத்தியாகி ஒன்றாய் வாழும் பெண்ணை ஒன்றில் எட்டாத உச்சியில் கொண்டு நிறுத்துவார்கள், அல்லது அதல பாதாளத்தில் வீழத்துவார்களேயொழிய சமனாக மதிப்பதில்லை என்பதுதான் உண்மை.






இவ்வாறு மதிக்கா மல் இருப்பதற்கு அடிப் படைக் காரணங்கள் எதுவாக இருக்க முடியும் என்று பார்ப் போம். நாம் வாழும் குடும்பச் சூழல் தான் முக்கிய மான கார ணம். சிசு வாகப் பிறக் கும் ஓர் ஆண் குழந்தை ஓர ளவு தன் னைப் புரிந்து கொள் ளக்கூடிய பருவம் வந்தவுடன் ஆண்– பெண் பால் வேறுபாட் டையும் அவற்றுக் கிடையேயுள்ள சம மின்மையையும் தனது தாய் தந்தையிட மிருந்து தான் முதலில் புரிந்து கொள்கின் றான். வெகு அரிதான விதிவிலக்கு களைத் தவிர, தந்தை நினைத் ததை தடையின்றிச் செய்வதையும் சுதந்திர மாக இயங்குவதையும் மாறாக, தாய் அவ்வாறின்றி தனது பெரும் பான்மையான தேவைகளுக் கும் நட மாட் டங்களுக்கும் தந்தையைச் சார்ந்து வாழ் வதையும் பார்க்கின்றான். அத்துடன் அடிக் கடி தாயின் நியாயமான கோரிக்கைகள் கூட தந்தையினால் வரை யறுக்கப்படுவதையும் காண்கின்றான். அங்கிருந்தே ஆரம்பமாகின் றது ஒரு ஆண் மகனின் பெண்களின் மீதான மேலாதிக்கக் கருத்துருவாக்கம்.

இந்தக் கருத்து மேலும் வலுவடைவது தனது சகோதரி அல்லது உறவுப் பெண் பருவ வயதுக்கு வந்தவுடன் திடீரென வேறுபட்டு நடத்தப்படும் விதம். அவளை சுயமாக நடமாட விடாது கட்டுப்படுத்துவதும் அவளது நிலை குறித்து குடும்பத்தினரால் அதீத கவனம் செலுத்தப்படுவதும் சிறிய சிறிய மீறல்களுக் கெல்லாம் அவள் கண்டிக் கப்படும் விதமும் அவ னைப் பெரும் குழப்பத்துக் குள் ளாக்குகின்றன. பல வேளைகளிலே அதற் குரிய உருப்படியான கார ணங்கள் கூட அவனுக்குச் சரிவரக் கூறப்படுவ தில்லை. இதனால் ஆண்– பெண் எனும் பால்வேறு பாடுள்ள மனிதர்களின் இயற்கையான உடல் சார்ந்த வேறுபாடுகள் பற் றிய புரிந்துணர்வு முறை யாகச் செய் யப்படாத வெற்றிடம் ஒன்று அவனி டம் உருவாகின்றது.

அந்த வெற்றிடத்தை உட னடியாக நிரப்புவது அவ னது வயதொத்த கற்றுக் குட்டி நண்பர்களே. முறை யான பாலியல் கல்வி மூல மாகச் செய்யப்பட வேண்டிய மேற் கூறப் பட்ட விட யம் கற்றுக்குட்டித்தன மான அரை குறை விளக் கங் களால் நிரப்பப்படுகின்றது. இதனால்தான் பொதுவாக ஆண்கள் இளம் பருவத்தை எட் டும்போது தமது நண்பர் வட் டத்தின் தன்மைகளுக்கேற்ப பெண்கள் பற் றிய தவறான கண்ணோட்டங்களுக்கும் வக் கிர உணர்வுகளுக்கும் ஆளாகி விடுகின்றனர்.

இன்றைய முதலாளித்துவ சமூக நுகர்வுக் கலாசாரத் தின் விளைவுகளான சினிமா, தொலைக்காட்சி, நச்சு இலக்கியங்கள், விளம்பரங்கள் போன் றவை பெண்களை வெறும் போகத்துக்குரிய உயிரினங்களாக மட்டுமே கருதுகின்ற வக்கிர உணர்வுகளையும் மரியாதையின்மையையும் மேலும் தூண்டி விடுகின்றன.

சில சமூகங்களிலே பின்பற்றப்படும் நம்பிக் கைகள் சார்ந்த கருத்தாக்கங்களும் ஆண் களின் மனதிலே பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதும் எண்ணப்பாங் குகளுக்குக் காரணமாக இருந்து வருகின் றது. ஆண்கள்–பெண்கள் தொடர்பாக எத்தகைய வழிமுறைகள் காலம் காலமாக வலியு றுத்தப்பட்டு வருகின்றதோ அத்தகைய நிலைப் பாடே ஆண்களின் மனோபாவமாக உரு வெடுத்து வளருகின்றது. கல்வி வளர்ச்சி, தர்க்க ரீதியான சிந்தனை, ஏனைய சமூகங் களின் இடைத்தாக்கங்கள் இத்தகைய நம் பிக்கைகள் சார்ந்த கருத்தாக்கங்களில் தாக் கங்களை விளைவித்தாலும் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்குவதில்லை.

உதாரணமாக:– ஓர் ஆண்மகன் தனது துறை சார் கல்வியினூடாக தனது சமூக நம்பிக்கைகள் பற்றி எழும் கேள்விகள் குறித்து சிந்திக்க முன்வருவதில்லை. இதற்குரிய காரணங் களில் ஒன்றாக அந்த நம்பிக்கைகளைக் கேள்விக்குட்படுத்தம்போது தான் வாழும் சமூகத்திலிருந்து கிடைக்கும் உவப்பற்ற எதிர் வினைகளைக் கூறலாம். இதைவிடவும் முக் கியமான காரணம் ஒன்றுள்ளது.

இயல்பாகவே சமூக நம்பிக்கைகளால் ஆண் களுக்குத் தரப்பட்டிருக்கும் பெண்களை மேலாதிக்கம் செய்யும் வசதியை அவர்கள் இழக்க விரும்புவதில்லை. இதன் காரணமாக ஓர் ஆண்மகன் எவ்வளவுதான், தான் சார்ந் திருக்கும் துறையில் பெரும் அறிஞனாகவோ புத்திஜீவியாகவோ இருந்தபோதிலும் தனது சமூகம் பின்பற்றி வருகின்ற நம்பிக்கை மரபுகளைக் கேள்விக்குட்படுத்துவதில்லை.



# புத்தளம்





புத்தளம் இலங்கையின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். இது வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ளது. இது அதே பெயரையுடைய புத்தளம் மாவட்டத்தின் தலைநகரமுமாகும். கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி 130 கி.மீ (81 மைல்) தூரத்தில் கடல் நீரேரியைத் தொட்டவாறு காட்சி தரும் நகரம் புத்தளம். கற்பிட்டி நகரையும் புத்தளம் நகரையும் இணைத்து "28 கி.மீ (17 மைல்) நீண்டிருக்கும் கடல்நீர் ஏரி புத்தளம் நகரை அண்மித்ததாகத் தான் தனது இறுதி எல்லையைப் பூர்த்தி செய்கிறது. புத்தளம் நகருக்கும், கற்பிட்டிக்கும் இன்னும் பல கிராமங்களுக்கும் உயிரோட்டமான அழகைத் தருவதில் இந்தக் கடல் நீர் ஏரிக்கு முக்கிய பங்குண்டு. உள்நாட்டுக்குள் அமைந்த மிகப் பெரிய நீர்ப் போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றாக இதைக் குறிப்பிட முடியும். ஆங்கிலேயர் காலத்தின் பிற்பகுதி யில் கொழும்பிலிருந்து கற்பிட்டி வரை தரைப் பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தான் இந்த நீர் ஏரியூடான போக்குவரத்து படிப்படியாக நிறுத்தப்பட்டது. சிறிய, பெரிய அளவில் பலநூறு கிராமங்கள் ஒன்றிணைந்து கைத் தொழில், கல்வி, வர்த்தகம், மீன்பிடி, உப்பு உற்பத்தி, இறால் பண்ணை என்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு இந்த மாவட்டத்தின் வளர்ச்சியில் பங்கேற்று வருகின்றன. இலங்கையில் குடியேற்றம் ஆரம்பமாவதற்கு முதல்வராக இருந்த விஜயன் மற்றும் அவனுடைய சகாக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தி றங்கியது புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தம்ப பன்னி பிரதேசத்திலேயேயாகும். மேலும் விஜயன் அரசனாவதற்கு உதவி புரிந்ததாக கூறப்படும் குவேனி என்பவளின் இருப்பிடமும் இப்பிரதேசத் திலேயே இருந்துள்ளது. பிற்காலத்தில் விஜய அரசர் இந்தியாவிலிருந்து வரவ ழைக்கப்பட்ட புத்தகச்சான எனும் இளவரசியைத் திருமணம் செய்ததால் அங்கிருந்து சென்ற குவேனி தோணிகல எனும் பிரதேசத்தில் வாழ்ந்ததாகக் கதைகளில் கூறப் படுகின்றது. இந்தப் பிரதேசத்திலேயே இலங்கையின் மிக நீண்ட கல்வெட்டும் காணப்படுகின்றது. இது புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேசத்தில் அமைந்துள்ளது. தெங்கு முக்கோண பிரதேசத்துக்கு உட்பட்ட தெதுறு ஓயா மற்றும் மா ஓயா வரையிலான பிரதேசமானது தெங்கு உற்பத் தியில் சிறந்து விளங்குவதடன் அதற்கான சிறந்த மண்வளமும் இங்கு காணப்படுகிறது. உப்பு உற்பத்தியும் இந்த மாவட்டத்தில் சிறந்து விளங்குவதோடு இறால் வளர்ப்பும் பொருளாதார ரீதியாக இலாபமீட்டக்கூடிய தொழிலாகக் காணப் படுகிறது.

# பாறையில் வளர்ந்த செடி!




சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்காக மகேஷ் வெளியூருக்குச் சென்றிருந்தான். சென்ற இரண்டு வாரத்திலேயே மீண்டும் வீட்டுக்கே திரும்பி வந்தான். இனிமேல் வேலைக்கு போக மாட்டேன் என்று முடிவு செய்திருந்தான்.

இதையறிந்த அவனது தாத்தா, மகேஷ் திரும்பி வந்ததற்கான காரணத்தைக் கேட்டார். தாத்தா! தொழில் செய்கின்ற இடம், சூழ்நிலை எதுவுமே சரியில்லை. அந்தத் தொழிலைச் செய்ய எனக்கும் திறமை போதாது என்றான் மகேஷ். தாத்தா அவனைக் அழைத்துக் கொண்டு போய் தோட்டத்தில் இருந்த பாறையைக் காட்டினார். அந்தப் பாறையின் இடையில் ஆலமரச் செடி ஒன்று முளைத்திருந்தது.

அதைக் காட்டி, ஒருமரம் வளர நல்ல மண், நீர், காற்று, வெப்பம் அவசியம். ஆனால் இந்தச் செடிக்கு தேவையான எதுவுமே இங்கு கிடைக்கவில்லை, இருந்தாலும், முளைத்தே தீருவேன் என்று முயற்சி செய்து பாறையிலேயே வளர்ந்திருக்கிறது பார்த்தாயா என்றார்.

நீயும் எதையும் தடை என்று காரணம், காட்டாதே முன்னேறுவேன் என்ற முயற்சியோடு, உழைத்தாலே எதிலும் வெற்றி பெறலாம் என்றார் தாத்தா. அப்போது தான் உண்மை மகேஷுக்குப் புரிந்தது. நம்பிக்கையோடு தனது தொழிலைத் தொடங்க அங்கிருந்து புறப்பட்டான் மகேஷ்.



# திருப்தியே வாழ்வு

நாம் இருப்பதைக்கொண்டு, திருப்தி அடைவது எப்படி என்பதை உணர வேண்டும். இல்லாத ஒனறுக்காக நாம் கவலைப்படக்கூடாது. எமக்கு எந்தத் திறமை இருக்கின்றதோ அதனை நாம் வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஞானி ஒருவர், தனது சீடர்களுடன் பாலைவனத்தில் நீண்ட தூரம் நடந்து சென்றார். வழியில் தங்கி இளைப்பாற ஒரு நிழல்கூட இல்லை. பசி வேறு வாட்டி எடுத்தது. சீடர்களோ நன்றாகக் களைத்துப்போய் விட்டனர். நாள் முழுவதும் நடந்து களைப்படைந்தவேளையில் ஒரு ஈச்சமரச் சோலையைக் கண்டு, அங்கே தங்கிப் படுத்து இளைப்பாற ஞானி முடிவு செய்தார்.



வழமைபோல படுப்பதற்கு முன்னர் ஞானி கடவுளுக்கு நன்றி சொன்னார். இன்று எம்மை எல்லாம் நன்றாகப் பராமரித்தீர்கள் நன்றி கடவுளே என்று மனதார வேண்டினார். உடனே ஒரு சீடன் கேட்டான், குருவே இன்று முழுவதும் பசியோடும் களைப்போடும் நடந்தோம், நீங்களோ நன்றாகப் பராமரித்தீர்கள் இறைவா என்று வேண்டுகிறீர்களே, ஒன்றும் புரியவில்லை என்றான். அதற்கு ஞானி ஆம் சீடனே இன்று இறைவன் நமக்குப் பசி, களைப்பு போன்ற உணர்வுகளை மிக அதிகமாகவே தந்திருக்கின்றார். பசி என்றால் என்ன? களைப்பு என்றால் என்ன என்ற உணர்வு பூர்வமான புரிதலைத் தந்த இறைவனுக்கு நன்றி என்றார் ஞானி. ஆம் இன்பங்களைப் போல துன்பங்களும் ஒருவகை உணர்வுகள்தான். துன்பத்தை அறியாமல், இன்பத்தைப் புரிந்து கொள்வது கடினமானது. பசி பட்டினி என்ற துன்பம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளும் அறிவு இருந்தால் வாழ்வு இனிக்கும்.



## பிரித்தறிதல்

மரஞ்செடி– மரம் +செடி
அறஞ்செயல்– அறம் +செயல்
நற்றுணை– நல் +துணை
மதுரக்கனிகள் – மதுரம் +கனிகள்
அளவில்லாத– அளவு +இல்லாத
எண்ணுவதுயர்வு– எண்ணுவது+ உயர்வு

பா.தாட்சாயினி
கொக்குவில் இந்துக்கல்லூரி

# ஒற்றையாட்சியை ஏற்கமறுத்து வாக்குகள் மூலம் உணர்த்துங்கள்

## பருத்தித்துறையில் இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு



கரணவாய், ஜூலை 27

தனித்துவமான அடையாளங்களை கொண்ட இனமாகிய நாங் கள் ஒற்றையாட்சியை ஒரு போதும் ஏற்கவில்லை என்பதை வாக்குகள் மூலம் உணர்த்துங்கள் என தமிழ் மக்களிடம் அறைகூவல் விடுத்திருக்கின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் பருத்தித்துறை முனைக்கடலோரமாக உள்ள திறந்த வெளி அரங்கில் நேற்று பிற்பகல் பருத்தித்துறை நகர சபை நகரபிதா சபா ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது .இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்த நாட்டு பிரதி நிதி இங்கு வந்தாலும் எங்களைத் தான் அழைக்கின்றனர். இதனால் சர்வதேசத்தினால் தமிழ் மக்களின் பிரதி நிதிகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்பது அவர்களுக்கு தெரியும். எனவே நீங்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குரிய அங்கீகாரத்தை வழங்க முன் வர வேண்டும்.எனது விருப்பம் இங்கே வாக்கு கேட்கும் ஏனைய கட்சிகள் இல்லாமல் போக வேண்டும் அதற்கு உங்கள் வாக்குகள் பயன்பட வேண்டும். நேற்றைய தினம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டோம் அதில் எமது மக்களின் பிரச்சினைகள் பற்றி தெளிவாக கூறியிருக்கிறோம் எமது மக்களின் இறைமையின் அடிப்படையில் நாங்கள் ஒரு தனித்துவமான இனம். எங்களுக்கு தனித்துவமான மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியங்கள் உண்டு அவர்கள் சரித்திர ரீதியாக வடக்கு கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்த பிரதேசங்களில் போதிய அளவு சுயாட்சியுடன் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை மக்கள் பெற வேண்டும். தங்களுடைய சமூக பொருளாதார கலாசார அபிலாஷைகளை தாங்களே நிறைவேற்றக்கூடிய வகையில் அவர்களுக்கான அரசியல் தீர்வு அமைய வேண்டும். ஏனைய கட்சிகள் எதுவும் எமது மக்களின் உரிமை பிரச்சினை தொடர்பில் ஒரு விஞ்ஞாபனத்தை முன்வைத்திருக்கிறார்களா?

ஐக்கிய தேசியக் கட்சி சொல்லியிருக்கிறது, அதியுச்ச அதிகார பகிர்வு கொடுக்கப்படும். ஆனால் ஒற்றையாட்சியின் அடிப்படையில் கொடுக்கப்படும் என்று அந்த ஒற்றையாட்சியின் அர்த்தம் என்னவென்றால் பெரும்பான்மை ஆட்சி அதாவது பெரும்பான்மை கொடுமை ஆட்சி. அதைத் தான் கடந்த 60 ஆண்டு காலமாக அனுபவித்து வந்திருக்கிறோம். அதை அவர்களால் இன்னும் கைவிடவில்லை திருகோணமலையில் ஐ.தே.கவில் தமிழ் வேட்பாளர் இல்லை அதை அவர்கள் தேட முடியவில்லை.

எனவே நீங்கள் ஐ.தே.க வேட்பாளரை தெரிவு செய்தால் ஒற்றையாட்சியை ஏற்றவர்கள் ஆகிவிடுவீர்கள். டக்ளஸ் தேவானந்தா மஹிந்தவுடன் ஒட்டிக்கொண்டிருந்தவர் வலிகாமத்தில் உங்கள் வீடுகள் உடைக்கப்பட்ட போது உங்களது ஆலயங்கள் உடைக்கப்பட்ட போது உங்கள் வாழிடங்கள் பறிக்கப்பட்ட போது முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்னுடன் தொடர்பு கொண்டு இவ்விதமான கருமம் நடைபெறுகிறது ஜனாதிபதியுடன் பேசுங்கள் என்றார். நானும் ஜனாதிபதியுடன் பேசினேன் அப்போது இவர்கள் அங்கு ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் ஜனாதிபதி நிறுத்துங்கள் என்றார் நிறுத்தப்பட்டது. மீண்டும் அது ஆரம்பிக்கப்பட்டது இவர்களுக்கு நீங்கள் வாக்களிக்களிக்கலாமா? எமது விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு, எமது காணிகள், விதவைகள், போராளிகள் மக்களின் பிரச்சினைகள், இராணுவ மயமாக்கல் , இளைஞர்களின் வேலைவாய்ப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் எல்லா விடயங்களை பற்றியும் கூறியிருக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் புரிந்துணர்வு தொடர்பில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு தொடர்பாக எமது நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாக கூறியிருக்கிறோம் உங்களுடைய அங்கீகாரத்தை வேண்டி நிற்கிறோம்.

யாழ்ப்பாணத்தின் 7 ஆசனங்களையும் நாங்கள் கைப்பற்றினால் அங்கீகாரம் வழங்கியதாக அமையும் எனவே மக்களால் அங்கீரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தீர்வு தேவை என நாங்கள் இன்னும் உறுதியாக உரத்த குரலில் கோருவோம் அதனை நாம் பெறுவோம்

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு எமது பிரச்சினை சர்வதேசமயமாகியிருக்கிறது. ஐ.நா. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஒரு சர்வதேச விசாரணை இடம்பெற்று அதன் அறிக்கை புரட்டாதி மாதம் வெளிவரவிருக்கிறது அதன் முடிவுகள் பாரதூரமாக அமையும். பொறுப்பு கூற வேண்டிய கடப்பாடு பலருக்கு ஏற்படும் உண்மை வெளிவரவேண்டும் அதனை அனைவரும் அறிய வேண்டும். உண்மையின் அடிப்படையில் நீதி நிலைநாட்ட வேண்டும். அதன் அடிப்படையில் பரிகாரம் வழங்கப்பட வேண்டும் அதன் மூலம் இதற்கு பிறகு இப்படி ஒன்று நடக்க கூடாது இதன் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கு நல்லிணக்கம் புரிந்துணர்வு உண்மையில் ஏற்படக்கூடிய வகையில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் இவை பற்றி விஞ்ஞாபனத்தில் நாம் கூறியிருக்கிறோம் எனவே நீங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் இந்த நிலைப்பாடுகளுக்கு அளிக்கும் வாக்காகும் சரித்திர ரீதியில் வாழ்ந்து வருகின்ற இனமென்ற ரீதியில் நாம் எமது விஞ்ஞாப னத்தை முன்வைத்திருக்கிறோம் அதனை நீங்கள் அங்கீகரிக்க முன் வர வேண்டும் என்றார். (ற-108-109)

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணி முஸ்லிம் காங்கிரஸ் உடன்படிக்கை

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கும் இடையில் தேர்தல் உடன்படிக்கை ஒன்று கைச்சாதிடப்பட்டுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எம்.அப்துர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்பாராத விதமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியும் இந்தத் தேர்தலுக்காக கூட்டிணைந்தமை முஸ்லிம் அரசியலில் பல அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டணியின் நோக்கங்கள் குறித்து நேற்றுமுன்தினம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டபின் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இவ்வுடன்படிக்கையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹசன் அலி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் அதன் பொதுச் செயலாளர் எம்.ஆர்.நஜா முஹம்மத் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான பொறியியலாளர் எம்.எம்.அப்துர் ரஹ்மான், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் உட்பட இரு கட்சிகளின் முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். (ற)

# நாட்டின் அபிவிருத்திக்கு ஒற்றுமை மிக அவசியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

நாட்டின் அபிவிருத்திக்கு சகல துறைகளிலும் ஒற்றுமை அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவ்வாறு இல்லையேல் அரச நிறுவனங்கள் பலவற்றில் உள்ளூர் மற்றும் தேசிய திட்டங்களின் போது இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்வது கடினம். அதனால் வேலைத் திட்டங்களுக்கு ஏற்படும் தடைகள் மற்றும் தாமதங்கள் குறித்து நான் நன்கு அறிவேன்.

எனவே, அவ்வாறான நிலைமைகளை முற்றிலுமாக நீக்கிக்கொள்வது முக்கியம்.- என்றார்.(ற)

# பொதுத்தேர்தல் வெற்றியின் பின் பெண்களுக்கான ஆணைக்குழு

## அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவிப்பு

நாட்டிலுள்ள பெண்களை வலுவூட்டி அவர்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தேர்தலின் பின்னர் பெண்களுக்கான தேசிய ஆணைக் குழுவொன்று அமைக்கப்பட விருப்படவுள்ளதாக சிறுவர் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு பெண்களின் வளர்ச்சி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீதான அக்கறையை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளது. இதனூடாக பெண்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக அமையும்.

பெண்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சகல தேர்தல் தொகுதிகளிலும் பெண்களுக்கான கவுன்சிலிங் நிலையங்கள் அமைக்கப்படும். அடிப்படை கல்வியான ஆரம்பக்கல்வி கற்பிப்பதற்கு பெண்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைத் திட்டங்கள் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இவை முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும்.

ஊழல், மோசடிக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மஹிந்த ராஜபக்ஷவும் அவருடைய சகாக்களும் மீண்டும் ஆட்சிக்கு வருவது நாட்டை அபிவிருத்தி செய்யவல்ல, மேலும் கொள்ளைகளை மேற்கொள்வதற்கே. - என்றார். (ற)

# ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினால் ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல்

## பொது பல சேனா பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 27

பொது பல சேனா அமைப்பின் செயலாளரும் பொதுஜன பெரமுன கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு முகப்புத்தகத்தின் ஊடாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவித்து நேற்று பொலிஸ் தலைமையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் தலைவரும், பொது பல சேனாவின் நிறைவேற்று அதிகாரியுமான திலந்த விதானகே,

எமது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தால் அதைப்பற்றி கவலையில்லை. இதன்மூலம் நாட்டில் இனவாதத்தை தோற்றுவிக்க இடமளிக்கக் கூடாதென தெரிவித்தே நாம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். மேலும் இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் முறையிடப்படும். எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் செயற்பாடுகள் குறித்து மாதக் கணக்கில் நாம் கருத்துக்களை வெளியிட்டு வந்தபோதும், ஜனாதிபதி அதன் அபாயத்தை உணராமல் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றார்.

பொதுபல சேனா அமைப்பினரை பற்றி ஐ.எஸ் தீவிரவாதிகள் தற்போது தகவல் சேகரித்து வருவதாக எமக்கு அறியக்கிடைத்துள்ளது. இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அப்பால் மிகப்பயங்கரமான தீவிரவாத அமைப்பொன்று அபாயம் உள்ளதெனவும், அதற்கு இடமளிக்கக் கூடாது.- என்றும் தெரிவித்தார். (ற-ரி)

**KVS கவிஷா விஷ்மி சப்ளையர்**

சிவப்பு கிறவல் - தரம் 1
மண்
கல் : 6x9,3x3,1x1½
A,B,C
தொடர்பு :
077 625 8995
077 174 8995
தொடர்பாளர் : அனுர

**03 அறைகள் வாடகைக்கு**

இராமநாதன் வீதியில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு (இணைந்த குளியலறை) வசதியுடன் 3 அறைகள் உடன் வாடகைக்குண்டு (அனைத்து இனத்தவர்கட்கும்)
(63418) தொடர்பு:-077 990 6362

**ஆங்கிலக்கல்வி**

6 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில மாதக்கட்டணம் 500/= ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.
424 K.K.S வீதி யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 675 1649

**திருமண சேவை**

பட்டதாரிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், வங்கியாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரது ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. மணமக் களை நாடுவோர் நம்மைநாடவும்.

"சிவா திருமண சேவை"
யாழ்/இந்து மகளிர் கல்லூரியடி 100 அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 899 6281 (63419)

# பிரதமருடனான பேச்சு தொடர்ந்து நடைபெறும்

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஜுலை 27

பொதுத்தேர்லின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் பேச்சு ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாத்தன்டிய பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அங்கு தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினோம், அவசியம் ஏற்பட்டால் இன்றும் கலந்துரையாடுவோம் நாளையும் கலந்துரையாடுவோம். அதற்கு யாராவது ஐக்கிய தேசிய கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து விட்டதாக கூறினால் அது எங்களுக்கு பிரச்சினை இல்லை.

நாங்கள் பிரதமருடன் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் என்றால் அவர் எங்கள் வீட்டிற்கு வரமாட்டார். நாங்கள் தான் அவர் இருக்கும் இடத்திற்கு தேடி செல்ல வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் கலந்துரையாட வேண்டும் என்றாலும் அவருடைய இடத்திற்கு நாங்கள் தான் செல்ல வேண்டும்.

இதனை பலர் பவ்வேறு வகையில் குற்றம் சுமத்துகின்றனர். நாட்டை சரியானதொரு பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றால் பிரதமர் மாத்திரமல்ல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்றோரிடமும் நாங்கள் கலந்துரையாடுவோம்.- என்றார். (ற)

**Vacancies**

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Assistant Center Manager - Male**
The applicant should posses a computer Degree qualification or Higher Diploma from Recognized Institution (Age 24-28)

**Course Counselor - Female**
பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும். (Age 19-24)

**Lecturer for Java, C, C++ - Male / Female**

**Lecturer for AutoCAD (Part time) - Male**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**
hoartwork@gmail.com

**VACANCIES**

முன்னணி கணினி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப் போதனாசிரியர் - முழுநேரம்
(பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
- வரவேற்பாளர் (Receptionist)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்: 5072
உதயன் பப்ளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நவாலியில் இன்று மாபெரும் தேர்தல் (TNA) பிரசார கூட்டம்**

இடம்:- நவாலி முருகமூர்த்தி கோயில் முன்றில்
காலம்:- 27.07.2015 மாலை 5.00 மணி
தமிழ்அரசு முதன்மை வேட்பாளர்
மாவை சோ.சேனாதிராசா
யாழ் -வன்னி மைந்தன் வேட்பாளர்
சிவஞானம் சிறிதரன்
ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.
அனைத்து அன்புள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நவாலி(VSW) (63389) பிரசாரப்பிரிவு

**தேவை**

யாழில் உணவகமொன்றிற்கு றொட்டி றைஸ் வேலை தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு: 075 242 1936

**வீடு வாடகைக்கு**

நுணாவில் மேற்கில் நான்கு அறைகள் விசாலமான இரண்டு விறாந்தையும் மின்சாரம் குழாய் நீர் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 486 6659
077 335 3502

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



# இளைப்பாறு மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நீர்வேலி வடக்கு சியாக்காடு இந்து மயானத்தில் இளைப்பாற்று மண்டபம் ஒன்று அமைக்கப் பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தியாகராசா அழகரட்ணம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் பல லட்சம் ரூபா செலவில் இந்த இளைப்பாற்று மண்டபம் அமைக் கப்பட்டது.

இந்த மண்டபத் திறப்புவிழாவில் வலி.கிழக்கு பிரதேச சபை தலைவர் கே.துரைசிங்கம் வட மாகாண சபை உறுப்பினர் கலாநிதி.க.சர்வேஸ் வரன் ஆகியோர் கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைத்தனர். (ற–17)

# ஆபாசப்படம் வைத்திருந்த நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கையடக்க தொலைபேசியில் ஆபாசப்படங் களை வைத்திருந்த பூங்கா வீதி, குருநகரை சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ்ப்பாண பகுதி யில் வைத்து கைது செய்ததாகப் பொலிஸார் தெரி வித்தனர். குறித்த இளைஞரை யாழ்.நீதி வான் நீதிமன்றில் முற்படுத்தியபோது இளைஞரை 2 ஆயிரத்து 500 ரூபா அப ராதம் செலுத்துமாறும் 50 மணித்தியாலம் சமூகசேவை செய்யுமாறும் உத்தரவிட்ட நீதிவான் ஆபாசக்காட்சிகள் அடங்கிய நினைவக அட்டையை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (ற–103)

# துப்பாக்கிச் சூட்டில் பாதாளக் குழு உறுப்பினர் பலி

தங்காலை பகுதியில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டில் 'உக்குவா' என்று அழைக் கப்படும் பாதாளக் குழு உறுப்பினர் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரு மான ருவன் குணசேகர தெரிவித் துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பு டைய ஒருவரே பலியாகியுள்ளார் என்று தெரியவந்துள் ளது.

இது குறித்தவிசாரணைகளைதங்காலைபொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் மேலுமொரு இலங்கையர்?

கொழும்பு, ஜூலை 27

சிரிய அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடு படும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப் பில், மேலும் ஒரு இலங்கையர் உள்ளதாக, ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் சிரியாவில் கொல்லப்பட்ட அபு சுராயா சைலானி என்பவரின் மைத்து னரே இவர் என குறிப்பிடப்படுகிறது.

தௌஹீர் அஹமட் தாஜுதீன் என்ற இவ ரும் கண்டி கலேவலையைச் சேர்ந்தவ ரென தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக அபு சுராயா சிரியாவில் கொல்லப்பட்டதை முகநூலில் இவரே தெரிவித்ததாகவும், பின்னர் அவர் தாமாகவே முகநூலிலி ருந்து விலக்கிக்கொண்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

ஏற்கனவே கொல்லப்பட்ட இலங்கையர் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களும் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், தற்போது இன்னொருவர் பற் றிய விவரமும் வெளியாகியுள்ளமை விசார ணைகளில் திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

# இளைஞர்களுக்கு 50 ஆயிரம்: வெளிநாடு செல்வதற்கு கடன்

### பிரதமரானால் வழங்குவாராம் மஹிந்த


கொழும்பு, ஜூலை 27

தான் அதிகாரத்திற்கு வந்தால் 18 வயது முதல் 30 வயது வரை யான இளைஞர்களுக்கு 50 ஆயிரம் ரூபா மற்றும் வெளி நாடு செல்ல கடன் தொகை என்பன பெற்றுக் கொடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மக்கள் சந் திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

12 அம்ச வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் வளர்ச்சி வீதத்தை அதிகரிக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். மேலும் 6 ஆயிரம் ரூபா வரை மஹபொல புலமைப்பரிசிலை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற–ரி)


## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இராமநாதன் கோபாலபிள்ளை**

நயினை மடியில்
03.09.1936

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் அடியில்
19.07.2002


திதி: பூர்வபட்ச ஏகாதசி

தீபமாய் ஒளி தந்து தலைவனாய் வழிகாட்டி
பூவாய் நாம் வாழ தன்னை உருக்கி
தரணியில் எம்மை நிறுத்தி வாழ வைத்த தெய்வத்தின்
பாதத்திற்கு சமர்ப்பணம்.

2/1, முத்த விநாயகர் வீதி, நல்லூர்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியைச் சேர்ந்த கல்விசாரா ஊழியர் **திருமதி ம.சசிதா** அவர்களின் பாசமிகு மாமியார் **சுப்பிரமணியம் இராசம்மா** 22.07.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(63408)

## மரண அறிவித்தல்

**தம்பு சின்னையா (அப்பையா)**



மட்டுவில் தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சின்னையா (அப்பையா) நேற்று முன்தினம் (25.07.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ் சென்றவர்களான வயிரவன் அன்னமுத்து தம்பதியரின் மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் யசிதரன், வசிகரன்(சுவிஸ்), விஜியநிர்மலா(லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராஜினி, மதி(சுவிஸ்), ரவிகரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரெபேக்கா, அஞ்சலோ, கேரகன், வாரகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சின்னத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தொடர்பு :- 021 205 7528

(63417)

தகவல் :- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி ஞானம்மா சிசீலியா ஆசீர்வாதம்**
(அம்மம்மா)



யாழ்/ பாண்டியன் தாழ்வு சுண்டுக் குளியை பிறப்பிட மாகவும் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி ஞானம்மா சிசீலியா (அம்மம்மா) ஆசீர்வாதம் 25.07.2015 சனிக்கிழமை கால மானார் .

அன்னார் காலஞ்சென்றவர் களான அருணாசலம் தம்பையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகப்பர் ஞானப்பிரகாசம் - எலிசபெத் தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற ஞானப்பிரகாசம் ஆசீர் வாதத்தின் அன்பு மனைவியும் அருளானந்தம், திரேஷ்கமலா, அன்ரன் , ஜோசப் நித்தியானந்தம், யேசுதாசன் செல்வராசா, காலஞ்சென்ற ஜோர்ச் குலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வினிபிறட், அன்ரனி றெஜினோல்ட், றாகினி, லலிதா, சறோஜா, சுசீலா, ஆகியோரின் மாமியாரும் வினிநர்மதா, ஜெனிபர் சரண்யா, றொட்னி பிரசாந், கிளிங்ரன் மெலான், செறின் சிரோமி, றெமோ சிகான், அனுஷா நிரோஜி, கிறிஸ்ரி சுமணன், ஆழின் விமிரா, பியோ கபில்றோய், கரோலின் துஷாரா, ஆன் சுகன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரோஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.07.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்/ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29/4 A புதுவீதி, ஒழுங்கை, கொய்யாத்தோட்டம் , யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
08.06.1938

விண்ணில்
06.08.2014

அமரர்
**வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்(J.P)**

திதி 27.07.2015 (ஆடி மாத ஏகாதசி)

நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள்
அழிவதில்லை
கனவுகள் ஓயவில்லை காயங்கள் ஆறவில்லை
ஈராறு மாதங்கள் அல்ல ஆயிரம் ஆண்டுகள்
மறைந்தாலும்
நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்
அப்பா........

"59/1 மருதடிவீதி
யாழ்ப்பாணம் .
021 2225638
0212227286

உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

ஓம் மங்கலேஸ்வரி அம்மன் துணை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூலோகம்
20 * 05 * 1945



கைலாயம்
06 * 08 * 2014

**திருமதி மங்களேஸ்வரி நடராசா**

மண்ணுலக வாழ்க்கை பொய்யென்று எண்ணி
விண்ணுலக வாழ்க்கையே மெய் என்று சொல்லி
சென்று ஓராண்டாகி விட்டதே அம்மா
நீ எம் மீது வைத்த அன்பும் பாசமும்
உற்றார் உறவினர்கள் மீது வைத்த பண்பும் பழக்கங்களும்
இன்றுவரை எமக்கு நினைவு படுத்துகிறதே அம்மா!
நீ கைலாயத்தில் என்று எமக்குத் தெரியும்
ஊருக்கு உலகிற்கு தெரியாதே அம்மா!
ஆண்டு ஒன்றாகியும் ஆறவில்லையே எம் துயர்.

சிவப்பிலாவத்தை, அல்வாய் வடமத்தி, அல்வாய்.

கணவர்
பிள்ளைகள், மருமக்கள்,
(59791) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## ஐவர்

ரணதுங்க, எம்.கே.டி.எஸ். குணவர்த்தன மற்றும் எஸ்.பி. நாவின்ன ஆகியோரே இவ்வாறு நீக்கப்பட உள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆயினும் இந்த நடவடிக் கைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். எவ்வாறெனினும் இவர்களை மத்திய செயற்குழுவிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. (ற)

## சர்வதேச

கள் சுதந்திர முன்னணியில் 25 வேட்பாளர்கள் போதைப் பொருளுடன் தொடர்புபட்டிருப்பவர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.– என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.ம.சு.முன்னணியில் ஊழல், மோசடிக்காரர்களும் போதைப் பொருள் வியாபாரிகளும் இருப்பதாலோ என்னவோ, சிங்கள அரிச்சுவடியையே மாற்றி திருடன் என்பது சிங்களத்தில் உள்ள நல்ல சொல் எனக் குறிப்பிடுகின்றனர். இந்த முறையும் திருடர்களுக்கே வாக்களியுங்கள் என்றும், திருடர்கள்தான் இந்த நாட்டின் சிறந்த ஆட்சியாளர்கள் என்றும் கூறியுள்ளனர். ஆகவே, மக்கள் புத்திசாதுரியத்துடன் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு கூட்டமும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணயில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளின் தலைவர்களும் இணைந்து சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியிலிருந்து ஜனாதிபதி மைத்திரியை விலக்கிவிட்டு மஹிந்தவை தலைவராக்க முயற்சிக்கின்றனர்.

இதன்மூலம் சுதந்திரக் கட்சி இன்று பிளவுபட்டு கரைந்துபோயுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இன்று அர்ஜுன ரணதுங்க அத்தனகல பிரதேசத்தை விட்டுவிட்டு கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் போட்டியிடுவது இதற்கு ஓர் உதாரணம். – என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நிறைவடைந்த இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகத் தெரிவித்தே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சேர்ந்து இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை கொண்டுவந்தன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, போரின் பின்னர், போர்க் குற்றம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள தருஸ்மன் குழுவுக்கு அனுமதி வழங்கியிருந்தார். அவர்களின் அறிக்கைப்படி இறுதிப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், விடுதலைப்புலிகள் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுடன் ஐ.நா. 2003ஆம் ஆண்டு இத்தாலியின் தலைநகர் ரோமில் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திட்டது. அதாவது, மனித உரிமை மீறல் இடம்பெறும் நாடுகளில் மனித உரிமைகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்க சர்வதேச நீதிமன்றத்துக்கு அனுமதியுள்ளது. ஆனால், அதில் இலங்கை கையெழுத்திடவில்லை.

எனினும் அந்த உடன்படிக்கையின் 12ஆவது பிரிவுக்கு அமைய இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ஏற்பட்டால் விசாரணை செய்யமுடியும் என இலங்கை வாக்குறுதி வழங்கியது. அதனடிப்படையில்தான் தருஸ்மன் குழுவும் இங்கு விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது.

எனவேதான் சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையில் மனித உரிமைகள் ஏதும் ஏற்பட்டிருப்பின், அதற்கு தண்டனை வழங்கக்கூடிய உரிமை உள்ளது. அத்துடன், ஐ.நா. விசாரணை அறிக்கையில் யுத்தக் குற்றம் மாத்திரம் உள்ளடங்கவில்லை.

இதில் கடந்த அரசின் காலத்தில் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் சம்பவம் மற்றும் 215 மதஸ்தலங்கள் தாக்கப்பட்டுள்ளமை, கடந்த காலங்களில் ஊடகங்களைக் கட்டுப்படுத்தியமை, வெளிவிவகாரங்களைக் கையாண்ட விடயம், போரின் பின்னராக தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷவே சர்வதேச விசாரணைகளுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளார். சர்வதேச நியதிகளின்படி நாங்கள் ஐ.நா. விசாரணையைக் கையாளவுள்ளோம். – என்றார். (ற–சி)

## தேர்தல்

ஒரு வேட்பாளர் சார்பில் இரு பிரதிநிதிகள் தேர்தல் எண்ணும் நிலையங்களில் இருக்க அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற–ரி)

## நாட்டு

என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹோமாகம பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வடக்குத் தேர்தலை பகிஷ்கரிப்பதற்காக 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ எமில்காந்தனுக்கு பணம் வழங்கினார். மஹிந்த ராஜபக்ஷ யதார்த்தமான தலைவர் என பிரபாகரன் கூட அவரை பாராட்டினார். பிரபாகரனுடன் பேச்சு நடத்த அவர் அழைப்பு விடுத்தார். ஜெனிவாவில் பேச்சு நடத்த திறைசேரியில் இருந்து பணம் வழங்கினார். மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இதுவரை 70 ஆயிரம் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் 42 முறைப்பாடுகள் குறித்தே விசாரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் அவர்கள் நீதிமன்றத்தினூடாக குற்றவாளிகளாக அறிவிக்கப்படுவர். அதற்கு முன்னர் ஒகஸ்ட் 17 ஆம் திகதி ஐ.தே.க.வுக்கு வாக்களித்து மஹிந்த தரப்பைக் குற்றவாளிகளாக்கும் வாய்ப்பு மக்கள் நீதிமன்றத்திற்கு உள்ளது.– என்றார். (ற)

## இலங்கைக்கு

உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுதான் அவசியம் என்ற விடயத்தை வலியுறுத்தியுள்ளது. இது பற்றி ஜே.வி.பியின் நிலைப்பாடு என்னவென வினவியபோதே அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:–

சமஷ்டித் தீர்வுமுறை இந்த நாட்டுக்குப் பொருந்தாது என்ற நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பி. இருக்கிறது. வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு சமஷ்டிதான் தீர்வு என எவராவது கூறினால் அது தவறாகும். அதன்மூலம் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. மாறாக, வடக்கு மக்களின் பிரச்சினைகள் மேன்மேலும் அதிகரிக்கும்.

இந்த நாட்டில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவருக்குமே பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றுக்கான தீர்வுகளைத் தனித்தனியே தேடுவது பொருத்தமாக அமையாது. அனைவரும் ஒன்றாக கைகோர்த்துச் செயற்பட்டாலேயே தீர்வைநோக்கிப் பயணிக்கமுடியும். தேசிய ஒற்றுமை என்ற வழியினூடாக பயணித்தே தீர்வை தேடவேண்டும். – என் றார். (ற–சி)

## பாதுகாப்புக்கு

கொடிய போரில் இருந்து மீட்ட நாட்டை மீண்டும் அழிவுக்குக் கொண்டுசெல்லும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது. விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சமாதானம், நல்லிணக்கத்துக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. அது மட்டுமல்லாது, தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது.– என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அதிகமான அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதாகவும், சமஷ்டி அடிப்படையில் வடக்கு – கிழக்கை இணைந்த சுயாட்சியையும் வலியுறுத்தியுள்ளனர். அதுதவிர, எவ்வாறான குற்றச்சாட்டுகள் இருந்தாலும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும் மற்றும் 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததுபோன்று காணிகள் மீள வழங்கப்படவேண்டும் என பல்வேறு சர்ச்சைக்குரிய கோரிக்கைகள் அதில் உள்ளடங்கியுள்ளன.

விடுதலைப்புலிகள் ஆயுதத்தால் கோரிய விடயங்களை த.தே.கூ. அரசியல் ரீதியாக பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. இதனால், 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதில் என்ன பயன்?

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச அழுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள த.தே.கூ., இதன் மூலம் எமது இராணுவச் சிப்பாய்களைத் தண்டிக்க முயற்சிக்கின்றது. நாட்டுக்காகப் போராடிய இராணுவச் சிப்பாய்கள் சிறைக்குச் செல்லவும் நாட்டைப் பிரிக்கப் போராடிய விடுதலைப் புலிகளை விடுதலை செய்யவுமே அவர்கள் முயற்சிக்கின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க., த.தே.கூவுடன் இரகசிய ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ளதாக நாங்கள் தெரிவித்தோம். இதற்கமையவே அவர்கள் செயற்பட்டுவருகின்றனர். தற்போது வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டு மக்களுக்கு பதில் கூறவேண்டும். அது மட்டுமல்லாது, சம்பிக்க ரணவக்க மற்றும் ரத்ன தேரர் ஆகியோர் எதிர்ப்பை வெளியிடாமல் இருப்பது ஏன்?

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனி அலகு கோருகின்ற நிலையில், த.தே.கூ. வடக்கு, கிழக்கில் சுயாட்சி கோரிக்கை என்பன தற்போதுள்ள நிலையில் தேசிய பாதுகாப்புக்கும், நல்லிணக்கத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாகும்" – என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா,

தேசிய அரசு நிறுவுவதற்கே ஐ.தே.க. முயற்சிசெய்கின்றது. இந்நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் வெற்றிபெறுவோமாயின் எம்முடன் த.தே.கூ. பேச்சு நடத்தப்போவதில்லை என்பதை அனைவரும் அறிவார்கள். அவர்கள் பேச்சு நடத்துவது எல்லாம் ஐ.தே.கவுடனேயே. த.தே.கூ.வின் தேர்தல் விஞ்ஞாபனமானது பெரிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.– என்றார். (ற–சி)

## ஐவருக்கு எதிராக

கள சமரவீர, ரஞ்சன் ராமநாயக்க, நளின் பண்டார மற்றும் பிரபல பாடகர் சுனில் பெரேரா ஆகியோருக்கு எதிராகவே குறித்த நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சட்டத்தரணிகளின் ஊடகச் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

அதுகுறித்து அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:–

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நல்லாட்சி என்ற போர்வையில் ஆட்சிக்கு வந்த மைத்திரிபால அரசால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பல ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றனர்.

இவை தொடர்பில் நாங்கள் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரவுள்ளோம். குறிப்பாக, ரஞ்சன் ராமநாயக்க 2015 ஜுலை 11ஆம் திகதி பிரபல தொலைக்காட்சி நிறுவனமொன்றில் இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு மஹிந்தவுக்கும் போதைப் பொருள் வியாபாரத்துக்கும் தொடர்பிருப்பதாக தெரிவித்திருந்தார். அது மட்டுமல்லாது, அதற்கான ஆதாரமும் தன்னிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. ஆகவே, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடர்பில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 100 கோடி ரூபா நஷ்டஈடும் கோரப்பட்டுள்ளது.

2015 ஜுலை 8ஆம் திகதி தொலைக்காட்சி அரசியல் விவாதமொன்றில் கலந்துகொண்டிருந்த நளின் பண்டார, ராஜபக்ஷ குடும்பத்தின் காலை உணவுக்காக 94 லட்சம் செலவிட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். ஆகவே, இவரிடமிருந்தும் 100 கோடி ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளதுடன் அதனை 14 நாள்களுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்ட ரீதியாக அதனை சொத்துகளை விற்றாவது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று பிரபல பாடகர் சுனில் பெரேராவும் கடந்த ஜுலை 16ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் விவாதமொன்றில் மஹிந்தவை கொலையாளியாக சித்திரித்திருந்தார். அவரிடமும் 100 கோடி ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் இருவேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்த கருத்துகள் தொடர்பில் அவர்களிடமிருந்து முறையே ஆயிரம் மில்லியன் ரூபா மற்றும் 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்லாது, எதிர்வரும் காலங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தப்படவுள்ளதுடன் மஹிந்தவுக்கு எதிராக தெரிவிக்கப்படும் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்காக 20 பேர் கொண்ட சட்டத்தரணிகள் குழு தயாராகவுள்ளது.– என்று தெரிவிக்கப்பட்டது. (ற–சி)

## பாலியல்

'இன்னமும் முடிவுறாத போர் சித்திரவதை மற்றும் வன்முறையிலிருந்து தப்பியோர்' என்ற தலைப்பில் ஏற்கனவே வெளியான அறிக்கையின் தொடர்ச்சியாகவே இந்த அறிக்கை வெளியாகவுள்ளது. இலங்கையில் போரின் பின்னராக இடம்பெற்ற பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் மற்றும் வன்முறைகளில் 180 சம்பவங்களை மையப்படுத்தியே இந்த அறிக்கை அமையவுள்ளது.

வன்முறைகளிலிருந்து தப்பியவர்கள் குறிப்பாக வெள்ளை வானின் பிடியிலிருந்து தப்பி வந்தோரது சாட்சியங்களும் இந்த அறிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இடம்பெற்ற 8 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களையும் இந்த அறிக்கை தாங்கியுள்ளது. எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளமை அரசியல் களத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தப்போகின்றதென்பது தற்போது அனைவரதும் கேள்வியாக உள்ளது. (ற–ரி)

## ஐ.ம.சு.மு.

வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

'தேசத்துக்கு உயிர் கொடுப்போம்' என்ற தொனிப்பொருளில் பரப்புரைகளை முன்னெடுத்துள்ள ஐ.ம.சு.முக்கு தெற்கு மக்களைக் கவரும் வகையில் தேசிய பாதுகாப்புக்கு மற்றும் பெரும் பொருளாதார திட்டங்கள் அடங்கியதாக தேர்தல் விஞ்ஞாபனம் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

20 கட்சிகள், 100இக்கு மேற்பட்ட சிவில் அமைப்புகளின் பங்குபற்றலுடன் இன்றைய தினம் கொழும்பு ஹென்றி பெரடைஸ் மைதானத்தில் காலை 9 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை, ஊடகச் சுதந்திரம், உள்நாட்டு உற்பத்தியாளர்கள், விவசாயிகளுக்கான சலுகைகள் மற்றும் அரச ஊழியர்களைக் கவரும் வகையில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற–சி)

## தேர்தல் விதிகளை

டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நாடாளுமன்ற உறுப்புரிமை பெற்றிருந்தால் அந்த உறுப்புரிமையும் ரத்தாகும் என்று தெரிவித்துள்ள அவர், தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்கு லஞ்சம் வழங்குதல், ஏனைய வரப்பிரசாதங்கள் வழங்குதல், அரச நியமனம் வழங்கல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், அவற்றுடன் தொடர் புடையவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# தமிழகத்தில் கைதானவர் கருணாவின் ஆதரவாளரா?

## தமிழகப் பொலிஸார் விசாரணை

சென்னை, ஜூலை 27
தமிழகப் பொலிஸாரால் இராமநாதபுரத்தில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழரான கிருஷ்ணகுமார், கருணாவின் ஆதரவாளரா? என்பது தொடர்பில் கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழகம், இராமநாதபுரம் மாவட்[illegible] உச்சிப்புளி பகுதியில் கடந்த 20ஆம் திகதி பொலிஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சசிகுமார், ராஜேந்திரன் மற்றும் வேறு ஒருவர் கைது செய்யப்பட்டனர்.

சசிகுமார், ராஜேந்திரன் ஆகிய இருவரும் உச்சிப்புளி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் மற்றொரு நபரின் பெயர் கே.கிருஷ்ணகுமார் என்பதும் அவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் உதவியாளராக இருந்தவர் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளதாவது:-

கிருஷ்ணகுமாரைப் பற்றி திருச்சியில் அவர் தங்கியிருந்த இடத்தில் விசாரணை செய்த போது, அவர் பெயர் காந்தன் என்று தான் எங்களுக்குத் தெரியும். அவருடைய மனைவி, பிள்ளைகள் லண்டனில் இருப்பதாகச் சொல்வார்கள். அவருடன் வயதான ஒரு தாத்தாவும் தங்கி இருந்தார்.

ஆரம்பத்தில் காந்தன் எவரிடமும் அவ்வளவாகப் பேசமாட்டார். சிறிது நாள் கழித்து ஓட்டோ ஒன்று வாங்கி பாடசாலைகளுக்கு ஓட்டினார். கூடவே, கார் ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வெளி[illegible]டுகளில் இருந்துவரும் சுற்று[illegible]ப் பயணிகளை அழைத்துக் கொண்டு செல்வார் என அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரத்தில் கிருஷ்ணகுமாரிடம் விசாரணை நடத்திய பொலிஸார் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணகுமார். 39 வயதாகும் இவர், 15 வயதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பல்வேறு தாக்குதல்களில் முக்கியப் பங்குவகித்தவர்.

தளபதி கிட்டுவின் மரணத்துக்குப் பின்னர், பிரபாகரனுக்கு உதவியாளராக கிருஷ்ணகுமார் இருந்துள்ளார். கடந்த 2009-ம் ஆண்டு இலங்கையில் இறுதிக்கட்ட போர் முடிந்த பின்னர் திருச்சியில் வந்து தங்கி விட்டார். விசாரணை யின்போது, தான் ஒரு விடுதலைப்புலி என்பதைத் தவிர, வேறு எதையும் அவர் சொல்லவில்லை. உண்மையில் இவர் பிரபாகரனின் உதவியாளராக இருந்து பின்பு, கருணாவுடன் பிரிந்து சென்றிருக்க வேண்டும்.

காரணம், இறுதிக்கட்டப் போருக்குப் பின் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து சரணடைந்த போராளிகளைக்கூட இலங்கை இராணுவம் விட்டுவைக்கவில்லை. ஆனால், கிருஷ்ணகுமார் உரிய ஆவணங்களுடன் விமானம் மூலம் இந்தியா வந்துள்ளார் என்றால், அவர் நிச்சயம் கருணாவின் ஆதரவாளராகவே இருந்திருக்க வேண்டும்.

போர் உச்சத்தில் இருந்தபோது திருச்சி வழியாகத்தான் பலரும் தப்பிச்சென்றதாக ஒரு பேச்சும் உண்டு. ஏனெனில், திருச்சி விமான நிலையம் அப்போது முறைப் படுத்தப்படவில்லை. அதனால் இலகுவாக விடுதலைப்புலிகள் தமிழகத்தில் ஊடுருவியதாக அப்போது குற்றச்சாட்டுகள் எழுந்தன. கிருஷ்ணகுமார், யார் யாரை எல்லாம் சந்தித்தார் என விசாரித்து வருகிறோம். அவருக்கு உத்தர விட்ட நபர் யார் என்பதையும் விரைவில் கண்டு பிடிப்போம். - என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-ரி)

# நிதி விசாரணைப் பிரிவு வேட்டையாடும் பிரிவு

## இப்படிக் கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, ஜூலை 27
தான் நாட்டை விட்டு ஒருபோதும் தப்பி ஓடப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் ஒரு போதும் ஓடிப்போகவில்லை. நான் தோல்வியடைந்து மெதமுலனவுக்கு வந்தேன். கொழும்பில் இருக்கவில்லை, இங்கிலாந்து அல்லது பிரான்ஸிற்கும் செல்லவில்லை. நான் ஒரு போதும் உங்களை மறக்கவில்லை.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு வேட்டையாடும் பிரிவு என்று தான் சொல்ல வேண்டும். அதில் அனைவரையும் தாக்கினார்கள், பஸில் ராஜபக்ஷவையும் சிறைக்கு அனுப்பினார்கள். எனினும் அது ஒரு பிரச்சினை இல்லை. ஏன் என்றால் பஸில் ராஜபக்ஷ என்பவர் ஒரு அரசியல்வாதி. நானும் மூன்று மாதம் சிறையில் இருந்து வந்தவன். இன்று ரணில் கூறும் மூன்று வார்த் தைகளாக இருப்பது, ராஜபக்ஷக்களை அகற்ற வேண்டும், ராஜபக்ஷக்களை அழிக்க வேண்டும், ராஜபக்ஷக்களைப் புதைக்க வேண்டும். நாங்கள் போரில் வெற்றி பெற்றோம், நாட்டை அபிவிருத்தி செய்தமையினாலே எங்களை அழிக்க முயற்சிக்கின்றார்கள்- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## 29 ஆம் திகதி முதல் பிரத்தியேக வகுப்புகளுக்கு தடை

கொழும்பு ஜீலை 27
அடுத்த மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு பிரத்தியேக வகுப்புக்கள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் மற்றும் விடைகளை அச்சிடுதல் - அவற்றை விநியோகித்தல், கையேடுகள் அச்சிடுதல் - அதனை விநியோகித்தல், பிரத்தியேக வகுப்புக்கள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துவதற்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 29 ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகிறது. இந்த அறிவுறுத்தலை மீறும் மாண வர்கள், ஆசிரியர்கள், அல்லது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வர்று மீறுவோர் தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பரீ் சைகள் திணைக்கள்திற்கோ தகவல் வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ற-ரி)

## மஹிந்தவைப் பலிக்கடாவாக்கி தப்பிக்கொள்ள சிலர் முயற்சி

### சாடுகின்றார் ரோஸி சேனாநாயக

கொழும்பு, ஜூலை 27
மஹிந்த ராஜபக்ஷவை அரசியலில் பலிக் கடாவாக்கி வாசு, தினேஷ், விமல், கம்மன்பில ஆகியோர் நாடாளுமன்றம் வரமுயற்சிப்பதோடு மோசடிக் காரர்கள் விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் சிறுவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரோஸி சேனாநாயக.

குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக சுயவிமர்சனம் செய்யும் மஹிந்த மீண்டும் அரசியலுக்கு வந்தால் என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

புறக்கோட்டை சிறிகொத்தாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலா ளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ராஜாங்க அமைச்சர் ரோஸி சேனாநாயக இவ்வாறு தெரிவித்தார். (ற)

# மஹிந்த ராஜபக்ஷ துரோகி: ஆனாலும் காப்பாற்றினேன்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு


[illegible]ழும்பு, ஜூலை 27
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் முயற்சியைத் தடுத்து நிறுத்தியது தாமே என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

ரோம் உடன்படிக்கையில் தாம் கைச்சாத்திடாத காரணத்தால், இலங்கையின் இராணுவ வீரர்கள் எவரையும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு செல்ல முடியாது. அதற்குப் பதிலாக உள்ளக விசாரணைகளையே நடத்த முடியும். எனினும் 2009 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ-மூனுடன் இணைந்து கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்தநிலையில் குற்றமிழைக்கும் படைவீரர்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனை வழங்க முடியும்.



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்ய முனைந்த விடுதலைப்புலிகளின் அமைப்புடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியே மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதியானார்.

இது அவர், தமது கட்சித் தலைவிக்குச் செய்த துரோகமாகும். அடுத்தபடியாக தற்போது கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார். எனவே மக்களே கட்சிக்கு எதிராக அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்கூற வேண்டும்.

மத்திய வங்கியின் ஆளுநர் வெளிநாட்டவர் அல்ல. அவர் இலங்கையர்.

இந்தநிலையில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை அனைவரும் ஏற்றுக்கொள்ளமுடியும். இதன் காரணமாகவே அவரைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்பதில் உடன்படவில்லை.

முன்னைய ஆட்சியில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ, ஒரு வெளிநாட்டவர். அவர் பிற்பகுதியிலேயே இலங்கையின் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்ட இரண்டு உறவுக்காரர்களுக்கும் - இடையிலான பிரச்சினையே இதுவாகும். எனவே இது தொடர்பில் பேச்சு நடத்தி தீர்வு எட்டப்படும்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தம்மைச் சந்தித்த போது தாம் ராமேஸ்வரத்தைச் சேர்ந் தவர் என்றும் தமது உறவுக்காரர்கள் இலங்கையில் இருப்பதாகக் குறிப்பிட்டதையும் ரணில் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## சிலிண்டர்கள் ஏற்றிச் சென்ற வாகனம் சிக்கியது விபத்தில்

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று நு[illegible]வரெலியா ஹற்றன் பிரதான வீதி[illegible]ல் குடைசாய்ந்து விபத்துக்குள் [illegible]கியுள்ளது. இந்த விபத்து நேற்று[illegible]ன் தினம் மதியம் இடம்பெற்றுள்ள[illegible] குறித்த வாகனத்தின் சாரதியும் [illegible]ற்றொருவரும் படுகாயங்களுடன் [illegible]வரெலியா மாவட்ட வைத்திய சா[illegible]லயில் சேர்க்கப்பட்டுள்ளனர். [illegible]றியின் வேகத்தைக் கட்டுப்படுத்த மு[illegible]ாதகன் காரணத்தினாலேயே [illegible]த விபத்து நேர்ந்துள்ளதாக [illegible]ு ஓயா பொலிஸார் தெரிவித்துள்[illegible]ர். விபத்துத் தொடர்பான மே[illegible]க விசாரணைகளை நானுஓயா [illegible]ி ஸார் மேற்கொண்டு வரு கின்[illegible]ர். எரிவாயு சிலிண்டர் களில் எ[illegible]ு நிரப்பப்பட்டிருக்க வில்[illegible] தெரிவிக்கப்பட் டது. ([illegible])

# தேசியமட்டத்தில் சாதித்த கிளி.வீராங்கனைகளுக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தால் கௌரவிப்பு





கிளிநொச்சி, ஜுலை 26

தேசிய ரீதியில் நடைபெற்ற இளைஞர் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு சாதனையை நிலைநாட்டிய கிளிநொச்சியைச் சேர்ந்த இரு வீராங்கனைகள் கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றிய கண்டாவளை பிரதேசத்தைச் சேர்ந்த வி.கிறீஸ்ரீனா, உயரம் பாய்தலில் வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றிய பளைப் பிரதேசத்தை சேர்ந்த யோ.சுகிர்தா ஆகிய வீராங்கனைகளே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்ட அதேநேரம் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் சரத் சந்திர பால கலந்துகொண்டார். தவிர கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுத் துறை அதிகாரிகள், இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு துறை உத்தியோகத்தர்கள், வீராங்கனைகளின் பெற்றோர்கள் எனப்பலரும்நிகழ்வில்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம–21)

# கோலூன்றிப் பாய்தலில் தமிழ் மாணவனுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜுலை 27

இலங்கை மெய்வன்மை சம்மேளனத்தினால் நடத்தப்படும் 93 ஆவது மெய்வன்மைப் போட்டி கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக் கிழமை இடம் பெற்ற ஆண்களுக்கான (திறந்த) கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி பழைய மாணவனும் இலங்கை விமானப் படை வீரனுமான கணதீபன் 4.50 மீற்றர் உயரத்தினை கடந்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.(ம–23)



## செ்ன்.ஜேம்ஸ் உதைபந்தாட்ட தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை 27

அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் குருத்துவத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும், சென். ஜேம்ஸ் சனசமூக நிலையமும் இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இடம் பெற்ற முதலாவது காலிறுதி யாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி அணி மோதிக் கொண்டது.இதில்இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுஅரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

காலை 11 மணிக்கு இடம் பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணி மோதிக் கொண்டது. இதில்இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் நாரந்தனை அண்ணா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

மதியம் 12 மணிக்கு இடம்பெற்ற மூன்றாவது காலிறுதியாட்டத்தில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை ஞானொளி அணி மோதிக்கொண்டது. இதில் துறையூர் ஐயனார் அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றனர். (23)

# 10 ஓவர்களில் 155 ஓட்டங்களை ஊதித்தள்ளியது ஸ்ரார் ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 26

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி–20 தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் அல்பாதா அணியை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அல்பாதா அணியை எதிர்த்து ஸ்ரார் ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்பாதா அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக முபார் 36 ஓட்டங்களையும் ரம்சின் 29 ஓட்டங்களையும், சவ்கான் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி சார்பில் பிரியகாந் மற்றும் அமல் இருவரும் தலா 2 இலக்குகளையும் நில்ரன், அரவிந் மற்றும் அஜித் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



120 பந்துகளில் 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் ஈகிள்ஸ் அணி றோயின் விளாசலில் பத்துப் பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 3 இலக்கை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அதிகபட்சமாக றோய் 98 ஓட்டங்களையும் பிரியகாந் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அல்பாதா அணி சார்பாக சஜித், அலிம் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)

## இன்றைய மோதல்

### கலைவாணி வி.க. தொடர்

யாழ்ப்பாணம்,ஜுலை 27

தொண்டமானறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும், 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.அதில் இன்று திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதவுள்ளது. (23)

### யாழ்.மாவட்ட தாச்சி தொடர்

யாழ்ப்பாணம்,ஜுலை 27

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று திங்கட் கிழமை மாலை 6மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புதுமடம்வைகறை 'பி' அணியை எதிர்த்து நவற்குழி சரஸ்வதி அணி மோதவுள்ளது. இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து 'ஏ' அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதவுள்ளது. (23)

### ஆலடி சிந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஜுலை 27

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நாவற்குளிசரஸ்வதி அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து 'ஏ' மோதிக் கொண்டது. இதில் ஆலடி சிந்து 'ஏ' அணி 9:6 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (23)


## இறுதிக்குள் நுழைந்தது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 27

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு குறித்த கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும், 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கலை வாணி விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்று இடம் பெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது.



இந்த ஆட்டத்தில் ஆட்டநாயக னாக யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் ரகுகரன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜுலை27

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பாடசாலைகளின் பழைய மாணவர் அணிகளுக்கு இடையில் 6பேர் பங்கு பற்றும் 5பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுஞாயிற்றுக்கிழமை காலை, யாழ்.மத்தியகல்லூரிமைதானத்தில் இடம் பெற்றது. இதில் காலிறுதியாட்டம் ஒன்றில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து ஸ்கந்த ஸ்ரார் அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணியினர் 5பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கை இழத்து 61ஓட்டங்களைப் பெற்றது. இதில் நேபட், 22ஓட்டங்களையும்,ராதா 27 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பில் புருசோத்மன், தனுசன், துவரகன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்கு 62ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணியினர் ஏது வித இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. இதில் துவரகன் 37ஓட்டத்தினையும், துவிசன் 19ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (23)

## யங்கம்பன்ஸ்அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜுலை 27

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு குறித்த கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும், 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கலை வாணி விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து நியூட்டன்அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)



## உடற்தகுதி சிறப்பாக இருந்தால்
# உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுவேன்


சர்வதேச பூப்பந்தாட்ட உலகக்கிண்ணம் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், உடற்தகுதி தொடர்ந்தும் சிறப்பாக இருக்கும் பட்சத்தில் உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவேன் என்று இந்தியாவின் பிரபல பூப்பந்தாட்ட வீராங்கனை சாய்னா நேவால் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பூப்பந்தாட்டத் தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள சாய்னா நேவால் உலகக்கிண்ண பூப்பந்தாட்டத் தொடருக்காக தற்பொழுது தீவிர பயிற்சியில் ஈடுபட்டுவருகிறார். இந்த நிலையில் உலகக்கிண்ணத் தொடர் தொடர்பாக சாய்னா தெரிவித்ததாவது ஒரு தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் நிச்சயம் அதற்குரிய உடற்தகுதி மிகவும் அவசியம். உலகக்கிண்ணத் தொடரைக் கருத்தில்கொண்டு தொடர்ந்து கடின பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறேன். உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றுவது மட்டும் எனது இலக்கில்லை. அத்துடன் இணைந்த முறையில் மீண்டும் எனது முதலிடத்தைப் பிடிப்பேன்–என்றார். (ம)

# ஜோடியாகக் கலக்கிய அனுஸ்கா கோஹ்லி

இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோஹ்லி மற்றும் அவரது காதலியான அனுஸ்கா சர்மா இருவரும் ஒன்றாக பலநாடுகளுக்கும் சுற்றித் திரிந்தாலும் நிகழ்வுகளில் ஒன்றாக பங்கெடுப்பதைத் தவிர்த்து வந்தனர். ஆனால் மும்பையில் நடந்த விருது வழங்கும் விழாவில் முதல் முறையாக இருவரும் ஒன்றாகப் பங்கெடுத்துள்ளனர்.

இருவரையும் ஜோடியாகப் பார்த்த தொலைக்காட்சி நிறுவனங்கள் இருவரிடமும் நேர்காணல் எடுக்க முற்பட்ட வேளையில் அனுஸ்கா சர்மா கோஹ்லியை கட்டிய ணைத்து அவரின் பின்னால் வெட்கத்துடன் ஒளிந்துகொண்டாராம். பின்னர் கோஹ்லிதான் உடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தாராம். (ம)



# ஷரபோவா காதலில் பிரிவு

ரஷ்யாவை சேர்ந்த பிரபல ரென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவாவுக்கும் பல்கேரியாவைச் சேர்ந்த ரென்னிஸ் வீரரான டிமிட் ரோவுக்கும் இடையிலான காதலில் விரிசல் ஏற்பட்டு இருவரும் பிரிந் துள்ளனர்.

அழகான தோற்றத்தாலும், அபாரமான ஆட்டத்தாலும் உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்களை பெற்றிருந்த 28 வயதான ஷரபோவா தன்னைவிட 4 வயது குறைந்த 24 வயதுடைய டிமிட்ரோவை கடந்த இரண்டு வருட காலமாக காதலித்து வந்தார். டிமிட்ரோவும் ஷரபோவாவின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டியதையடுத்து இந்த வருடம் இருவரும் திருமணம் செய்யத்திட்டமிட்டிருந்தனர். இந்த நிலையில் இவர்களது காதலில் விரிசல் ஏற்பட்டு இருவரும் பிரிந்துள்ளனர். இதை டிமிட்ரோவ் உறுதிசெய்துள்ளார். (ம)



# ஒருநாள் அரங்கில் 10000 ஓட்டங்களை எட்டினார் டில்சான்

அம்பாந்தோட்டை, ஜூலை 27

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திலகரடண டில்சான் சர்வ தேச ஒருநாள் போட்டிகள் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கை வீரர் என்ற பெருமையை தனதாக்கினார்.

இலங்கை– பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று அம்பாந் தோட்டையில் நடைபெற்ற 5 ஆவது ஒரு நாள் போட்டியிலேயே டில்சான் இந்த மைல் கல்லை எட்டினார். இதுவரை 293 ஆவது இன்னிங்ஸ்களில் டில்சான் 10007 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன் சராசரி 40 ஆகும்.இதில் 22 சதங்களும் 45 அரைச்சதங்களும் அடங்கும்.


இவருக்கு முன்னர் இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான சனத் ஜெயசூரிய, குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்தன ஆகியோரே 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளனர்.

அத்துடன் திலகரட்ண டில்சான் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 11 ஆவது சர்வதேச வீரராவார். இதில் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 18 ஆயிரத்து 426 ஓட்டங்களைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

நேற்றைய போட்டியில் டில்சான் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



# கெய்லுக்கு அறுவைச்சிகிச்சை



மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி மன்னன் 35 வயதான கிறிஸ் கெய்லுக்கு நீண்ட காலமாக முதுகுவலி பிரச்சினை இருக்கிறது. இந்த நிலையில் முதுகுவலியை சரி செய்ய அவர் அறுவைச்சிகிச்சை செய்ய உள்ளார்.

தனது அறுவைச்சிகிச்சை தொடர்பாக கெயில் தெரிவித்ததாவது அடுத்த சில மாதங்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பிரதானமான தொடர்கள் இல்லை. எனவே எனது உபாதைக்கு அறுவைச்சிகிச்சை செய்ய இதுவே சரியான நேரம். அறுவைச் சிகிச்சை செய்த பின்னர் இரண்டு முதல் மூன்று மாதங்கள் கிரிக்கெட் விளையாட முடியாது. அனேகமாக டிசெம்பர் மாதம் மீண்டும் மைதானம் திரும்புவேன் என்றார். (ம)

# பார்சிலோனாவை வீழ்த்தியது மான்செஸ்டர் யுனைட்டெட்

மான்செஸ்டர் யுனைட்டெட்– பார்சிலோனா அணிகளுக்கிடையில் கலிபோர்னியா சந்தா கிலாரா லெவி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டெட் அணி 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டம் ஆரம்பித்து எட்டாவது நிமிடத்தில் ஆஷ்லி யங் அடித்த மூலையுதையை தலையால் முட்டி வெய்ன் ரூனி மான்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக முதலாவது கோலைப்பெற்றார். அவர் தனது கடைசி 8 ஆட்டங்களில் தனது முதலாவது கோலைப்பெற்றார். ஆட்டத்தின் ஒரு மணித்தியாலம் கடந்த நிலையில் மான்செஸ்டர் யுனைட்டெட் அணியின் டைலர் பிளக்கெட்சிடம் இருந்து பந்தைப் பெற்ற ஜெஸ்ஸி லிங்கார்ட் கோலினைப்பெற அவ்வணி 2–0 என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

இறுதியில் பார்சிலோனா அணியின் ரஃபின்கா ஒரு கோலைப் பெற்ற போதும், அட்னான் ஜனுசாஜ் பெற்ற கோலுடன் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி 3–1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. பார்சிலோனா அணியில் மெஸ்ஸியும், நெய்மரும் விளையாடாத நிலையில், லூயிஸ் சுராஸ் அடித்த பந்து இரு தடவை கோல்கம்பத்தில் பட்டு திரும்பியும், ஒரு முறை ஓஃப் சைட் கோல் எனவும் கணிக்கப்பட்டிருந்தது.

# நான் எப்போதும் முதல்வன் உசேன் போல்ட் பெருமிதம்

நான் எப்போதுமே நம்பர்–1 வீரர் தான் என உலகின் அதிவேக மனிதரான ஜமைக்காவின் உசேன் போல்ட் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற லண்டன் டைமன்ட் லீக் போட்டியின் 100 மீற்றர் ஓட்டத்தில் பங்கேற்ற உசேன் போல்ட் தகுதிச்சுற்றில் மட்டுமின்றி, இறுதிப் போட்டியிலும் 9.87 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடத்தைப் பிடித்தார். காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள போல்ட், அடுத்தடுத்து அசத்தலாக ஓடியிருப்பதன் மூலம் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள உலக தடகள போட்டிகளில் பங்கேற்கவிருக்கும் முன்னணி தடகள வீரர்களுக்கு பீதியை ஏற்படுத்தியிருக்கிறார். எனினும் போல்ட்டுக்கு அமெரிக்காவின் ஜஸ்டின் கேட்லின் கடும் சவாலாக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டன் டைமன்ட் லீக் 100 மீற்றர் ஓட்டத்தில் தகுதிச்சுற்று மற்றும் இறுதிச்சுற்றில் நீங்கள் சிறப்பாக செயல்பட்டிருக்கிறீர்கள். அது நீங்கள் இப்போதும் முதல் நிலை வீரராக இருப்பதை நிரூபித்திருக்கிறதா என போல்ட்டிடம் கேட்டபோது, நான் ஒருபோதும் நம்பர்–2 ஆக இருந்ததில்லை. நான் இப்போதும் முதல் நிலை வீரர்தான். தொடர்ந்து முதல்நிலை வீரராகவே இருப்பேன். ஓய்வுபெறும் வரை அந்த இடத்தைத் தக்கவைப்பதுதான் எனது திட்டம் என்றார்.


பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி குறித்துப் பேசிய போல்ட், பெய்ஜிங் போட்டிக்கு முன்னதாக தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டு எனது வேகத்தை அதிகரிக்க வேண்டும். ஓடத்தொடங்கும்போது சிறப்பாக ஓடிவிட்டால் சாதித்துவிட முடியும். நான் தொடர்ச்சியாக வேகமாக ஓடுவது அவசியம் என்றார்.

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட ஒழுங்கையில்(இரகுநாதையர் பஞ்சாங்கநிலையத்திற்கு அருகில்) 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு

(63416) தொடர்பு:- 077 222 5254

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**ஆங்கிலம்**

மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
தொழில்புரிவோர், பல்கலை புதுமுக மாணவர்கள்
மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கானது.

3 வது பயிற்சிநெறி ஆரம்பம் : 01.08.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607

SAAMSON
Experts in English Training

171, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

**வாக்காளர்களே விழிப்பாயிருங்கள்!**

**தேர்தல் கால சட்ட மீறல்களுக்கு உடந்தையாக இருக்காதீர்**

- புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் வழங்குதல், பெறுதல்
- வாக்காளர்களை கவரும் நோக்கில் அன்பளிப்புக்களை உதவித் திட்டங்களை வழங்குதல், பெறுதல்.
- அரச சொத்துக்களை பிரசாரத்துக்கு பயன்படுத்தல். வேட்பாளர்கள் பிரசார பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிப் படுத்தல்.
- போலி வாக்குச் சீட்டுக்களை பயன்படுத்தல்.
- ஊர்வலங்கள், ஒலிபெருக்கியை அனுமதியின்றி பயன்படுத்தல்.
- வேறொருவரின் வாக்காளர் அட்டையை வைத்திருத்தல்.
- வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு கேட்டல்.
- தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை வாகனத்தில் ஏற்றி இறக்குதல்.
- வாக்களிக்க விடாமல் தடுத்தல், விரட்டுதல்.
- வாக்காளர் அட்டை விநியோகத்துக்கு ஊறு விளைவித்தல்.

அனுசரணை:
கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்.

# இலங்கை ஆறுதல் வெற்றி
# தொடர் பாகிஸ்தான் வசம்

ஐந்தாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 165 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடியது. இதில் முதல் நான்கு ஆட்டங்களில் மூன்றில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 3–1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நேற்று பகலிரவு ஆட்டமாக அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு வலுவான ஆரம்பத்தை வழங்கினர் டில்சான் குசல் பெரேரா ஜோடி. இதில் குசல் பெரேரா ஒருநாள் அரங்கில் தனது இரண்டாவது சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் அரைச்சதம் கடந்த டில்சான் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து குசால் பெரேரா 109 பந்துகளில் (9 பவுண்டரி, 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 116 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த திரிமன்னே 30, சண்டிமல் 29 ஓட்டங்களை தமது பங்குக்கு எடுத்து ஆட்டமிழந்தனர். எனினும் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த மத்தியூஸ் சிறிவர்தன ஜோடியின் இணை பிரியாத ஆட்டத்தின் மூலம் இலங்கை 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 368 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மத்தியூஸ் 70 ஓட்டங்களையும் சிறிவர்தன 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



பதிலுக்கு 50 ஓவர்களில் 369 ஓட்டங்கள் என்ற கடின இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சேனநாயக்காவின் சுழலில் சிக்கி 37.2 ஓவர்களில் 203 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. இதன் மூலம் இலங்கை அணி 165 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்று ஆறுதலடைந்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் ஹபீஸ் 37 ஓட்டங்களையும் அன்வர் அலி 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சேனநாயக்க 3 விக்கெட்டுக்களையும் திஷார பெரேரா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இத் தொடரை பாகிஸ்தான் அணி 3–2 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக குசல் பெரேராவும் தொடர் நாயகனாக பாகிஸ்தான் அணியின் மொகமட் ஹபீஸீம் பெற்றனர்.

SHAMROCK யாழ்
A/L 2016, 2017
பொருளியல்
P. பிரதாப் (B.B.A)
தமிழ்
S.சிவா (M.A)
(63415)

**நாய்க்குட்டியை காணவில்லை**

மெல்லிய சாம்பல் நிறமும் வெள்ளையும் கலந்த சாதாரண இன நாய்க்குட்டியை 21.07.2015 செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியிலிருந்து ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் 4 ஆம் சந்திக்கும் இடையில் காணவில்லை.
யார் வீட்டிற்காவது அது வந்திருந்தால் அதனை கொண்டு வந்து தருபவர்களுக்கு சன்மானமாக 5000/= வழங்கப்படும்.
(63412) தொடர்பு :- 077 303 9494

**A/L 2015 கருத்தரங்கு**

சகலதுறை மாணவர்களுக்குமான
பொதுச்சாதாரணப் பரீட்சைக்கு
நாளை செவ்வாய் (28/7) காலை 8.30-12.30 மணிவரை ரூபா 250 பெறுமதியான வழிகாட்டி நூலை பெற்று கலந்துகொள்ள முடியும்.
(c 18161) D.M.I ஆரியகுளம் சந்தி.

**பாராளுமன்றத் தேர்தல் – 2015**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நாளைய
தலைமுறையின்
நம்பிக்கை மிகு
எதிர்காலத்துக்கான
உங்கள் வாக்கு

5 X

**ஈ.சரவணபவன்**
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.